பக்கங்கள்: முப்பத்து இரண்டு + II

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 18 ஞாயிற்றுக்கிழமை (01.05.2011)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 156



03

வடக்குக்குத் தலைவர் வெற்றோரி



06

வில்லியம் - கேற் திருமண விழா



16

சிறுவர்கள் தொழிலாளராவதை தடுக்க வேண்டும்



25

கே.பி. புதிய அவதார்

# ஐ.நா. பாதுகாப்புச் சபை நாடுகளுக்கு நிலைமையை விளக்க அரசு தயார்

## சிக்கலைச் சமாளிக்க அதிதீவிர முயற்சி

கொழும்பு, மே 1

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கைக்கு இதுவரை உத்தியோகபூர்வமாகப் பதிலளிக்காத இலங்கை அரசு, அந்த அறிக்கைக்கு எதிரான இராஜதந்திர நடவடிக்கைகளைக் கொழும்பு தீவிரப்படுத்தி உள்ளது. அதன் ஒரு பகுதியாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் வீற்றோ அதிகாரம் கொண்ட 5 நாடுகளுக்கும், நிரந்தர உறுப்பினர்கள் அல்லாத 10 நாடுகளுக்கும் தனது நிலைப்பாட்டை விளக்கி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடிதம் அனுப்பி வைக்கவுள்ளார்.

நிபுணர் குழுவின் அறிக்கை அடிப்படைகள் அற்றது; தவறான உள்ளீடுகளால் உருவாக்கப்பட்டது என்று கூறி அதனை அடியோடு நிராகரித்துள்ளது அரசு. எனினும், இந்த அறிக்கையால் உலக அரங்கில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று அது அஞ்சுகிறது. எனவே, அதனைச் சமாளிப்பதற்குத் தேவையான ராஜதந்திரப் போரை (31 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.நா. அறிக்கையை கூட்டமைப்பு ஆதரித்தாலும் பேச்சுத் தொடரும்

## அமைச்சர் வாசுதேவ கூறுகிறார்

கொழும்பு, மே1

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்று ஆதரவு தெரிவித்துள்ளபோதும், கூட்டமைப்பினருடன் அரசு நடத்திவரும் பேச்சுக்கள் தடையின்றித் தொடரும்.

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாடு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்தபேட்டி ஒன்றிலேயே அவர் இப்படிக் கூறினார். (29 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசைக் கண்டித்து இந்திய நகரங்களில் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, மே 1

இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டை வலியுறுத்தி இந்தியாவின் பிரதான நகர் எங்கும் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அறிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் செயலாளர் ஜி.இராமகிருஷ்ணன் இது தொடர்பான அறிவிப்பை நேற்று விடுத்துள்ளார்.

இலங்கையில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டமைக்கு இலங்கை இராணுவம் பொறுப்பு என ஐ.நாவின் நிபுணர் குழு அறிவித்துள்ளது. இது தொடர்பாகக் கட்சியின் நிறைவேற்றுக் குழு ஆராய்ந்து, போர்க்குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் (29 ஆம் பக்கம் பார்க்க)

# மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கலானதால் மேயருடன் விவாதம் சாத்தியம் ஆகாது

## விசாரணையில் பாதிப்பு வரும் என்கிறார் விந்தன்

யாழ்ப்பாணம், மே1

யாழ். நகரில் அமைக்கப்படவுள்ள ஐந்து மாடிக்கட்டடம் தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மாநகர மேயருடன் பகிரங்க விவாதத்தை உடன் நடத்த முடியாது.

இவ்வாறு யாழ். மாநகரசபையின் உறுப்பினர் கே.என்.விந்தன் கனகரத்தினம் நேற்று அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

யாழ். நகரின் மத்தியில் (31 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு மே தினப் பேரணிகள், கூட்டத்தில் ஐ.நாவைக் குறிவைத்து 'போர் முழக்கம்'

## நகரசபை மைதானத்தில் ஜனாதிபதி தலைமையில் கூட்டம்

கொழும்பு, மே 1

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையைக் கண்டித்து இன்றைய மேதினப் பேரணியில் ஆளும் கட்சி, அரசின் பங்காளிக்கட்சிகள் அனைத்தும் போர்க் கொடி தூக்கத் தயாராகிவிட்டன.

இன்றைய இந்தப் பேரணிகளிலும் கூட்டத்திலும் ஐ.நாவைக் காரசாரமாக - ஆக்ரோஷமாகக் கண்டிக்கும் வகையிலான கோஷங்கள் எழுப்பப்படும். அதேவேளை, கடுமையான எதிர்ப்புச் சுலோகங்கள், வாசகங்கள் இடம்பெறும் என்றும் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

இறுதியில் நடைபெறும் ஆளும் கட்சி மேதினக் கூட்டத்தில் அரசியல் வாதிகள் ஐ.நாவைச் சாடி அனல் கக்கும் உரைகளை ஆற்றுவர் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (29 ஆம் பக்கம் பார்க்க)

# தொடரும் மழையால் நால்வர் உயிரிழப்பு

கொழும்பு, மே 1

நாடுமுழுவதும் தொடரும் மழை காரணமாக நால்வர் உயிரிழந்தனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

நாட்டின் பெரும் பாகங்களில் பெய்த கடும் மழை காரணமாக நால்வர் பலியாகினர். 21 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்தினபுரி மாவட்டத்தில் 227 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கை விவகாரத்தில் சர்வதேசம் தலையிட்டு குழப்பம் ஏற்படுத்தக்கூடாது

## 'புத்திமதி' கூறுகிறது சீனா

பீஜிங், மே 1

இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகம் ஆதரவு வழங்க வேண்டும். இந்த விவகாரத்தில் தேவையில்லாமல் தலையிட்டு குழப்பத்தை ஏற்படுத்தக்கூடாது.

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஹொங்லீ மேற்கண்டவாறு 'புத்திமதி' தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்நாட்டுப்போர் தொடர்பான பிரச்சினைகள் குறித்து சிறிலங்கா அரசுத் தலைவர்களும், மக்களும் பொருத்தமான வகையில் (29 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழின அடையாளத்தைப் பாதுகாக்க அனைவரும் அணி திரளவேண்டும்

## மேதினச் செய்தியில் மாவை அழைப்பு

யாழ்ப்பாணம், மே 1

இன்றைய மே நாளில் ஒட்டுமொத்த தொழிலாளர், விவசாயிகள் என உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளையும் அதற்கு மேலாக மனித உரிமை, வாழ்வுரிமைக்காகவும் தமிழ் இன அடையாளத்தையும் பாதுகாக்கவும் நாம் ஒன்றுதிரண்டு உழைக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மே தினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- (31 ஆம் பக்கம் பார்க்க)

எந்தவொரு சிங்கர் பிளஸ், சிங்கர் காட்சியறைகளிலும் நீங்கள் கொள்வனவு செய்யும் கைணடிக் சப்பாரி (Kinetic Safari) மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7000 பெறுமதியான DVD பிளேயர் இலவசம்.





இன்றே விரையுங்கள்

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4389

கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 021 224 0555

ஆலடிச் சந்தி, மானிப்பாய். 021 225 5343

பருத்தித்துறை வீதி, நெல்லியடி. 021 226 4937

கண்டி வீதி, சாவகச்சேரி. 077 9508957

சிங்கர் – யாழ் மண்ணின் பாரம்பரியத் தோழன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### விலகினார் ஹடின்

கொல்கத்தா அணியில் இடம் பெற்றுள்ள ஆஸ்திரேலிய வீரர் பிரட் ஹடினுக்கு கைவிரலில் காயம் ஏற்பட்டுள்ளதால் அவர் ஐ.பி.எல். போட்டியிலிருந்து விலகியுள்ளார்.

டெல்லியில் வியாழக்கிழமையன்று ஹடினின் கைவிரலை 'ஸ்கேன்' பரிசோதனைக்கு உட்படுத்திய போது இந்தக் காயம் தெரியவந்துள்ளது. சில நாள்களுக்கு முன்பு பங்களாதேஷுக்கு எதிராக ஆஸ்திரேலிய அணி விளையாடிய ஒருநாள் தொடரின் போது அவருக்கு காயம் ஏற்பட்டுள்ளது. அப்போது அவர் சிகிச்சை பெற்றாலும், காயம் முழுமையாக குணமடையவில்லை என்பது இப்போது தெரிய வந்துள்ளது. இதனால் அவர் ஆஸ்திரேலியா சென்று அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளவுள்ளார். (15)



திவாரி

# சேவாக்கின் அதிரடியில் மடிந்தது கொச்சி

-டிலீப்-

அதிரடிகளில் வேடிக்கை காட்டினார் சேவாக். கலக்கினர் பந்து வீச்சில் மோர்னி மோர்கல் - வன்டமேர்வ். வெற்றி நீண்ட ஆட்டத்தின் பின் கிடைத்தது டெல்லிக்கு.

36 ஆவது ஐ.பி.எல் ஆட்டம். சேவாக்கின் தலைமையில் டெல்லி, ஜெயவர்த்தன தலைமையில் கொச்சி பலப் பரீட்சை நடத்தின கொச்சியில். முதலில் நடந்தது நாணயச் சுழற்சி. வென்றார் சேவாக். முடிவு துடுப்பாட்டம்.

வோர்னர் - சேவாக் ஆரம்பத் துடுப்பாட்டம். ஆர்.பி சிங் அமர்களமாய் வீசி முடித்தார் முதலாவது ஓவர். சிறீசாந் வீச அழைக்கப்பட்டார் இரண்டாவது ஓவர். வீழ்த்தப்பட்டது இரண்டு விக்கெட்டுக்கள். வோர்னர் - நமன் ஒஜா வெளியேறியவர்கள். மறுமுனையில் ஆடித்தீர்த்தார் சேவாக். சரிவுகளைப் பொருட்படுத்தாது அதிரடிகளை காட்டினார் சேவாக்.

மூன்றாவது ஓவருக்கு இணைப்பாட்டம் பெறப்பட்டது 31 ஓட்டங்கள். வேணுகோபால் ராவ்வின் பங்கு ஒரு ஓட்டம். ஜடேஜா வீழ்த்தினார் ராவ்வின் விக்கெட்டை. 35 ஓட்டங்களில் இழந்தது மூன்று விக்கெட்டுக்கள். சேவாக்கின் அதிரடி ஓய்வில்லாமல் தொடர்ந்தது. பவுண்டரிகள் தவறாது ஓவருக்கு எல்லைக்குச் சென்றது.

யோகேஸ் நாகர் ஆட்டம் அமைதி. ஆட்டத்தின் 13 ஆவது ஓவர். வீசினார் ஜடேஜா. பறந்தது இரண்டு சிக்ஸர்கள். வெளுத்தவர் சேவாக். முடியவில்லை சேவாக்கின் அதிரடியாட்டம். 15 ஆவது ஓவர் வீசினார் வினய்க்குமார். எல்லையைத் தாண்டியது பந்து. பெறப்பட்டது ஆறு ஓட்டங்களுடன். சேவாக் எட்டினார் அரைச்சதம். அதற்காய் எடுத்தது 36 பந்துகள். அடுத்த பந்தில் விழுந்தது யோகேஸ் நாகர் விக்கெட். ரன் அவுட்டில் வெளியேற்றம்.

அரைச் சதம் கடந்தும் அதிரடிகள் தொடர்ந்தார் சேவாக். 16 ஆவது ஓவர் வீசினார் அகில். சிக்ஸர், பவுண்டரி வெளுத்தார் சேவாக். ஆட்டத்தை இறுதியில் அடக்கினார் வினய்க் குமார். 47 பந்துகளில் 80 ஓட்டங்கள் பெற்றார். 5 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகள் அடக்கம். இறுதியில் இருபது ஓவர்களில் பெறப்பட்டது 157 ஓட்டங்கள். ஏழு விக்கெட்டுக்கள் இழந்தது.

பதிலாட்டம் தொடங்கிய பஞ்சாப்பை பந்தாடியது டெல்லி. ஒற்றை ஓட்டங்களுடன் முடிந்தது அவர்களின் கணக்கு. பெற்றது 28 ஓட்டங்கள். இழந்தது 3 விக் கெட்டுக்கள். மத்தியவரிசையில் வந்த மஹேல முடிந்தவரை போராட்டம். நிதான ஆட்டம் மஹேலவின் வெளிப்பாடு. 50 ஓட்டங்களில் சரிந்தது அடுத்த விக்கெட். 28 பந்துகளில் 18 ஓட்டங்கள் மஹேலவின் பங்களிப்பு. ஜடேஜா - ஹொட்ஜ்,மத்தியவரிசையில் பலமான ஆட்டம். இருந்தும் எட்டவில்லை வெற்றி இலக்கை.

18.5 பந்துகளில் இழந்தது சகல விக்கெட்டுக்களையும். பெற்றது 119 ஓட்டங்கள். தோல்வி 38 ஓட்டங்களால் எட்டப்பட்டது கொச்சிக்கு. பந்து வீச்சில் அசத்தல் மோர்கல். வீசியது 4 ஓவர்கள். கொடுத்தது 18 ஓட்டங்கள். வீழ்த்தியது 3 விக்கெட்டுக்கள். வன்டமேர்வும் கைப்பற்றினார் மூன்று விக்கெட்டுக்கள்.

அதிரடியால் அரங்கை அதிர வைத்த சேவாக் ஆட்டநாயகன்.



சேவாக்

## அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 08 | 05 | 03 | 0 | 0 | + 0.530 | 10 |
| மும்பை இந்தியன்ஸ் | 07 | 05 | 02 | 0 | 0 | + 0.498 | 10 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 08 | 04 | 03 | 0 | 1 | - 0.052 | 09 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 08 | 04 | 03 | 0 | 1 | - 0.202 | 09 |
| சென்னை சூப்ப கிங்ஸ் | 07 | 04 | 03 | 0 | 0 | + 0.143 | 08 |
| டெக்கான் சார்ஜஸ் | 07 | 03 | 04 | 0 | 0 | + 0.194 | 06 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 08 | 03 | 05 | 0 | 0 | - 0.031 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 06 | 03 | 03 | 0 | 0 | - 0.276 | 06 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 08 | 03 | 05 | 0 | 0 | - 0.853 | 06 |
| புனே வாரியர்ஸ் | 07 | 02 | 05 | 0 | 0 | - 0.066 | 04 |

# கொல்கத்தாவிடம் பணிந்தது பஞ்சாப்

-அருண்மொழி-

ஐ.பி.எல்லின் 37 ஆவது ஆட்டத்தில் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியும், கம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா அணியின் தலைவர் கம்பீர் முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தார்.

இதன்படி கில்கிறிஸ்ட் - வல்த்தாட்டி ஆகியோர் பஞ்சாப் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட வல்த்தாட்டி ஆரம்பத்திலிருந்தே நிதானமாக ஆடினார். கில்கிறிஸ்ட் தனது வழமையான அதிரடிப் பாணியில் ஆடி ஓட்டங்களைக் குவித்தார். ஐந்தாவது ஓவரில் யூசுப் பதானின் பந்து வீச்சில் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அடுத்து வந்த மார்ஷ்ஷும் 5 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டாக' 40 ஓட்டங்களுக்கு இரண்டாவது விக்கெட்டையும் இழந்தது.

தொடர்ந்து அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த கில்கிறிஸ்ட் அப்துல்லாவின் பந்து வீச்சில் 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். 3 பவுண்டரிகளும், ஒரு சிக்ஸரும் இவரால் அடிக்கப்பட்டன. தொடர்ந்து அபிஷேக் நாயரும் ஓட்டமெதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார். 9.2 பந்து வீச்சுக்களில் 53 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலைக்குள் மாட்டுப்பட்டது பஞ்சாப்.

இருந்தும் டினேஸ் கார்த்திக் - டேவிட் ஹஸி ஆகியோர் ஐந்தாவது விக்கெட்டுக்காக மிகச் சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கினர். 33 ஓட்டங்களைப் இணைப்பாட்டமாக பெற்ற நிலையில் டேவிட் ஹஸி 15 ஓட்டங்களுடன் இக்பால் அப்துல்லாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். மறு முனையில் டினேஸ் கார்த்திக் சிறப்பான முறையில் தனது ஆட்டத்தைத் தொடர்ந்தார்.

ஹஸி வெளியேற்றத்துக்காக உள்நுழைந்த பிபுல் சர்மா சிறப்பாக ஓட்டச் சேகரிப்பில் ஈடுபட்டார். சிறப்பாக ஆடிய டினேஸ் கார்த்திக் 42 பந்துகளில் 42 ஓட்டங்களுடன் 'ரன் அவுட்டில்' வெளியேறினார். இறுதியில் 119 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

பந்து வீச்சில் இக்பால் அப்துல்லா நான்கு ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கியது கொல்கத்தா. இருந்தும் ஆரம்பத்திலேயே கொல்கத்தாவுக்கு அதிர்ச்சி கொடுத்தது பஞ்சாப். கொல்கத்தா அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான கலிஸ் ஒரு ஓட்டத்துடன் பகாட்டின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். மோர்கன் - கம்பீர் இணைந்து இரண்டாவது விக்கெட்டுக்காக ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டனர். அதிரடியாக ஆடிய மோர்கன் 15 பந்துகளில் 28 ஓட்டங்களைக் குவித்தார். பகாட்டின் பந்து வீச்சில் இறுதியில் ஆட்டமிழந்து வெளியேறினார். இவரது ஓட்டக் குவிப்பில் 6 பவுண்டரிகள் அடங்கின. பின்னர் கம்பீருடன் இணைந்தார் திவாரி. இருவரும் சிறப்பான ஆட்டத்தின் மூலம் அணியின் வெற்றியை உறுதி செய்தனர். இறுதிவரை ஆட்டமிழக்காமல் இந்த ஜோடி கொல்கத்தாவுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தது. 17.2 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

கம்பீர் 44 பந்துகளில் 45 ஓட்டங்களையும் திவாரி 41 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பகாட் 4 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக இக்பால் அப்துல்லா தெரிவு செய்யப்பட்டார்.

## சேவாக் களத்தில் நிலைக்க வேண்டும்

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் கவாஸ்கர் கூறியதாவது:

டெல்லி அணி வெற்றி, தோல்வி என்று மாறி மாறி பயணம் செய்கின்றது. அந்த அணியின் வெற்றி தொடர வேண்டும் என்றால் தொடக்க வீரர்களான சேவாக் - வோர்னர் 15 ஓவர்கள் வரை களத்தில் நிற்க வேண்டும். அப்போது தான் அதிக அளவு ஓட்டங்கள் குவிக்க முடியும். அவர்கள் இருவரும் நீண்ட நேரம் களத்தில் நின்றதால் தான் ஒரு ஆட்டத்தில் 21 சிக்சர்கள் விளாசிய சாதனை ஆட்டத்தை பார்க்க முடிந்தது. அப்படிப்பட்ட ஆட்டம் தொடர சேவாக் நீண்ட நேரம் க்ளத்தில் இருப்பது அவசியம். டெல்லி அணி தற்போது மீண்டும் தோல்வி பாதையில் செல்கிறது. இதற்கு அதிக எதிர்பார்ப்புதான் காரணம் இவ்வாறு அவர் கூறினார். (15)

## இன்றைய ஆட்டம்

- ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர் புனே வாரியர்ஸ் (மாலை 4 மணி)
- சென்னை சூப்ப கிங்ஸ் எதிர் டெக்கான் சார்ஜஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- ஹோக்லி – பெங்களூர் (7 ஆட்டங்கள் 294 ஓட்டங்கள்)
- சேவாக் – டெல்லி (8 ஆட்டங்கள் 288 ஓட்டங்கள்)
- சச்சின் – மும்பை (7 ஆட்டங்கள் 276 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (7 ஆட்டங்கள் 17 விக்கெட்டுக்கள்)
- இக்பால் அப்துல்லா – கொல்கத்தா (8 ஆட்டங்கள் 10 விக்கெட்டுக்கள்)
- வோர்ன் – ராஜஸ்தான் றோயல்ஸ் (7 ஆட்டங்கள் 10 விக்கெட்டுக்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹசானுக்குப் பதிலடி தொடர்கின்றது...

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபடுவதாக முன்னாள் அணித் தலைவர் ஹசான் திலகரட்ன நேற்று முன்தினம் அதிரடியான குற்றச்சாட்டை கூறினார்.

1992 ஆம் ஆண்டில் இருந்தே இலங்கை வீரர்கள் சூதாட்டாத்தில் ஈடுபடுவதாகவும், இன்று புற்றுநோய் போல் பரவி இருப்பதாகவும் கூறினார். அத்தோடு சூதாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை வீரர்களின் பெயர் விவரத்தை விரைவில் தெரிவிப்பேன் என்றும் கூறி இருந்தார்.

இந்த சூதாட்ட குற்றச்சாட்டு மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியது. இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சர் இதை மறுத்து இருந்தார். திலகரட்னவின் இந்தக் குற்றச்சாட்டு குறித்து இலங்கை அணியின் தற்போதைய வீரரும், முன்னாள் அணித் தலைவருமான ஜெயவர்த்தன கருத்து தெரிவித்து உள்ளார். அவர், திலகரட்ன தான் கூறிய சூதாட்ட குற்றச்சாட்டை முதலில் ஆதாரத்துடன் நிரூபிக்க வேண்டும். யார் வேண்டுமானாலும் எதையும் கூறலாம். குற்றச்சாட்டை கூறும் போது அதற்கு ஆதாரம் இருக்க வேண்டும்.

திலகரட்ன கூறிய சூதாட்ட குற்றச்சாட்டை தொலைக்காட்சியில் பார்த்துத் தான் நான் தெரிந்து கொண்டேன் என்று தெரிவித்தார். (15)



# வடக்குக்குத் தலைவர் வெற்றோரி

எதிர்வரும் ஜூலை மாதம், இலங்கையில் பிராந்திய அணிகளுக்கிடையிலான 20 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில் வடக்கு அணிக்கு நியூஸிலாந்தின் டானியல் வெற்றோரியும் கிழக்கு அணிக்கு பாகிஸ்தானின் சயிட் அப்ரிடியும் தலைமை தாங்கவுள்ளனர்.

இலங்கை ரி-20-பிரிமியர் லீக் (SL-ரி-20-PL) எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தச் சுற்றுப்போட்டி 'சமர்செட் எண்டர்டெய்ன்மன்ட் வென்சர்ஸ்' எனும் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது. 7 அணிகள் இந்தப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

ஜூலை 15 ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தச் சுற்றுப் போட்டி 18 நாட்களுக்கு நீடிக்கும். மொத்தமாக 24 போட்டிகள் நடைபெறும். இறுதிப் போட்டி ஆர்.பிரேமதாஸ அரங்கில் நடைபெறும்.

இந்தப் போட்டிகளில் மேற்கு அணிக்கு திலகரட்ன டில்ஷான் தலைமை தாங்கவுள்ளார். கந்துரட்ட (மலையக) அணிக்கு குமார் சங்கக்காரவும், றுகுணு (தெற்கு) அணிக்கு சனத் ஜெயசூரியவும் தலைமை தாங்குவர். வயம்ப (வடமேற்கு) அணிக்கு மஹேல ஜெயவர்தனவும், ஊவா அணிக்கு சமிந்த வாஸும் தலைமை தாங்குவர்.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு பிராந்திய அணிகளுக்கு வெளிநாட்டு வீரர்கள் அணித்தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்படி வடக்கு அணிக்கு நியூஸிலாந்து அணித்தலைவர் டானியல் வெற்றோரி தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்குப் பிராந்திய அணிக்கு பாகிஸ்தான் அணித்தலைவர் சயிட் அப்ரிடி தலைமை தாங்கவுள்ளார்.

ஒவ்வொரு பிராந்திய அணியிலும் 5 வெளிநாட்டு வீரர்கள் பதிவு செய்யப்படலாம். ஆனால் ஒவ்வொரு போட்டியின்போதும் ஒரு அணியில் 4 வெளிநாட்டு வீரர்கள் மாத்திரமே விளையாட முடியும். இந்தப் போட்டிகளில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்க இலங்கை கிரிக்கெட் சபையும் தேசிய கிரிக்கெட் தேர்வாளர்களும் இணங்கியுள்ளனர். சுமார் 70 இலங்கை கிரிக்கெட் வீரர்கள் இப்போட்டிகளில் விளையாட பதிவு செய்யப்படவுள்ளனர்.

இந்தப் போட்டிகளில் விளையாட பாகிஸ்தான் அணியைச் சேர்ந்த ஏறத்தாழ அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்படவுள்ளது. அத்துடன் மேற்கிந்திய அணியின் கிறிஸ் கெயில், டுவைன் பிராவோ, டெரன் பிராவோ, இந்திய அணியின் இர்பான் பதான், யூசுப் பதான், தென்னாபிரிக்காவின் ஹேர்சல் கிப்ஸ், டேவிட் வோர்னர். ஷோன் டெய்ட் ஆகியோர் இந்தப் போட்டிகளில் விளையாடவுள்ளனர்.

சுழற்பந்துவீச்சு ஜாம்பவான் முத்தையா முரளிதரன் இந்தப் போட்டியில் விளையாடுவாரா என்பது இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

2011 கிண்ணத் தொடரில் சுற்றுப்போட்டி முகாமையாளராக பணியாற்றிய மிலிந்த் ரெஜி இலங்கை பிரிமியர் லீக் தொடரில் கிரிக்கெட் தொடர்பான சகல விடயங்களுக்கும் பொறுப்பாளராக இருப்பார். இவர் இந்தியாவின் ரஞ்சி கிண்ணப் போட்டிகளில் மும்பை அணித்தலைவராக விளங்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

# இந்தியா - பாகிஸ்தான் போட்டிகள் தொடர விருப்பம்

மொஹாலியில் நடந்த இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டியைப் போல் மேலும் தொடர வேண்டும் என்று விரும்புவதாக ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியில் அவர் கூறியிருப்பதாவது, இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் போட்டி இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கிடையேயான உறவை வலுப்படுத்தும் கருவியாக திகழ்கின்றது.

மொஹாலியில் நடந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டியில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதியதை இருநாட்டு தலைவர்கள் மட்டுமல்லாது உலகமே அதைப் பார்த்தது. இந்தப் போட்டி தான், இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே நல்லுறவு பேச்சுவார்த்தை ஏற்படுத்த வழிவகுத்தது.


இது போன்ற போட்டிகள் தொடர நான் விருப்பப்படுகிறேன். இது நடக்கும் என்று எதிர்பார்க்கிறேன் என்றார். (15)

# மூன்றாவது குறைந்தபட்ச ஓட்டம்

டெக்கான் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொச்சி ருஸ்கேர்ஸ் கேரளா அணி 74 ஓட்டங்களில் சுருண்டது. ஐ.பி.எல். போட்டியில் இது 3 ஆவது குறைந்தபட்ச 'ஸ்கோர்' ஆகும்.

2009 ஆம் ஆண்டு ராஜஸ் தான் அணி (பெங்களூருக்கு எதிராக) 58 ஓட்டங்களிலும், 2008 ஆம் ஆண்டு கொல்கத்தா அணி (மும்பைக்கு எதிராக) 67 ஓட்டங்களிலும் சுருண்டு இருந்தன.(15)

# வெற்றிக்கு வித்திட்ட யுவராஜின் விக்கெட்



ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியில் பெங்களூர் அரங்கில் நேற்று முன்தினம் நடந்த 35 ஆவது லீக் ஆட்டத்தில் பெங்களூர் அணி 26 ஓட்டங்களில் புனே வாரியர்ஸை தோற்கடித்தது.

பெங்களூர் அணி 'ஹட்றிக்' வெற்றியை பெற்றது. இதற்கு முன்பு கொல்கத்தா, டெல்லியை தொடர்ந்து தோற்கடித்தது. அந்த அணி 8 ஆட்டத்தில் விளையாடி 4 வெற்றி பெற்று 9 புள்ளிகளுடன் 2 ஆவது இடத்தில் உள்ளது. 3 ஆட்டத்தில் தோற்றது. ராஜஸ்தானுடன் மோதிய ஆட்டம் மழையால் பாதியில் ரத்துச் செய்யப்பட்டது. புனே வாரியர்ஸ் தொடர்ந்து 5 ஆவது தோல்வியைத் தழுவியது. அந்த அணி ஏற்கனவே டெல்லி, மும்பை அணிகளிடம் தோற்று இருந்தது.

சென்னையிடம் 2 முறை தோல்வியைத் தழுவியது. இந்த வெற்றி குறித்து பெங்களூர் அணியின் தலைவர் வெற்றோரி நிருபர்களிடம் கூறியதாவது:-

யுவராஜ்சிங்கின் விக்கெட்டை சகீர்கான் ஆட்டமிழக்கச் செய்தது தான் ஆட்டத்தின் திருப்புமுனை. சகீர்கானை கடைசி ஓவர் வரை வைக்காமல் முன்னதாக பந்துவீச அழைத்ததால் இந்த வெற்றியை பெற முடிந்தது. ஏனென்றால் யுவராஜ்சிங் மிகவும் சிறப்பாக விளையாடி வந்தார். அவர் எங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்தார். அவரை ஆட்டமிழக்கச் செய்ய சகீர்கானை முன்னதாக பந்துவீச வைத்தேன். அதற்கு நல்ல பலன் கிடைத்தது.

எங்கள் அணியின் சிறந்த பந்து வீச்சாளர் சகீர்கான் ஆவார். 181 ஓட்டங்கள் இலக்கு என்பது புனே அணிக்கு கடினமானது தான். ஹோக்லி, கெய்ல், சகீர்கான், அரவிந்த் ஆகியோரால் இந்த வெற்றியைப் பெற முடிந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.

தோல்வி குறித்து புனே வாரியர்ஸ் அணித்தலைவர் யுவராஜ்சிங் கூறியதாவது:-

எங்களது தொடக்க வீரர்கள் முதல் 6 ஓவரில் அதிரடியாக ஓட்டங்களை குவிக்கவில்லை. பெங்களூர் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது. பெங்களூர் அணிக்கு நாங்கள் கூடுதலாக 20 ஓட்டங்கள் வரை கொடுத்து விட்டோம். எங்கள் அணி வீரர்கள் ஒருங்கிணைந்து ஆடாதது கவலை அளிக்கிறது - இவ்வாறு அவர் ச (15)

# துல்கெரு ஏமாற்றம்



ஸ்பெயினில் பார்சிலோனா திறந்த பெண்கள் ரென்னிஸ் போட்டி நடைபெறுகின்றது. இந்தப் போட்டியில் ருமேனியாவைச் சேர்ந்த 2 ஆம் நிலை வீராங்கனை அலெக்சாண்ட்ரா துல்கெரு 2 ஆவது சுற்றில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். அவரை தகுதி நிலை ஸ்பெயின் வீராங்கனை எஸ்ட்ரெல்லா கமீசா 7-5, 6-3 செட் கணக்கில் வீழ்த்தினார்.

அலெக்சாண்ட்ரா உலக ரென்னிஸ் அரங்கில் இருப்பவர். அவரை விட 216 இடம் பின்னே உள்ள எஸ்ட்ரெல்லா அதிரடி வெற்றி பெற்று அலெக்சாண்ட்ராவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தினார். ஆட்டம் 94 நிமிடத்தில் முடிவுக்கு வந்தது.

5 ஆம் நிலை சாரா எர்ரானி 6-4, 6-1 செட் கணக்கில் தனது சக இத்தாலி வீராங்கனை மரியா லெனாவை வென்றார். மற்றொரு இத்தாலிய வீராங்கனையான6 ஆம்நிலைரொபர்டா வின்சி 6-1, 6-4 செட் கணக்கில் கஜகஸ்தானின் யரோஸ்லவா ஷெவே தோவாவை வென்றார்.

அல்பெர்டா பிரையண்டி 6-0, 5-7, 6-2 செட் கணக்கில் அமெரிக்காவைச் சேர்ந்தவார் வரா லெப்சன்கோவை வென்று கால் இறுதிக்கு முன்னேறினார். கால் இறுதிக்கு முன்னேறிய 3 ஆவது இத்தாலிய வீராங்கனை அல்பெர்டா ஆவார்.

ஸ்லோவேகியாவைச் சேர்ந்த மக்டலீனா ரைபரிகோவா பிரான்ஸ் வீராங்கனை விர்ஜினி ரசனோவிடம் தோற்றார். 7-6 (10-8) 1-6 6-2 செட் கணக்கில் விர்ஜினி வென்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 34ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 05.07.1950 உதிர்வு 01.05.1977

அமரர்
**குமரையா தேவராஜன்**

தென்றலாய் எம்மிடம் வந்து
புயலென விரைந்து சென்றவனே
நீ எமை விட்டுப் பிரிந்தாலும்
உன் இனிய நினைவுகள்- எம்
நெஞ்சங்களில் என்றும் நிறைந்திருக்கும்.

உன் இனிய நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்.

28, நக்கா லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்கள்

## *கணபதிப்பிள்ளை இராசதுரை*



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை இராசதுரை கடந்த(29.04.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை- காலஞ்சென்ற தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் திரேசம்மாவின் அன்புக் கணவரும் சுதாயினி, சுகந்தினி(கனடா), ஜெயசுதா, தேவரோகினி, சுதாகரன், சசிகரன், நிஷாந்தினி, நிஷாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரமலர், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் புஸ்பமலர், மாசிலாமணி, புஸ்பராணி (கொலன்ட்), அரியமலர், அரியராசா (ஜேர்மனி), எலிசபெத் ராணி, குயின்ராணி(பிரான்ஸ்), பா.நிமலன், கேதீஸ்வரன், சினோபா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(01.05.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப ஒரு மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அராலி தெற்கு. (3717) மகன்(மோகன்)

## *இராயப்பு பெனடிற் (சிங்கநாயகம்)*
*(ஒய்வுபெற்ற கடற்றொழில் பரிசோதகர்)*



இளவாலை, பத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு பெனடிற் நேற்று (30.04.2011) சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மா (பூமணி)வின் அன்புக் கணவரும் கிருபானந் (லண்டன்), ஊதிகா (இத்தாலி), பிரபானந் (சுவிஸ்), நிருபானந் (உரிமையாளர், ஈச்சமோட்டை ஐஸ்த் தொழிலகம் மற்றும் கடற்கரை வீதி, ஐஸ் தொழிற்சாலை), டினுக்கா (சுவிஸ்), சொரூபானந் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*18, ஈச்சமோட்டை வீதி,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
*021 222 6496, 0777209686* (3708) (34)

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி *புவனேஸ்வரி அம்பலவாணர்*



கரவெட்டி மத்தியைச்சேர்ந்த திருமதி புவனேஸ்வரி அம்பலவாணர் நேற்று (30.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு- தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் கந்தர்- வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், க.அம்பலவாணரின் (ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி அலுவலர், கரவெட்டி) அன்பு மனைவியும், செல்வி அனுராதா(M.B.B.S, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை) அனுதீபா(மாணவி, இணைந்த விஞ்ஞான சுகாதார பீடம், பேராதனை) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற மீனாட்சி மற்றும் இராசம்மா, வேலாயுதம்(R.M.P), தங்கமணி, சரஸ்வதி, கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், முருகர், கந்தையா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சோனப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சம்பந்தர் கடையடி, க. அம்பலவாணர்
கரவெட்டி மத்தி. (C/577832) (கணவர்).

## வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ்நகரினை அண்டிய பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை. அத்துடன் முச்சக்கர வண்டிச் சாரதி தேவை.

தொடர்பு:0759575703 (3677)

## பணிப்பெண் தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு நாற்பது வயதுக்கு மேற்பட்ட வீட்டுப் பணிப் பெண் தேவை. திருநெல்வேலியை அண்டிய பகுதிக்குள் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 0777804493**

## விநியோகஸ்தர்கள் தேவை.

ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பவர் டூல்ஸ் மற்றும் ஹாட்வேயார் உபகரணங்களை யாழ்ப்பாணம்,மட்டக்களப்பு,திருகோணமலை, வவுனியா,மன்னார் ஆகிய இடங்களிற்கு விநியோகம் செய்வதற்கு விநியோகஸ்தர்கள் தேவை.

தொடர்புகளுக்கு
ருக்ஷான் 0773-088696 இர்பான் 0773-655 299

Premium International
Technologies (PVT) Ltd.
No. 161, Danister De Silva Mawatha,
Colombo-09
Tel: 0112 685 785 Fax: 0112 672 777
rukshan@premium.lk

## வீடு விற்பனைக்கு

மாவிட்டபுரம்யில் புதிய வீடு ஒன்று
விற்பனைக்கு உண்டு
தொடர்பு-0750427501, 0718818460

## வாகன விற்பனை

Mercey Fercusan, டிரக்டர்
49.xxxxTrailor உடன் மற்றும் Volkswagen
Car 4-Sri விற்பனைக்குண்டு.

**Brown வீதி, யாழ்ப்பாணம்.**
**0714405254, 0773641661**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், 26வ்யது 5'10'' உயரமுடைய, சுவாதி நட்சத்திரம், கிரக பாவம் 60, மணமகனுக்கு வெளிநாட்டு P.R உடைய அழகிய மணமகள் தேவை. கனடா விரும்பத் தக்கது.

தொடர்பு- 0750701159

## வீசா சேவை

Malaysiaவில் ஒருவருடம் அதன்பின் U.K, USA, Australia, Student Visaவில் இலகுவாக செல்வதற்கான ஏற்பாடு மற்றும் எல்லா நாடுகளுக்குமான Visa ஆலோசனை, Financial Sponsorship என்பன.

தொடர்புகளுக்கு-0779218444

## தவறிவிட்டது

மருதனார் மடத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து உரும்பிராய்க்கும் தனியார் பேருந்தில் நேற்று (30.04.2011) சனிக்கிழமை பயனம் செய்த வேளை பெறுமதி மிக்க தங்கச் சங்கிலி ஒன்று தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு-0776184602, ச. செல்லகாந்தன்.

## காணிவிற்பனைக்கு

யாழ் மாநகரசபைக்கு மிக அண்மையில் கச்சேரி நல்லூர் வீதியில் நல்ல தண்ணீர் கிணற்றுடன் கூடிய 1¼ பரப்பும் அரைக்கால் பரப்பும் கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:0728952951

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள Japan Road Master CD 200, இலக்கம் NP GA.xxxx உடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0777143986**

## வீடு விற்பனைக்கு

யாழ். நகரில் வீடு விற்பனைக்குண்டு. காணி 2.775 பரப்பு (27.75 பேர்ச்)வீட்டு விஸ்தீரணம் சுமார் 2800 ச.அடி யாழ். நகர சந்தையிலிருந்து சுமார் 400 மீற்றர் தூரத்திலும், கொட்டடி வைரவர் கோயில் வீதியில் நன்நீர்க் கிணற்றுடன் அமைந்த மாடி வீடு(4 Bed rooms, 2Halls, Dinning room, Pantry, Kitchen, Prayer room, Reading room, Store room, 3 Bath rooms, (Including servants) Garage, Work shed, 2 Balconies etc) அண்மையில் புனரமைக்கப்பட்டது வீடாகவும் வியாபாரத் தேவைக்கும் பாவிக்கலாம்.

Offer over- Rs 15.0 mil
Contact- 0772279219

## குத்தகை / வாடகைக்கு

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதியில் மருதனார்மடம் சந்திக்கு அருகில் (ஆஞ்சநேயர் கோயிலுக்கு முன்பாக) 4100 சதுரஅடி விஸ்தீரணம் கொண்டதாகவும் அரச/அரச சார்பற்ற, தனியார் வர்த்தகத் துறையினருக்கு ஏற்றவகையிலும் அமைக்கப்பட்ட புதிய மாடிக்கட்டடத் தொகுதி வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு.

தொடர்பு :
***KMAS Engineering Contractors.***
T.P. No. : 021 300 7200, 0776141096, 0776012986
e-mail : *suhi123@gmail.com* (3633) (34)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தெய்வானைப்பிள்ளை கனகசபை**

இறைவன் அளித்தது
25.03.1913

இறைவன் அழைத்தது
12.05.2010

எமக்காகச் சிரித்து எமக்காக அழுது
எமக்காய் வாழ்ந்து உறவுகளை அணைத்து
உத்தமியாய் வாழ்ந்து
தெய்வத்திடம் சங்கமமான
எம் அன்புத் தாயே எம் உயிர் உள்ளவரை
உம் நினைவு நீங்காது

"வைகை",
வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்.

தினம் உங்கள் பிரிவால் வாடும்
பிள்ளைகள், உறவினர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## *சங்கரப்பிள்ளை அம்பலவாணர்*



காரைநகர், கள்ளத்தெருவைப் பிறப்பிடமாகவும் தங்கோடையை வசிப் பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை அம்பலவாணர் (சிறாப்பர்) 30.04.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரி(பேபி)யின் அன்புக் கணவரும் சங்கரப்பிள்ளை- தில்லாத்தை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான தம்பையா(உபாத்தியார்)- வள்ளிப் பிள்ளை தம்பதியரின் மருமகனும் ஜெயராணி (முன்னாள் ஆசிரியை, காரைநகர் இந்துக் கல்லூரி), ஜெயக்குமாரி, நந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ்வரன் (சுவிஸ்), கருணாகரன், சிவரஞ்சன் ஆகியோரின் மாமனும் சரவணபவான், ரகுலன், நிரோஜன், கபிலா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற கணேசபிள்ளை கமலாதேவி, சரோஜினிதேவி, சண்முகரத்தினம், சிவானந்தராசா(இ.மி.ச., சுன்னாகம்) ஆகியோரின் மைத்துனரும் பரமேஸ்வரி, இராசையா, கதிரவேலு கமலாம்பிகை காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் கலாசோதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தங்கோடை, தகவல்:
காரைநகர். குடும்பத்தினர்.

## *இளையதம்பி வன்னியசிங்கம்*



இளையதம்பி வன்னியசிங்கம் நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காடு, புலவனார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வன்னியசிங்கம் நேற்று (30.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும் ரம்யா(London), ரேக்கா(London) ஆகியோரின் அன்புத் தந்தையும் கவிதாஸ்(London), திலீபன்(London) ஆகியோரின் மாமனும் செல்வரத்தினம், குணவதி, தனவதி(பெற்றம்மா), தெய்வேந்திரம், மல்லிகாதேவி (Canada) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலவனார் வீதி, தகவல்:
கல்வியங்காடு. (3709) மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மீண்டும் வேண்டும் 'மனித மணிகளின்' சேவை

காலம் மாறிப் போச்சு என்ற சொல்லடுக்கு, குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்களின் பேச்சு வழக்கில் - பேச்சுமொழியில் - நீண்ட காலமாகப் பாவனையில் உள்ள ஒன்று. பாரம்பரியமான செயற்பாடுகளில் பிறழ்வு அல்லது தப்பிதம் நடந்துவிட்டால், அத னைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் மனவெப்பியாரத்தில், செயற்பாட்டில் அல்லது நிகழ்வில் நடந்தது என்ன என்பதனை விவரிக்காமல் காலம் மாறிப்போச்சு என்ற சொற்றொடரே நாவில் வந்து விழும். முந்திய காலத்தில் இச்சொல் மக்களிடமிருந்து அடிக்கடி வருவது குறைவு.

இப்போதெல்லாம் அதனை அடிக்கடி உச்சரிக்க வேண்டிய அளவுக்குச் சமூகப் பிறழ்வுகள் வகையிலும் தொகையிலும் பெருகி வருகின்றன. அவற்றில் தற்கொலை மரணங்கள், கொலைகள், சிசுக்கொலைகள், பாலியல் வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம் என்பன முன்னரைவிடப் பல்கிப் பெருகியுள்ளன; பல மடங்கு அதிகரித்துள்ளன.

உதாரணமாக, கடந்த நான்கு மாதங்களில் குடாநாட்டில் நாற்பத்தைந்து தற்கொலை மரணங்களும், பதினெட்டுக் கொலைகளும், இரண்டு சிசுக்கொலைகளும், பதினைந்து சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. முந்திய நாள்களில் இடம்பெற்றவையுடன் ஒப்பிடும்போது மேற்சொன்ன வகைக் குற்றங்கள், சமூக விரோதச் செயல்கள் விஸ்வரூபம் எடுத்துள்ளமை தெட்டெனப் புலனாகிறது.

இவற்றைவிடக் குடாநாட்டில் சமூக விரோதச் செயல்களும் ஏறு முகத்தில் அதிகரித்து வருவது மற்றொரு சாபக்கேடாகியுள்ளது.

கல்வி, கலை, கலாசாரம், ஒழுக்கம், பண்பாட்டு விழுமியங்களில் சிறப்புற்று விளங்கிய ஒரு பிரதேசத்தில் இத்தகைய வாழ்வியல் பிறழ்வுகள் உயர்ந்து நிற்பதற்கு, அதிகரித்துச் செல்வதற்கு எமது சமூக மாண்புகள் மங்கிப் போனமையே பிரதான காரணியாகும். காலம் மாறும்போது மனித கோட்பாடுகளும், சிந்தனைகளும், வாழ்க்கை நிலையும் அதன்பாற்பட்ட அம்சங்களும் மாறுவது நியதி. ஆனால் அந்த மாற்றங்கள் முன்னரைவிட முன்னேற்றகரமானதாகவும் சிறப்பு இயல்புடையதாகவும் அமைய வேண்டும்.

விஞ்ஞானம் மணிக்கு மணி முன்னேற்றம் கண்டு வருகிறது. அதனோடு சேர்ந்து மனிதனின் வாழ்க்கையியலிலும் பல மாற்றங்கள் உருவெடுக்கின்றன. அந்த மாற்றங்கள் பல நன்னிலையானவையாகவும், சில கீழ்நோக்கிச் செல்வனவாகவும் உள்ளது. எதிலும், எங்கும், உடன்பாடான மற்றும் எதிர்மறையான என இரண்டு நிலைகள் உள்ளன. முதலாவதன் பலாபலன்களை அனுபவிக்க ஆர்வம் காட்டுவதைவிட அடுத்த பக்கத்தின் விளைவுகளில் நாட்டம் கொள்வது இயல்பான மனித சுபாவமாகிவிட்டது.

இந்த ஒவ்வாத வழியில் இளம் வயதினரை இட்டுச் செல்லாமல் தடுப்பதில் கல்விக்கும், சமயங்களுக்கும் பெரும் பங்குண்டு. பெற்றோர்களுக்கு அப்பால் அவற்றை போதிப்பவர்கள், இளவயதினர் உரிய வழியில் செல்வதற்கு வழிகாட்டினால், சமூகச் சீர்கேடுகளும் நல்லொழுக்க நலிவும் இன்றுள்ளது போன்ற தாழ் நிலைக்குச் சென்றிருக்காது.

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியம் சுட்டிக் காட்டியுள்ளது போன்று, பெற்றோர்கள் ஒருவரைப் பார்த்து மற்றவர் ஏட்டிக்குப் போட்டியாக தமது பிள்ளைகளுக்கு அதீத வசதிகளை வழங்கும் போக்கு ஒரு சாராரிடமும், பிள்ளைகளுக்குத் தர வேண்டிய அரவணைப்பை வழங்காத போக்கு மறுசாராரிடமும் குடிகொண்டிருப்பதால் இன்றைய பாதகநிலை உருவாகிப் பூதாகரமாகி உள்ளது.

இந்தச் சாபக்கேடு நீங்குவதற்கு உதவவேண்டியவர்கள், உழைக்கவேண்டியவர்கள் பெற்றோரும், ஆசிரியர்களும், சமய குருமாரும், சமூக நலன்விரும்பிகளுமாவர். நான்கு அல்லது ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர் குடாநாட்டில் ஒழுக்கமும் மனிதப் பண்பும் வளர்ந்து மேலோங்கியமைக்கு மேற்குறிப்பிட்ட நாற்தரப்பாருமே உந்து சக்திகளாகவும் ஊக்கிகளாகவும் இருந்தனர். அதனால் அவர்கள் எல்லோரது மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களாக உயர்ந்து மிளிர்ந்தனர்.

அந்த நிலை மீண்டும் வரவேண்டும். மாணவர்கள், இளைஞர்களிடம் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையையும் மனவலிமையையும் உண்டாகுவதற்குப் புதியவகை மனநல ஆற்றுப்படுத்தல் நெறிமுறைகளோடு, மேலே குறிப்பிட்ட முந்திய நான்கு மனித ''மணிகளின்'' உளப்பூர்வமான சேவையும் - நெறிப்படுத்தலும் - தேவை. சமூக விழிப்புணர்வை உண்டாக்குவதில் சமகால, முந்திய கால வழிமுறையாளர்களின் கூட்டு முயற்சியும் உழைப்பும் தேவை.

# ஜனாதிபதி செயலணியின் அனுமதி பெறுவதில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெரும் சிரமம்

## நேபாள நாடாளுமன்றக் குழுவிடம் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்,மே.1

யாழ். குடாநாட்டில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதியினைப் பெறுவதற்கு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த நேபாள நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்துக்கு 11பேர் அடங்கிய நேபாள நாடாளுமன்றக் குழு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை விஜயம் செய்தது. இவர்கள் யாழ். மாவட்டச் செயலகத்தில் மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கத்தினை சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே அவர்களிடம் இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டது.

கலந்துரையாடப்பட்ட விடயங்கள் வருமாறு:

இராணுவம் மற்றும் பொலிஸில் எத்தனை பேர் தமிழ் பேசும் மக்கள் உள்ளனர் என்று நேபாள நாடாளுமன்றக் குழுவினர் கேட்டதற்கு, பொலிஸில் தற்போதுதான் தமிழர்களை இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இராணுவத்தில் தமிழ் பேசும் மக்கள் கடமையாற்றுவது மிகக் குறைவு என்று தெரிவிக்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவடைந்த பின்னர் இதுவரையில் பொது மக்கள் எத்தனை பேர் மீளக்குடியமர்த்தப் பட்டுள்ளனர் மற்றும் மக்களை மீளக்குடிய மர்த்துவதற்கான தாமதம் ஏன்? மக்கள் சொந்த இடங்களில் குடியமராமல் இடம்பெயர்ந்து எங்கு தங்கியிருந்தார்கள் என்று நாடாளுமன்றப் பிரதிநிதிகளால் கேள்விகள் தொடுக்கப்பட்டன.

படிப்படியாக மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கியிருந்ததாகவும் அவர்களுக்கு விவரிக்கப்பட்டது. நேபாள நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் வருகின்ற வழியில் முக மாலைப் பிரதேசத்தில் கிட்டத்தட்ட 2கிலோ மீற்றர் வரையிலான தூரம் பயங்கரமான - வெறிச்சோடிய - சூனியப் பிரதேசமாகக் காட்சியளித்தது எனவும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் ஏன் இந்த நிலைமை தொடர்கின்றது என்றும் கேட்டதற்கு, தற்போதுதான் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டுவருவதாக அவர்களுக் குப் பதிலளிக்கப்பட்டது.

மேலும் இங்குள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள், மீனவர்கள் எதிர்நோக்குகின்ற தடைகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஜனாதிபதி விசேட செயலணியின் அனுமதி யைப் பெறுவதில் எதிர்நோக்கும் சிக்கல்கள் தொடர்பாகவும் குழுவினருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

தடுப்பில் உள்ள முன்னாள் போராளிகள் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட போராளிகள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாண தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி சிறீகாந்தரூபன், மாவட்ட இளைஞர் சேவைகள் பணிப்பாளர் திருமதி ஸ்ரீமதி மேனன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (த-15-23)

# வெலிக்கடை சிறைச்சாலையில் புதுவருட தினத்தன்று மது விருந்து

## விசாரணைக்கு அமைச்சர் உத்தரவு

கொழும்பு, மே.1

வெலிக்கடை சிறைச்சாலையில் புதுவருடத்தின் போது நடத்தப்பட்ட மது விருந்து பசாரம் பற்றி ஆராய்வதற்கு அமைக்கப்பட்ட விசாரணைக் குழுவின் இடைக்கால அறிக்கை சிறைச்சாலைகள் நிர்வாகம் மற்றும் புனருத்தாபன அமைச்சரான சந்திரசிறி கஜதீரவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குழுவின் தலைவராகச் செயற்பட்ட அமைச்சின் அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் திருமதி ரமணி குணவர்தனவினால் இந்த அறிக்கை அமைச்சர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த அறிக்கையின் பிரகாரம் இந்த விருந்தில் சம்பந்தப்பட்ட சிறைச்சாலை உயரதிகாரிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

வெலிக்கடை சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி வெளிநாடு சென்று திரும்பிய பின் இந்த விருந்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது எனவும், எனினும் அவர் நாடு திரும்புவதற்கு முந்தியதினமே விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது எனவும், இதற்கு சிறைச்சாலைப் பதில் பொறுப்பதிகாரியின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அறிக்கை மூலம் தெரியவந்துள்ளதாக அமைச்சின் செயலாளர் ஏ.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புதுவருடக் கொண்டாட்டத்துக்கு பிரபல பாடகர்கள் 15 பேர் சிறைச்சாலைக்கு வருகை தந்ததாகவும் ''வொட்கா'' மதுவுடன் விருந்து நடைபெற்றதாகவும் அவர் மேலும் கூறினார். சிறைச்சாலைக்குள் மது கொண்டு செல்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த விருந்துபசாரம் அமைச்சின் அனுமதியின்றி நடந்துள்ளதென செயலாளர் சுட்டிக்காட்டினார். (த)

# அந்நியத் தலையீடு இன்றி நாட்டை கட்டியெழுப்ப நாம் ஒன்றிணைவோம்

## மேதினச் செய்தியில் அங்கஜன்

உலக தொழிலாளர் தினமான இன்றைய தினத்தில் அந்நிய தலையீடு இன்றி நாம் அனைவரும் ஒன்று கூடி எமது நாட்டின் சுபீட்சத்துக்காக நாட்டைக் கட்டியெழுப்ப ஜனாதிபதி தலைமையின் கீழ் இன்றைய நாளில் உறுதி எடுத்துக் கொள்வோம் என யாழ். மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் இ. அங்கஜன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள மேதினச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

உலகளாவிய ரீதியில் இன்று தொழிலாளர் தினம் கொண்டாடப்படுகின்றது. பல நாடுகள் தொழிலாளர்களின் மேம்பாட்டை வலியுறுத்தும் வகையில் பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகியவற்றை நடத்துகின்றன. தற்போது எந்தவித கெடுபிடிகளும் இல்லாத ஒரு பாதுகாப்பான சூழ்நிலையில் சுமுகமான ஒரு வாழ்க்கையை ஜனநாயகத்தை முன்னெடுக்கக் கூடிய நிலையில் எமது தமிழ் மக்களாகிய நீங்கள் வாழ்ந்து வருகிறீர்கள். குறிப்பாக குடாநாட்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் இளைஞர், யுவதிகளுக்கு கல்வி, வேலை வாய்ப்புக்கள் போன்ற வசதிகள் சகலவற்றையும் எமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்து வருகின்றார். எனவே நாம் அனைவரும் இன்றைய உலக தொழிலாளர் தினத்தில் ஒன்று திரண்டு ஒரு குடையின் கீழ் நின்று ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவோம். இதன் மூலம் எமது நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும்.

இன்றைய இந்த மேதினத்தில் குடாநாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான தமிழர்களான நீங்கள் சுயவிருப்பத்தின் பேரில் முன்வந்து, ஜனாதிபதி தலைமையின் கீழ் அணிதிரளவேண்டும். உங்களுக்கு ஜனாதிபதியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றுள்ளது.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாரஸ்யங்களுடன் முடிவடைந்த வில்லியம் - கேற் திருமண விழா



பிரிட்டன் இளவரசர் வில்லியமுக்கும் அவரது நீண்ட நாள் தோழியும் காதலியுமான கேற் மிடில்டனுக்கும் நேற்றுமுன்தினம் பிரிட்டன் தலைநகர் லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபே தேவாலயத்தில் கோலாகலமாகத் திருமணம் நடந்தது. இந்நிகழ்ச்சியில், 1,900 விருந்தினர்கள் நேரடியாகக் கலந்து கொண்டனர். உலகம் முழுவதும் தொலைக்காட்சிகள் வழியாக, 200 கோடி பேர் பார்த்து மகிழ்ந்தனர்.

இவர்களின் திருமணத்தைக் கண்டு களிக்கவும், மணமக்களை நேரில் பார்த்து வாழ்த்தவும், நேற்று முன்திணம் முதல், பக்கிங்காம் அரண்மனையில் இருந்து, வெஸ்ட் மின்ஸ்டர் அபே தேவாலயம் வரையிலான வழியில், ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர்.

காலை பக்கிங்காம் அரண்மனையில் இருந்து, ராணி எலிசபெத்துடன் மணமகன் வில்லியமும், தனது தந்தையுடன் மணமகள் கேற் மிடில்டனும் தேவாலயத்துக்குக் காரில் வந்தனர். அவர்களுக்கு முன்பாக, இளவரசர் பிலிப், இளவரசர் சாள்ஸ், அவரது மனைவி கமீலா, வில்லியமின் சகோதரர் ஹரி ஆகியோர் வந்து காத்திருந்தனர்.

மணமக்கள் வந்த பின், பேராயர் ரோவன் வில்லியம்ஸ் இருவருக்கும் மண உறுதிமொழி செய்வித்தார். அந்த உறுதிமொழியில் வரக் கூடிய, ''கணவருக்குக் கட்டுப்பட்டு'' என்ற வார்த்தையை கேற் மிடில்டன் சொல்லவில்லை. அதற்கு பதிலாக, ''கணவரிடம் அன்பு செலுத்துவேன்'' என்று மட்டுமே சொன்னார். தொடர்ந்து, வில்லியம், கேற் மிடில்டனின் மோதிர விரலில், தங்க மோதிரத்தை அணிவித்தார். அடுத்து, பைபிளில் இருந்து சில வாசகங்கள் படிக்கப்பட்டன. ''பிதா, சுதன், பரிசுத்த ஆவியின் பெயரால், இவர்கள் இருவரும் கணவன் மனைவி என்று அறிவிக்கிறேன். ஆமென்'' என்று பேராயர் தெரிவித்தார்.

மணமக்களை வாழ்த்தும் விதத்தில் பல்வேறு பாடல்கள் இசைக்கப்பட்டன. தொடர்ந்து, மணமகன் வில்லியம், கேம்பிரிட்ஜ் அரசர் என்றும், மணமகள் கேற் மிடில்டன் கேம்பிரிட்ஜ் அரசி என்றும் ராணி எலிசபெத்தால் பட்டம் சூட்டப்பட்டனர். திருமணத்துக்கான ஆவணத்தில், இருவரும் கையெழுத்திட்டனர். பின்னர், மணமக்கள் தேவாலயத்தில் இருந்து வெளியே வந்து, அரச குடும்பத்துக்குச் சொந்தமான பாரம்பரியமிக்க சாரட் வண்டியில் பக்கிங்காம் அரண்மனைக்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். இதே வண்டியில் தான், 1981இல் சாள்ஸ் - டயானா தம்பதிகள் ஊர்வலமாகச் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. வழியெங்கும் கூடியிருந்த ஆயிரக்கணக்கான மக்கள், உற்சாகமாகக் குரல் எழுப்பியும், கையசைத்தும் மணமக்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

### யார் இந்த கேற் மிடில்டன்?

வில்லியமின் தாயார் மறைந்த டயானா, பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்தவர். ஆனால், தற்போது பக்கிங்காம் அரண்மனையின் மருமகளாகியுள்ள கேற் மிடில்டன், சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். பிரிட்டனின் பெர்க்ஷைர் பகுதியைச் சேர்ந்த மிடில்டன், பிரிட்டன் விமானப்படை அதிகாரியாக பணியாற்றியவர். இவர் தான் கேற்றின் தந்தை. சில ஆண்டுகளுக்கு முன், மிடில்டன், ''பார்ட்டி பிசெஸ்'' என்ற மெயில் ஓடர் நிறுவனத்தை தொடக்கினார். இதில் பணம் கொட்டியது. இதனால், மிடில்டன் குடும்பம் கோடீஸ்வர குடும்பம் ஆனது.

### திருமண உடை ரகசியம்

* மணமகள் கேற் மிடில்டனின் திருமண உடை பற்றிய தகவல்கள் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தன. பாரம்பரியத்தைப் பேணும் வகையில், வெளிர் சந்தன நிறத்தில் அவர் 'கவுன்' எனப்படும் உடை அணிந்திருந்தார். அவரது உடையின் பின்புறம் மிக நீண்ட பட்டாடை பொருத்தப்பட்டிருந்தது. அதைத் தாங்கிப் பிடிக்க, இளம் பெண் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.
* நீல வைரம் பொருத்தப்பட்ட கிரீடத்தை மிடில்டன் தன் தலையில் அணிந்திருந்தார். இந்த கிரீடம், 90 ஆண்டுகளுக்கு முன் அப் போதைய ராணி மேரியால் அணியப்பட்டது.
* மணமகன் வில்லியம், தனது கௌரவ பதவி யான அயர்லாந்து கேணல் பதவிக்குரிய சிவப்பு உடையை அணிந்திருந்தார்.
* திருமணத்திற்கு அறிகுறியான மோதிரம் மாற்றும் நிகழ்ச்சியில், மிடில்டனில் விரலில் வில்லியம் மோதிரம் அணிவிக்கும் போது, சிறிது தடுமாறினார். பின் சமாளித்தபடி மோதிரம் அணிவித்தார்.
* இந்த மோதிரம் பரம்பரை பரம்பரையாக அரச குடும்பத்தில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இம்மோதிரத்தை, ராணி எலிசபெத் தனது பேரன் வில்லியமிடம் அளித்தார்.

### வயதை மறைத்த கேற்றின் உடை

திருமணத்தில் பல சிறப்பு அம்சங்கள் இருந்தா லும், மணமகளின் திருமண உடை மீது சற்று கூடுதல் கவனம் இருக்கும். திருமணத்திற்கு முன்பே கேற்றின் திருமண உடை குறித்து தகவல்கள் வந்தவாறு இருந்தன.

* கேற் மிடில்டன் அரச குடும்பத்தின் பாரம்பரியமான வெள்ளை மற்றும் யானைத் தந்தம் நிறத்தில் கவுன் அணிந்திருந்தார்.
* ஐந்து மாதமாக உடையைத் தயார் செய்பவர்களுக்கான தேடல் நடந்தது.
* இறுதியாக அலெக்சாண்டர் மெக் குயின் நிறுவனத்தின் 'கிரியேட்டிவ் டைரக்டர்' ஷாரா பட்டன் வடிவமைத்தார்.
* கவுனின் நீளம் 8.8 அடி.
* உடையுடன் இணைந்திருந்த வலை (லேஸ்) றோயல்ஸ் 'ஸ்கூல் ஆப் நீடில் வொர்க்' என்ற இடத்தில் தயார் செய்யப்பட்டது.
* கேற் அணிந்திருந்த 'ஷூ' மெக்குயின் நிறுவனத்தின் பிரத்தியேக தயாரிப்பு.
* பெற்றோர் பரிசளித்த வைரக் கம்மலை கேற் அணிந்திருந்தார்.
* இந்த உடையில் கேற்றை நேரில் பார்த்தாலும் போட்டோக்களில் பார்த்தாலும் வயதைக் கணக்கிட இய லாது. இதுவே இந்த உடையை அவர் தேர்வு செய்ததற்கு முக்கிய காரணம்.
* கேற் கையில் வைத்திருந்த பூங்கொத்தை ஷான் கானோலி என் பவர் வடிவமைத் திருந்தார். லில்லி ஆப் வேலி, ஸ்வீட் வில்லியம் போன்ற நறுமண மலர்களால் இந்த பூங்கொத்து வடிவமைக்கப்பட்டது. ✱



# வீட்டுக்குள் வந்த புத்த பெருமான் குறித்து சம்பந்தபட்டோர் விளக்கம்

கடந்த 24 ஆம் திகதி ஞாயிறு பதிப்பில் ''வீட்டுக்குள்ளும் வந்துவிட்டார் புத்தபெருமான்'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை தொடர்பாக உடுவில் கிழக்கைச் சேர்ந்த ச. அதிர்ஷ்டராசாவும் தமிழ் பௌத்த சங்கத்தின் தலைவர் அ.ரவிக்குமாரும் தமது நிலைப்பாட்டை விளக்கியுள்ளனர். அவர்களின் விளக்கம் வருமாறு:-

### அதிர்ஷ்டராஜாவின் விளக்கம்

இராமலிங்கம் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட சற்குணானந்தன் அதிர்ஷ்டராஜா ஆகிய நான் வறுமையில் உள்ள ஒரு குடும்பஸ்தன். எனது மூத்த மகள் (வயது 13), உடுவில் மகளிர் கல்லூரி மாணவி. எனது இளையமகன் (வயது3)கடந்த 2 வருடங்களுக்கு முன்பு இருதய சத்திர சிகிச்சை செய்து கொண்டவர். சுமார் 5 லட்சம் ரூபாவை எனது சொந்தச் செலவில் என் மகனுடைய சத்திர சிகிச்சைக்காகச் செலவழித்துள்ளேன். எனவே மிகுந்த பண நெருக்கடியிலும் மன உளைச்சலிலும் இருந்த எனக்கு வீடமைப்பு அதிகார சபை, பௌத்த குருமார் கள், தமிழ் பௌத்த சங்கம், இராணுவம் என்பன ஒருங்கிணைந்து எனது பங்களிப்புடன் ஒரு சிறிய வீடொன்றைக் கட்டித்தர முன்வந்தார்கள்.

எனது மகனின் சத்திர சிகிச்சையின் போது பொரளையில் உள்ள பௌத்த விகாரைக்குச்சென்று புத்தபெருமானை வழிபட்ட பின்னரே இருதய சத்திர சிகிச்சை நடைபெற்றது. அதனை அடுத்தே எனது வீட்டில் புத்த பெருமானின் சிலையொன்றை வைத்து ஒரு சிறிய கோயிலைக் கட்டி அவரை வழிபட நினைத்தேன்.

இது எனது சொந்த விருப்பம். இந்த என் சொந்த விருப்பத்தை தமிழ் பௌத்த சங்கத்தின் தலைவர் என்ற முறையில் ரவிக்குமாரிடம் தெரிவித்தபோது சந்தோசமடைந்த அவர், விகாரை அமைப்பதற்கான முழுத்தொகையையும் தான் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார். புத்த பெருமானுக்குக் கோயில் கட்ட இடமளித்தால்தான் வீடு [illegible] என என்னிடம் [illegible] வற்புறுத்தவு மில்லை, கட்டளையிடவுமில்லை.

### ரவிக்குமாரின் அறிக்கை

"தமிழ் பௌத்த சங்கம் என்பது இன்றோ, நேற்றோ திடீரென'' உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பல்ல. இன, மத, ஜாதி அடிப்படையில் அன்று அடக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்த மக்களுக்கு உண்மையான பரிசுத்தமான, தர்மத்தைப் போதித்த புத்தபெருமானின் கொள்கைகளை வழிகாட்டுதலை ஏற்றுக் கொண்டவர்கள் தமிழ் பௌத்த சங்கத்தைத் தோற்றுவித்தார்கள். ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளும் பயங்கரவாதிகளும் இந்தச் சங்கத்தைத் தடை செய்தார்கள்.

பௌத்தம் என்பது ஒரு மதமல்ல. பௌத்தம் என்பது தூய்மையானது. அதுவே உண்மையான அதி உச்ச தர்மம். உண்மையில் இது ஒரு விஞ்ஞானம். தன்னை உணர்தலே இந்தத் தர்மத்தின் இறுதிக் கட்டம். தன்னை உணர்ந்தவன் சாந்தமானவனாக மாறுகின்றான்.

இந்த [illegible]ின் உச்சமான நிலையை "அகம் பிரம்மாஸ்மி'' என்பார்கள். அதாவது "நானே பிரம்மா'' என்பதே இதன் அர்த்தம் அதாவது இன்பம், துன்பம் அனைத்தையும் நானே உருவாக்குகின்றேன். இந்த உயர்ந்த நிலையைத்தான் புத்தபெருமான் தன்னுடைய தியானத்தின் மூலம் கண்டுபிடித்தார்.

தெற்குப்பகுதியில் சிங்கள மக்கள் செறிந்து வாழும் இடங்களில் எத்தனை இந்துக் கோயில்கள் இருக்கின்றன. எத்தனை சிங்களச் சகோதரர்கள் இந்து ஆலயங்கள் அமைக்க உதவி செய்கின்றார்கள்.

ஒரு மனிதன் தன்னுடைய சுயவிருப்பின் பேரில் ஒரு சிறிய பௌத்த ஆலயம் அமைப்பதை நீங்கள் ஏன் அரசியல் ஆக்குகின்றீர்கள்?

இந்து ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்ட கிறிஸ்தவ தேவாலயங்களையும் முஸ்லிம் பள்ளிவாசல்களையும் யாழ்ப்பாணத்தில் நிறுவ முடியும் என்றால் இந்து ஆகமத்தை ஒத்த விதிகளைக் கொண்ட பௌத்த கோயிலை ஏன் நிறுவ முடியாது?

பௌத்த தர்மத்தை, உண்மையான தர்மத்தை பரப்புவதே தமிழ் பௌத்த சங்கத்தின் நோக்கமேயன்றி வேறொன்றுமில்லை. ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆஸ்பத்திரியில் நேற்றுப் பிறந்த குழந்தைகளுக்கு சேமிப்புக் கணக்கு

## சி.ஐ.எவ்.எல். நிறுவனம் ஆரம்பித்தது

யாழ்ப்பாணம்,மே.1

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுச் சனிக்கிழமை பிறந்த குழந்தைகளுக்குச் சேமிப்புப் புத்தகம் கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலையின் மகப்பேற்று நிலையத்தில் இடம்பெற்றது.

யாழ்.ஸ்ரான்லி வீதி சென்றல் இன்வெஸ்ற்மன்ஸ் பிறைவெட் லிமிட்டெட் (சி.ஐ.எவ்.எல்.) நிறுவனத்தின் ஒருவருடப் பூர்த்தியினை முன்னிட்டு நிதி நிறுவனத்தின் பிரதேச முகாமையாளர் ஆர்.இராஜமகேந்திரசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவாணி பசுபதிராஜா, யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று வைத்திய நிபுணர் கே.சிறிதரன் மற்றும் சி.ஐ.எவ்.எல். உத்தியோகத்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சிறுவயது முதல் சேமிப்புப் பழக்கத்தைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்தும் முகமாக இந்த நிதிநிறுவனம் ஆரம்ப வைப்பாக ரூபா 500 ஐ சேமிப்பில் இட்டு குழந்தைகளின் தாய்மாரிடம் அந்தச் சேமிப்புப் புத்தகம் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நிறுவனத்தின் முகாமையாளரால் தமது சேவை தொடர்பாகவும் அதன் நன்மைகள் தொடர்பாகவும் கருத்துரைகளை வழங்கினார்.



இதன்போது குடும்ப முன்னேற்றத்துக்கான தொழில் முயற்சிக் கடன்களை பெறுவது தொடர்பாகவும் அவர் ஆலோசனை வழங்கினார். (த-313)

## அமிர்தலிங்கத்துக்கு உருவச்சிலை விரைவில்

யாழ்ப்பாணம், மே.1

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான அ. அமிர்தலிங்கத்தின் உருவச்சிலையை நிறுவ உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். மாநகரசபை உறுப்பினர் அ.பரஞ்சோதி வியாழக்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் வலியுறுத்தினார்.

இந்தத் தீர்மானம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் எனினும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லையெனவும் அவரது நினைவு தினத்துக்கு முன்னதாக சிலையை நிறுவவேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார். சபை உறுப்பினர்கள் அனைவரும் இதனை வரவேற்றதை அடுத்து இது குறித்து நடவடிக்கை எடுப்பதாக முதலர்வர் சபைக்கு உறுதியளித்தார். (த-7)

# வன்னி இறுதி யுத்தத்தில் பொதுமக்கள் எவரும் கொல்லப்படவே இல்லை கூலிக்கு அமர்த்திய எழுத்தாளர்களே ஐ.நா. அறிக்கையை எழுதினார்கள்

## அமைச்சர் டக்ளஸ் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, மே.1

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையில், பொதுமக்கள் கொல்லப்பட்டனர்என்று கூலிக்குஅமர்த்தப்பட்ட எழுத்தாளர்கள் சுமத்தியுள்ள குற்றச்சாட்டு அப்பட்டமான பொய் என்று கூறியுள்ளார் ஈ.பி.டி.பியின்செயலரும்அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா.

ஏசியன் ரிபியூன் இணையத்தளத்துக்கு வழங்கியுள்ள நீண்ட பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலர் வெளியிட்டிருக்கும் அறிக்கையை எழுதியிருப்பவர்கள் ஐ.நாவின் எந்தவொரு அமைப்புக்கும் உரித்தானவர்களல்லர். இவர்கள் இலங்கையினதும் அதன் படைவீரர்களினதும் நற்பெயரைக் களங்கப்படுத்தும் நோக்கில் பான் கீ மூனால் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்கள். இந்த குழுவை நியமித்ததன் மூலம் பான் கீ மூன் ஐ.நாவின் வளங்களையும் நிதியையும் வீணடித்துள்ளார்.

தமது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அவர், சுய இலாப நோக்கத்துடன் சில நாடுகளினதும் அமைப்புக்களினதும் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில்தான், ஜனாதிபதிக்கும் இராணுவ அதிகாரிகளுக்கும் அவதூறு ஏற்படுத்துவதற்காக இந்த எழுத்தாளர்களை நியமித்தார்.

தருஸ்மன் அறிக்கையின் படி, எமது மக்கள் கொல்லப்பட்டிருப்பதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் குற்றச்சாட்டுகளில் எவ்வித உண்மையும் இல்லை. கடந்த 30 ஆண்டுகளாக வடக்கு, கிழக் கில் கொல்லப்பட்ட 70 ஆயிரம் அப்பாவி மக்களின் மரணங்களுக்குப் பிரபாகரனே பொறுப்பு. நியூயோர்க்கிலுள்ள புலிகள் ஐ.நா செயலகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எப்போதும் நோட்டம் விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நியூயோர்க்கில் வசிக்கும் சிலர் ஐ.நா செயலகத்துக்கு மிகவும் நெருக்கமான அதிகாரிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களுடன்வெளிப்படையாகப் பழகுவதன் மூலம், இலங்கை அரசைக் குற்றம் சுமத்தும் இந்த அறிக்கையை வெளியிடச் செய்ய தம்மாலான முயற்சிகளை எடுத்துள்ளனர்.

அவர்கள் நினைத்ததை நடத்தியுள்ளார்கள். இதற்காக ஆயிரக்கணக்கான டொலர்கள் கைமாறியிருப்பதாக நாம் அறிந்தோம். மோதலின் இறுதிக்கட்டத்தில் பொதுமக்கள் மிகவும் துன்பகரமான மற்றும் பயங்கரமான சம்பவங்களுக்கு முகம் கொடுத்ததாகத் தருஸ்மன் குழுவினர் சித்திரித்துக் காட்டியுள்ளனர். அவர்கள் தமது கற்பனையில் சேவல் மற்றும் எருமை மாடுகளின் கதைகளை 196 பக்க அறிக்கையாக எழுதியுள்ளனர்.

நான் ஒரு இலங்கைத் தமிழன். என்னைத் தமிழ் மக்களே வாக்களித்து நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தனர். எவ்வித சட்ட ஆதாரமும் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் குறைகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த தருஸ்மன் அறிக்கையை நான் நிராகரிக்கிறேன்.

ஐ.நாவோ அல்லது ஏதேனும் நாடோ அப்பாவித் தமிழர்களுக்கு நிகழ்ந்த உயிரிழப்புகளுக்கும், அழிவுகளுக்கும் தமது இரக்கத்தைக் காட்ட நினைத்தால் அவர்கள் இழப்புகளுக்கான நட்டஈடுகளை வழங்க முன்வர வேண்டும். என்றும் அவர் கூறியுள்ளார். (த)

விலைக்கழிவினில் நீங்கள்
வியந்திட WinTechல் மலிவு விற்பனை.
உத்தரவாதத்துடன் கணனி
உதிரிப்பாகங்களினை சிறந்த
விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

Win Tech
187/1,Parameswara Junction
Palaly Road,Jaffna.
021 568 9418.

Intel 3.0GHz Processor
G41 Intel Chip Mother Board
1GB Ram DDR-2
250GB Hard Disk
16"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
34000/=

Intel 3.0GHz Processor Dual Core
G41 Intel Chip Mother Board
1GB Ram DDR-2
500GB Hard Disk
19"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
36000/=

Intel 3.2GHz Processor Dual Core
G41 Intel Chip Mother Board
1GB Ram DDR-2
250GB Hard Disk
16"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
37250/=

Intel 3.2GHz Processor Dual Core
G41Intel Chip Mother Board
2GB Ram DDR-3
500GB Hard Disk
19"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
41500/=

Intel 3.2 GHz Processor Dual Core
G41 Intel Chip Mother Board
1GB Ram DDR-2
500GB Hard Disk
19"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
40000/=

Intel 3.06GHz Processor Core i3
G55 Intel Chip Mother Board
2GB Ram DDR-3
500GBHard Disk
19"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
52000/=

Intel 3.2GHz Processor Dual Core
G41Intel Chip Mother Board
2GB Ram DDR-3
250GBHard Disk
16"LCD Monitor
ATX Casing
DVD Writer
Keyboard&Mouse
Free Computer Table
39000/=

Intel 1.6GHz Processor
Atom Mother Board
1GB Ram DDR-2
250GBHard Disk
16"LCD Monitor
ATX Casing
Keyboard&Mouse
Free Computer Table

# பொன்சேகாவைக்கூட சர்வதேச நீதிமன்றில் முன்னிலைப்படுத்த அரசு அனுமதிக்காதாம்

கொழும்பு, மே.1

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவைக் கூட சர்வதேச யுத்தக் குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப் படுத்த அரசு ஒருபோதும் அனுமதிக்காது.

- இவ்வாறு ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இரத்தம் படிந்த வரலாற்றை மறந்து விட்டுத் தமிழர்களுடன் ஒன்றிணைந்து செல்வதற்கு நாம் தீர்மானித்துள்ள இந்த வேளையில் தமிழ் இனவாதிகளில் சிலர் கடந்த காலத்துக்கு மீளச் சென்று இராணுவத்தினருக்குத் தண்டனை பெற்றுக் கொடுக்க முனைகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஆவணாக்கல் மத்திய நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு -

பான் கீ மூனின் ஆலோசனைக் குழுவான தருஸ்மனின் அறிக்கையை ஐக்கிய நாடுகளின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இறைமையுடைய நாடொன்றின் உள்விவகாரங்களில் தலையிடுவதற்கு ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்துக்கு உரிமையில்லை. ஐக்கிய நாடுகளின் பிரகடனத்தின் 99 ஆவது ஷரத்தில் இந்த விடயம் தெளிவாக உள்ளது. அதனைப் பாதுகாப்பு சபைக்குத் தெரிவிக்கலாம் என்றும் எந்தவொரு அரசுக்கும் அழுத்தம் கொடுக்க முடியாது எனவும் தெளிவாக அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தில் இலங்கை இராணுவத்தினர் வெற்றி பெற்றார்கள். சிலசமயம் இந்த யுத்தத்தில் வேலுப்பிள்ளை பிரபாகரன் வெற்றி பெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும்.

இந்தியாவிலும் ஆயுதம் ஏந்திப் பலர் பிரிவினைவாதத்தை ஏற்படுத்தியிருப்பார்கள். விடுதலைப்புலிகள் என்ற பயங்கரவாதத்தைத் தோற்கடித்த இலங்கை அரசுக்கு உலக சமாதானத்துக்குப் பாரிய சேவையையே ஆற்றியது என்பதை நாம் கூறிக்கொள்கின்றோம்.

இந்த அறிக்கையை வெளியிட்டுப் பயங்கரவாதத்துக்குச் சேலைன் கொடுக்கின்றனர்- என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மண்ணில் வெற்றிகரமான புதிய வகுப்புகள் எமது நிறுவனத்தில் பின்வரும் கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

* கையடக்கத்தொலைபேசி திருத்தும் பாட நெறி(பெண்களும் இத்துறையில் ஆர்வம் காட்டுவதனால் **செல்வி கோபிகா** ஆசிரியையால் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. (ஆண்களுக்கான பாடநெறி Special Trainer Ganesh.K)
* ***அறிவிப்பாளர் பயிற்சிநெறி***(3 மாத காலம்) அரச, தனியார் வானொலி அறிவிப்பாளர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.
* Computer Hardware(பயிற்சி நிறைவு செய்யும் மாணவர்களுக்கு P4 கணினி இலவசமாக வழங்கப்படும். (Full Time 5 Days)
* **Diploma in Computer** (3 மாத காலம்)
* **Diploma in Sinhala** (3 மாத காலம்)
* **Diploma in English** (3 மாத காலம்)

இம்மூன்று துறைசார்ந்த ஆசிரியர் எமது நிறுவனத்துக்குத் தேவை

* முதலுதவி பயிற்சி நெறி (Two days Full Time சான்றிதழ் வழங்கப்படும்).

பதிவுகளுக்கு விரையுங்கள்..

**ELITE Computer and Bussines College**

இல. 1/5, மட வீதி, நல்லூர் ராஜதானி, யாழ்ப்பாணம். 0750445070

(3790)(28)

## ஆங்கில பாட ஆசிரியர்களுக்கு விரைவில் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி,மே.1

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆங்கிலபாட ஆசிரியர்கள் அல்லாத ஏனைய ஆசிரியர்களுக்கான ஆங்கில பயிற்சி வகுப்பு விரைவில் நடத்தப்படவுள்ளது.

மாகாண கல்வித் திணைக்கள அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழகத்தினால் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சி வகுப்புகளில் கலந்துகொள்பவர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சை இன்று காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலயத்துக்கு அருகில் உள்ள ஸ்தான சீ.சீ.த.க.பாடசாலையில் நடைபெறும். ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த அங்குள்ள ஆசிரியர்களைத் தெரிவுப் பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

## மோ.சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்து இருவர் காயம்

மோட்டார் சைக்கிளிலிருந்து தவறி வீழ்ந்து இரண்டு பெண்கள் காயமடைந்த வெவ்வேறு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. மழைபெய்து கொண்டிருந்த வேளையில் குடை பிடித்துக் கொண்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த வேளையில் தூக்கி வீசப்பட்டு ஒருவர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. கொடிகாமத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் வரணி, குடமியனைச் சேர்ந்த விஸ்வலிங்கம் இந்திராதேவி (வயது 58) என்பவரும் சாவகச்சேரி- தனங்கிளப்பு வீதி யில் இடம்பெற்ற சம்பவத்தில் தனங்கிளப்பைச் சேர்ந்த கந்தசாமி கமலாதேவி (வயது 48) என்பவருமே காயமடைந்தவர்களாவர். இந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அவசர கிசிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். (ம-207)

**Management Trainees**



Management Graduates

சந்தைப்படுத்தல், நிர்வாகம், கணக்கியல், வர்த்தகம் மற்றும் வியாபார முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பட்டம்பெற்ற, பகுத்தறிவு சிந்தித்து செயலாற்றும் சிறந்த தொடர்புகொள்ளும் திறமைகளுடைய பட்டதாரிகள் தேவை.

Apply;
KG Investment Ltd,
No: 545, Sri Sangaraja Mawatha,
Colombo - 10
Email : futurejob@kgrplanka.lk

( சி/578038)



எதிர்வரும் (06.05.2011) வெள்ளி அட்ஷயதிருதியை அன்று தங்க நகைவாங்கி உங்கள் வாழ்க்கையில் செல்வங்கள் அனைத்தையும் பெற அன்றையதினம் நாடுங்கள் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் **விலைக்கழிவு** வழங்கப்படும்.



# புதிய வினோ நகைப் பூங்கா

பிரதான வீதி, சங்கானை. (செலான் வங்கிக்கு அருகில்)

தொ.பே: 0215672588, 0776002588.



இணை நிறுவனம்: மொபைல் பிளாஷா

பிரதான வீதி, சங்கானை. (HNB Bank அருகில்)

தொ.பே:0779352902.

(சி/578114)

# கதிரமலைச் சிவன் கோயில் தேர் சிறப்புமலர்-01.05.2011

(சி/578115)



**முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று சுவாமி நண்பகல் 12 மணிக்குத் தேரேறி அடியவர்களுக்கு அருள் பாலிப்பார்**

### துன்பங்கள் நீங்கி மாயைகள் அகலும்



கதிரமலை ராச்சியத்தின் வரலாற்றுச் சிறப்புடைய சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் இன்று விநாயகர், சுப்பிரமணியர் சகிதம் அன்னை சுவர்ணாம்பிகாதேவி சமேதராக ஸ்ரீ பொன்னம்பலவாணர், சோமாஸ்க்கந்தர் ஆகிய மூர்த்திகள் மூன்று தேரில் ஆரோகணித்து தேர் உலாவரும் திருநாளாகும். இந்தக்காட்சி மூலம் துன்பங்கள் நீங்கி, மாயைகள் அகன்று புனிதத்துவமும் உண்மையும் பெறுமாறு தேவரும் முனிவரும் வந்து வாழ்த்தி, வடம்பிடிக்கும் அடியவர்கள் திருவருள்பெறும் சிறப்பு நாளாகும். அண்டசராசரங்கள் அருள் புரிந்து காக்கும் இறைமை, தேர் ஆரோகணித்து நடமாடக் கோயில் என்னும் பதத்துக்கு ஏற்ப எம்முடன் கூடவே வருவது போன்ற பெரு நிலையை உணர்த்துவது தேர் உலாவாகும். அனைவரும் மகிழ்வுடனும் நிறைவுடனும் வாழ ஸ்ரீ பொன்னம்பலவாண சுவாமியைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறோம்.

முத்தமிழ்க் குருமணி, சகலகாமசங்கிரகர்
சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள், ஸ்ரீகதிரமலைச் சிவன் தேவஸ்தானம், சுன்னாகம்.

### கேட்டதை அள்ளித் தருபவர்



கதிரமலையில் அருளாட்சி செய்யும் சிவனும் உமையும் சோமாஸ் கந்த மூர்த்தமாக இன்று அழகிய பூசாந்திர அமைப்பில் ''கலா கேசரியின்'' கை வண்ணத்தில் உருவான சித்திரத்தேரில் எழுந்தருளி அருள் பாலிக்க உள்ளார். கேட்டதை எல்லாம் எமக்கு அள்ளித் தருபவர் சுவர்ணாம்பிகை பாகர் பொன்னம்பலவாணேச்சரப் பெருமான். வருடத்தில் மூன்று முறை மூன்று வேளைகளில் இந்த ஆலயத்தில் மட்டுமே தேர் உற்சவம் நடை பெறுவது சிறப்பம்சங்களாகும். மார்கழித் திருவாதிரையில் நடராஜாப் பெருமான் அதிகாலையிலும் சித்திரப் பெருவிழாவில் சோமஸ்கந்தப் பெருமான் பகல் வேளையிலும் ஆடிப்பூரத் தேர்த்திருவிழாவில் அம்பாள் இரவு வேளையில் எழுந்தருளி தேரில் அருள்பாலிப்பது சிறப்பம்சங்களாகும். எல்லா வகையிலும் சுன்னை நகரில் சிறப்பொலிவுடனும் கோபுரத்துடனும் காட்சி தரும் ஆலயமே இதுவாகும்.சிவஸ்ரீ சோமஸ்கந்த குருக்கள், சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோரின் நெறிப்படுத்தலில் தேவஸ்தான இளவரசாக சிவஸ்ரீ ச.ஸ்ரீகாந்தக் குருக்கள் ஆலயத்தின் பூசைகளைச் சிறப்பாக நடத்துவது சிறப்பம்சமாகும். எல்லாச் சிறப்பும் பொருந்திய சுன்னை நகர் கதிரமலையாரின் சித்திரத்தேர் வடம் பிடித்தால் எல்லாச் செல்வமும் கிடைக்கும் எனப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

மூ.செல்வஸ்தான்,
அதிபர், ஆலய தொண்டர் சபை சார்பில்.

### எண்ணியது எல்லாம் கிடைக்கும்



வெள்ளிமலை என்னும் பொருள்படும் சுன்னாகம் நகரில் கதிரமலை என்னும் புனித பதியில் பல்லாண்டுகால வரலாற்றையும் மேன்மையையும் கொண்டு வில்வ விருக்ஷத்தை ஸ்தல விருக்ஷமாகவும் சுவர்ணாம்பிகைத் தாயை இடப்பாகம் கொண்டும் மனம், வாக்கு, காயங்களினால் திரிகரண சுத்தியுடன் வழிபடும் அடியவர் தமை ஆட்கொண்டு நல்லருள் புரியும் பொன்னம்பலவாணேஸ்வரப் பெருமான் 01.05.2011 இன்று ஞாயிற்றுக்கிழமை விநாயகப் பெருமான், பாலமுருகப்பெருமான் சகிதம் சோமஸ்கந்த மூர்த்தியாகச் சித்திரத் தேரில் ஆரோகணித்து நல்லருள் பாலிக்கவுள்ளார். விநாயகர் அருளால் வினை தீர்க்கவும் தெளிந்த நல்லாசியும் முருகனருளால் பிள்ளைச் செல்வமும் தாயினருளால் தீர்க்க சுமங்கலியான வாழ்வும் பொன்னும் பொருளும் பொன்னம்பலவாணேஸ்வரப் பெருமானின் திருவருளால் எண்ணுகின்ற அனைத்தும் இனிதே முத்தேர் தரிசனம் செய்த புண்ணியத்தினால் கிடைக்கப்பெற்று வாழ வாழ்த்திப் பெருமான் கழல் இறைஞ்சி ஆசிர் வதிக்கின்றோம்.

மஹோற்சவ பிரதம குரு ''சிவாச்சார்யரத்னம்'' சிவஸ்ரீ. சோம.ஸ்ரீகர குருக்கள்.

### எமது குலதெய்வம்



எமது குல தெய்வமாகிய ஸ்ரீ பொன்னம்பலவாண சுவாமி தேவஸ்தானத்தின் முத்தேர் பவனி எல்லோருக்கும் நல்ல பலனையும் பெருமையையும் தருவதாகும்.விழா சிறப்புற குருமார்கள், உபயகாரர்கள், அடியார்கள், தொண்டர்கள் ஆகியோரின் பணி போற்றுதற்குரியதாகும். எல்லோருக்கும் ஸ்ரீ பொன்னம்பலவாண சுவாமி திருவருள் கிடைக்க குலதெய்வத்தை இறைஞ்சிப் போற்றுகின்றேன்.

திரு.ச.வந்தப்ரியன் சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கை சப்பிரகமுவ
பல்கலைக்கழகம், இலங்கை.

### நல்லை ஆதீன குருமுதல்வரின் அருளாசிச் செய்தி



சுன்னாகம் கதிரமலைச் சிவன் கோயிலில் இன்று தேர்த்திருவிழா. எல்லாம் வல்ல பரங்கருணைத் தடங் கடலாகிய சிவபெருமான் இன்று அழகான ரதத்திலே அழகாக வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சி பக்திமயமாக இருக்கும். அழகிய ரதத்திலே ஆரோகணித்து அடியார் மனங்குளிரக் காட்சிதருகின்ற தனித்துவமான அழகு காணக் கண்கோடி வேண்டும். சுன்னாகம் வாழ்கின்ற அனைத்து அடியவர்களுக்கும் நலமே வாழப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். தம்மை வழிபடும் அடியாருக்கு வருகின்ற துன்பங்களை நீக்கித் திருவருள் புரியுமாறு அற்புதமான ஸ்ரீ கதிரமலையைச் சார்ந்த சிவனடி பணிந்து போற்றி செய்வோமாக. எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானின் புகழ்பாடி இயல்பாக வாழ்ந்து சதுர்வித புருஷோர்த்தங்களையடைந்து வாழ்க்கை செழிப்புற்றோங்கிச் சிறப்புற வாழ்த்துகிறோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஆதீன குருமுதல்வர்,
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.

### அருள்பாலிக்கும் கதிரமலைச் சிவன்



''கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற ஔவையாரின் வாக்குக்கு இணங்க செல்வச் செழிப்புமிக்க சுன்னாகம் நகரில் சுவர்ணாம்பிகை சமேத பொன்னம்பலவாணேஸ்வரப் பொருமானாகக் கதிரமலை சிவன் அருள்பாலிக்கின்றார். புராதன வரலாற்றுப் புகழ்மிக்க காலத்திலேயே இந்த ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்பைக் காண்பதற்கு உக்கிரமாசிங்க மன்னன் ஆட்சி புரிந்த காலத்தில் கதிரமலை சிவன்பற்றி குறிப்பிடப்பட்டமையிலிருந்து இந்த ஆலயத்தின் ஆரம்பக் கட்டத்தைக் காணமுடியும். சிறந்த ஆகம முறைப்படி கிரியை அபிஷேக ஆராதனைகள், மகா உற்சவங்கள் இடம்பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது. சித்திரை மஹோற்சவம் சிவனுக்குரியது. 13 நாள்களைக் கொண்ட திருவிழாவில் பக்தி முத்தி நாயனார் திருவிழா வானது யாழ்ப்பாணத்தில் இந்த ஆலயத்தில் மட்டும் இடம்பெறுவது சைவமும் தமிழும் மிளிர வைத்த நாயன்மார்களின் பெருமையைப் பறைசாற்றுவதுடன் இளைய தலைமுறையினரும் பின்பற்ற வழி சமைக்கின்றது.''குருவும் தாரமும் அமைவது இறைவன் கொடுத்த வரம்'' என்பதற்கமைவாக எமது பிரதேச மக்களுக்குச் சிறந்த குருவருள் கிடைக்கப்பெற்றது பெரும்பாக்கியமாகும். சூரியர், சந்திரர் போன்று இந்த ஆலயத்தில் இருபெரும் குருக்கள்மார்கள் உள்ளார்கள். அவர்கள் எமது பிரதேசத்தில் மட்டுமன்றி அகில இலங்கை ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் தமது பணியினை மேற்கொள்வதுடன் எமது ஆலயத்தையும் பிரதேசத்தையும் உலகறியக் காரணகர்த்தாவாக அமைகின்றார்கள். இவர்களின் வாரிசுகளான புத்திரர்களும் சூரிய சந்திரர்களின் வழிகாட்டலில் சிறந்த முறையில் செயற்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.சமுதாய வாழ்க்கையில் மதம் இன்றியமையாதது என்பதற்குப் பண்டைக் காலங்களிலிருந்து சமுதாய வளர்ச்சியில் சமயம் எத்தகைய செல்வாக்குச் செலுத்தியது என்பது யாவரும் அறிந்ததே. இன்றைய கால கட்டத்தில் அதிக தொழில்நுட்ப வளர்ச்சியின் தன்மையே இளைய சமுதாயத்தினர் நவநாகரிகம் என்ற பெயரில் முன்னைய காலங்களுடன் ஒப்பிடும்போது பக்தியுடன் ஆலய வழிபாட்டை மேற்கொள்வது என்ற தன்மை குறைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. இத்தகைய தன்மை இருப்பினும் எமது ஆலயத்தில் பாரம்பரிய தன்மைகளைப் பேணுவதை கிரியைகளிலும் உற்சவங்களிலும் காணக்கூடியதாகவுள்ளது.

செல்வி யோகேஸ்வரி நடராஜா, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்,
நன்னடத்தை சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், வட மாகாணம்.

### அக்கிரமமும், அநியாயமும் ஒழியட்டும்

சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவான இன்று சொர்ண[illegible] அருட்காட்சி தருகிறார். மஹோற்சவத்தில் இரதோற்சவம் அழித்தலைக் குறிப்பதாகும். ஆகவே எம்பெருமான் இன்று ரதத்தில் எழுந்தருளி அக்கிரமங்களையும் அநியாயங்களையும் அழித்தொழிக்கப் புறப்படுகிறார். அவரது பொற்பாத கமலம் பணிந்து [illegible] இன்றைய நன்னாளில் அடியார் பெருமக்கள் அனைவரும் எம்பெருமானின் அருளால் ஷேமமுறப் பிரார்த்தித்து ஆசி நல்குவதில் பெருமகிழ்ச்சி[illegible]றேன்.

திருமதி ச.மஞ்சுளாதேவி, பிரதேச செயலர், உடுவில்.

**தேவஸ்தானத்தார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கு அல்லைப்பிட்டியில் எழுபது வீடுகள்

## ஆயர் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம்; மே. 1

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென கியூடெக்- கரித்தாஸ் நிறுவனத்தால் அல்லைப்பிட்டியில் நிறுவப்பட்ட70 வீடுகள்நேற்று சனிக்கிழமை குருநகர் பகுதியைச் சேர்ந்த மக்களிடம் கையளிக்கப்பட்டன.

அல்லைப்பிட்டி வெண்புரவி குடியிருப்பில் நடைபெற்ற இந்த கையளிப்பு நிகழ்வின் போது யாழ்.மறை மாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை வீடமைப்புத் திட்டதின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைத்தார். முதலாவது வீட்டை யும் திறந்து வைத்து உரிமையாளருக்கும் குடும்பத்தினருக்கும் ஆசி வழங்கினார்.

குடியிருப்புக்கள் அமைந்துள்ள விதியில் இருந்து யாழ். ஆயர், ஊர்காவற்றுறைக் கடற்படைத் தளபதி கப்டன் திஸநாயக்க, குருமார்கள், ஏனைய பிரமுகர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர், அவரைத் தொடர்ந்து கரித்தாஸ் நிறுவனத்தின் தேசிய இயக்கு நர் அருட்திரு ஜோர்ஜ் சிகாமணி, கரித்தாஸ் நிறுவனத்தின் யாழ். மாவட்ட முன்னாள் இயக்குநரும் ஊர்காவற்றுறை பங்குத் தந்தையுமான அருட்திரு சி.சி ஜெயக்குமார், நெய்தலம் இயக்குநர் அருட்திரு ஜெயசேகரம், ஊர்காவற்றுறை கடற்படை இணைப் பதிகாரி கப்டன் திஸநாயக்கா உட்பட விருந்தினர்களால் பன்னிரண்டு வீடுகள் திறந்து வைக்கப்பட்டன.



ஏனைய வீடுகளுக்கான திறப்புகள் வீடுகளுக்குரிய ஆவணங்கள் என்பவையும் உரியவர்களுக்கு வழங்கப்பட்டன.

நிகழ்வில் செடெக் நிகழ்ச்சித் திட்டப் பணிப்பாளர் கே.தெய்வேந்திரராஜா கிராம அலுவலர் எஸ்.ரட்ணேஸ்வரன் உட்பட விருந்தினர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் உரையற்றினார்கள்.

குருநகர் யாகப்பர் பங்கைச் சேர்ந்த சிறுமிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(த-7)

# கே.கே.எஸ். வீதி மோசமாகச் சேதம்

வலி. வடக்கு, மே.1

யாழ்ப்பாணம் கே.கே. எஸ். வீதி மிகவும் மோசமாகச் சேதம் அடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றது.

கடந்த வாரம் முதல் பெய்து வரும் மழை காரணமாக வீதிகளில் வெள்ளம் தேங்குவதால் வீதிகள் மோசமாகச் சேதமடைந்து வருகின்றன. அதிலும் கே. கே.எஸ். வீதியின் நிலைமை படுமோசமாக உள்ளது. இதன் காரணமாக இந்த வீதியால் பயணிக்கும் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களின் மத்தியில் வாகனங்களைச் செலுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் சில இடங்களில் விபத்துக்களும் நிகழ்ந்துள்ளன.

அத்துடன் வீதியில் தேங்கியுள்ள வெள்ளத்தை வாகனங்கள் அடித்துச் செல்வதால் பயணிகளும், மாணவர்களும் வெள்ள நீரில் நனைய வேண்டிய நிலைமையும் ஏற் படுகின்றது.

வீதியில் காணப்பட்ட சிறிய சேதங்கள் திருத்தப்படாமையால் அது தற்போது பெய்த மழையை அடுத்துப் பெரிய கிடங்குகளாக மாறி யுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-86)

# பதவிநிலை அலுவலர்களுக்கு பஸ்; கடை நிலை ஊழியர்கள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே. 01

வடக்கு மாகாண சபையின் திணைக்களங்களில் கடமை புரியும் அலுவலர்களின் போக்குவரத்துக்காகச் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்கள் பதவிநிலை உத்தியோகத்தர்களின் நலனைக் கருத்திற் கொண்டு சேவையில் ஈடுபடுவதால் கீழ் நிலை உத்தியோகத்தர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் திணைக்களங்கள் யாவும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் திருகோணமலையிலிருந்து இங்கு இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகின்றன.

இந்தத் திணைக்களங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரதும் நலன் கருதி அவர்களுடைய போக்குவரத்துக்காக பஸ் சேவை நடைபெறுகிறது. இந்த பஸ் மாலையில் பதவிநிலை மற்றும் நடுநிலை உத்தியோகத்தர்களின் கடமை நிறைவுற்றதும் அவர்களை மட்டும் ஏற்றிக் கொண்டு சென்று விடுகிறது.

இதனால் அரை மணி நேரம் கழித்து தமது கடமையை முடிவுறுத்தும் கீழ்நிலை உத்தியோகத்தர்கள் தாம் பின்னர் வேறு பஸ்களிலேயே பயணம் செய்ய வேண்டியுள்ளதாகப் பாதிக்கப்பட்ட கீழ் நிலை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

அரை மணி நேரத்துக்கு முன்னர் அலுவலகத்தில் இருந்து வெளியேற தற்போது உள்ள கையொப்ப நடைமுறை இடமளிக்காது எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் கவனமெடுத்து மேற்படி பஸ் சேவையைக் கீழ் நிலை உத்தியோகத்தர்களின் கடமை முடிவுறும் நேரத்தில் ஆரம்பிக்க வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-288)

# வீட்டுத்திட்டத்துக்கு விரைவில் மின்சாரம்

யாழ்ப்பாணம், மே. 1

அல்லைப்பிட்டி வெண்புரவி குடியிருப்புப் பகுதிக்கு விரைவில் மின்சாரம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் நிக்கொட் நிறுவனத்தின் உதவியுடன் மின்விநியோகச் சேவைக்கென 7 மில்லியன் ரூபா கிடைத்துள்ளதாகவும் நெய்தலம் இயக்குநர் அருட்திரு எஸ்.ஜெயசேகரம் அடிகளார் தெரிவித்தார்.

வெண்புரவி குடியிருப்புகள் சுனாமிப் பாதிப்புக்குள்ளான குருநகர் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு கரித்தாஸ் நிறுவனத்தால் அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

(த-7)

# தங்கூசி வலைகள் பயன்படுத்துவதை மீனவர்கள் உடன் கைவிடவேண்டும்

## கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே. 1

யாழ்.குடாக் கடல்நீரேரிப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும் தொழிலாளர்களில் சிலர் தடை செய்யப்பட்ட தங்கூசிவலையைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

தங்கூசி வலையைப் பயன்படுத்துபவர்கள் உடனடியாக அதனைக் கைவிட வேண்டும். தவறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தங்கூசி கடல் வளத்தை அழிக்கும் தன்மை வாய்ந்ததால் அது இலங்கையில் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் யாழ். குடா கடல் நீரேரிப் பகுதியில் சிலர் இந்த வலையைப் பயன்படுத்தி வருகின்றனர் என அங்கு தொழிலில் ஈடுபடும் ஏனைய மீனவர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட சில மீனவர்கள் சாதாரண வலைகளுடன் கடலுக்குச் செல்கின்றார்கள். ஆனால் அவர்கள் அங்கு ஏற்கனவே தங்கூசி வலைகளை வீசியிருப்பார்கள்.அவற்றைப் பாவித்து அகப்பட்ட மீன்களை எடுத்த பின்னர் தங்கூசி வலைகளை கடலில் அடையாளப்படுத்தப்பட்ட ஓரிடத்திலோ சிறு தீவிலோ மறைத்து விட்டுக் கரைதிரும்புகின்றனர்.

இவ்வாறு தங்கூசி வலைகள் கரைக்குக் கொண்டு வரப்படாமல் மீன்பிடிக்குப் பயன்படுத்தப்படுகின்றது. எனவே சட்டத்துக்கு முரணான வகையில் தங்கூசி வலைகளைப் பயன்படுத்துபவர்கள் உடனடியாக அதனைக் கைவிடுதல் வேண்டும். தவறும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்- என்றார். (த-4)

# கீரிமலை நகுலேஸ்வரா ம.விக்கு புதிதாக இரண்டு மாடிக் கட்டடம்

சுன்னாகம், மே. 1

கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயம் வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இந்தப் பாடசாலையில் ஆய்வு கூடத்துடன் கூடிய இரு மாடி வகுப்பறைத் தொகுதியொன்று அமைக்கப்படவுள்ளதுடன் நீர்த்தாங்கியும் மலசலகூடங்களும் அமைக்கப்படவுள்ளன.

இதற்கென 82 லட்சம்ரூபா பெறுமதியான கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் இந்தப் பாடசாலையின் இரு மாடிக் கட்டடம் உட்பட மூன்று கட்டடங்கள் தரைமட்டமாகி அழிந்த நிலையில் காணப்படுகின்றன. இந்தப் பாடசாலை இடம்பெயர்ந்த நிலையில் சண்டிலிப்பாயில் இயங்கி வருகிறது.

தற்போது கீரிமலை நகுலேஸ்வரம் கிராம சேவகர் பிரிவில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாடசாலையையும் சொந்த இடத்தில் இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இதனையடுத்து மாவைகலட்டி சனசமூக நிலையத்தினர் பாடசாலையின் ஒரு பகுதியைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தனர்.

தற்போது வடக்கு மீளெழுச்சித் திட்டத்தின்கீழ் காசுக்கு வேலை செயற்றிட்டதில் இந்தப் பாடசாலையின் ஏனைய பகுதிகள் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன் சேவாலங்கா நிறுவனம் பாடசாலைக் கிணற்றைப் புனரமைப்புச் செய்துள்ளது.

மக்கள் படிப்படியாக மீளக்குடியேறி வருவதையடுத்து பாடசாலையைச் சொந்த இடத்தில் இயக்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினரொருவர் தெரிவித்தார.

(த-38)

# சுன்னாகம் வாழ்வகத்துக்கு 'பிறெய்ல்' தமிழ் அகராதி

சுன்னாகம், மே. 1

விழிப்புலனற்றவர்கள் பயன்படுத்தும் 'பிறெய்ல்' தமிழ் அகாராதித் தொகுதி சுன்னாகம் விழிப்புலனற்றோர் வாழ்வகத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இந்திய மொழிகளில் முதன் முதலாகத் தமிழ்மொழியிலேயே 'பிறெய்ல்' அகராதி ஆக்கப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள க்ரியா நிறுவனம் மதுரை விழிப்புலனற்றோர் சங்கத்துடன் இணைந்து இதனை உருவாக்கியுள்ளது.

52 தொகுதிகள் கொண்ட இந்த அகராதி க்ரியா இராம கிருஷ்ணனால் விழிப்புல வலுவிழந்தோர் வாழ்வகத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அகராதித் தொகுதியைப் பெற்றுத் தந்த அறிவோர் கூடல் இயக்குநரும், க்ரியா அகராதியின் இலங்கைச் சொற்றொகுதித் தொகுப்பாளருமான இ.து.குலசிங்கம் அகராதியை வாழ்வக சமூகத்திடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் இந்த அகராதி விழிப்புலனற்ற பிள்ளைகளின் கல்வியில் இன்றியமையாத பங்களிப்பை நல்கும். இது எமக்குக் கிடைத்த சிறந்த வரப்பிரசாதமாகும் எனக் குறிப்பிட்டார். (த-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில சிங்கள வகுப்புக்கள்

பேச்சு ஆங்கிலம், சிங்களம்
(பேச,எழுத, வாசிக்கக் கற்பிக்கப்படும்)

**SPOKEN ENGLISH & SINHALA**
**(with grammar , spaeking, reading, writng skills)**

for deratils
163B,
Hospital Road,
Jaffna,
0770856291 (21-43)-3623)



## மனை விற்பனைக்குண்டு

மாலிசந்தி, அல்வாய் வீதி "யாதவன் SERVICE STATION"க்கு முன்னால் மேல்மாடி வீடு 3 பரப்பு 2 குளி காணியுடன் உடனடி விற்பனைக்கு உண்டு. மாலிசந்தியிலிருந்து 1 கி.மீ. தூரம் இருக்கும். 01.05.2011 ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 - பி.ப.4.30 வரையும் முன்னறிவித்தல் இன்றியும், கிழமை நாள்களில் முன்னறிவித்தலுட னும் பார்வையிட லாம். தொடர்பு: பாஸ்கரன்
தொலைபேசி இல.021 2262119


## காளான் உண்ட இருவர் ஆஸ்பத்திரியில்

அண்மையில் பெய்த மழைக்குப் பின் முளைத்த காளானைச் சமைத்துச் சாப்பிட்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பாதிக்கப்பட்டனர். அவர்கள் பூநகரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பூநகரி நெடுங்குளத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் கணேஸ்வரன் (வயது-24), சுப்பிரமணியம் சுமதி (வயது-23) ஆகியோர்களே சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஒ-323-207)


## REGISTERED MEDICAL OFFICER

**AVILABLE FOR PART TIME / FULLTIME LOCUM**
**CONTACT - 0213205992, 0779935844.**



## ஹோமியோபதி அக்குபஞ்சர் மருத்துவ சிகிச்சை

சகலவித நோய்களுக்கும் எந்தப் பக்கவிளைவின்றி சிகிச்சை பெற
நேரம் காலை 9.00 - 11.00 மாலை 4.00 - 6.00
தொடர்புகொள்க:
டாக்டர்: S.N.கதிர்செல்வன்
DHM. M. D Regd. No.SLHMC 1174
இல. 11, குகன் வீதி, நெடுங்குளம்,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
Tel - 0770221119


## தென்மராட்சியில் மீள்குடியமராத மக்களுக்கு 7ஆம் திகதி கூட்டம்

தென்மராட்சி,மே.1

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இதுவரை மீளக் குடியமர அனுமதிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கான கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, கரம்பகம், ஒட்டுவெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களை இதில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கிழக்கு இடம்பெயர்ந்தோர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு மீள்குடியமர்வு பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளதால் அப்பிரதேச குடியிருப்பாளர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-207)

## ஆயுள்வேத பாதுகாப்புச் சபைக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே.1

யாழ்.பிரதேசசெயலகத்தின் ஆயுள்வேத பாதுகாப்புச் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ். பிரதேசசெயலகப் பணிமனையில் சபைத் தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.இராகவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் கலந்து கொள்வார். அத்துடன் விசேட கருத்துரைகளும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் இடம்பெறும். (ற)


## பதினாறாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1932.06.27
இறப்பு: 1995.05.01

திருமதி
நீற்ரா செபஸ்ரியன்
(இளைப்பாறிய ஆசிரியை)

மௌனங்கள் வார்த்தைகளாக
மலர்ந்த உம் புன்னகையில்
வாழ்ந்த காலங்கள்
மறுபடியும் வந்திடுமா?
நீங்கள் இல்லாத எம் வாழ்வு
வெறுமையிலும் வெறுமையாய்
ஆண்டுகள் பதினாறு ஓடிவிட்டனவே!

என்றும் உம்
நினைவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல.27, மாட்டின் லேன்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8195 (48,21,25)



## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி, விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: எஸ்.எஸ். நாதன், 16/3, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.தொ.பே: 0776146434



## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர்.



## வீடு விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவுக்கு அண்மையில் 639/4, நாவலர் வீதி என்னும் முகவரியிலுள்ள 2 ¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள வீடு விற்பனைக்குண்டு. சுற்றுமதிலுடன் கூடியது.
தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி இலக்கம்:- 0772267191.



## விற்பனைக்கு

1.போட்டோப் பிரதி இயந்திரம்
TOSHIBA -1560-22"X 22"
2. கடைக் கவுண்டர் மேசை - 03 லாச்சிகள் 02 தட்டுக்கள் தொடர்பு: 0772718943



## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2kg மேல் வளர்ச்சியடையக்கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 04.05.2011 விநியோகிக்கப்படும் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும் விலை 90/-. கூடுதல் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். மீண்டும் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.
★ ராஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ துர்க்கா பாம், ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
TP.No - 021 2222867, 0776090926 (3602)



## Metro PC SYSTEMS

ஆஹா!
மிகவும் மலிவு விலையில் மூன்று நாட்கள் மட்டுமே

T.P 0779591134 175 / 3 KASTHURIYAR ROAD JAFFNA
T.P 0779591134 175/3 Kasthuriar Road Jaffna

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 01GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
38650/=
4GB FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 01GB DDR 3
500GB SATA HDD
15.6" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
37900/=
4GB FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
42000/=
FREE

Intel Core i3 3.06GHZ Processor
Intel H55 CHIPSET M/B
Ram 04 GB DDR 3
1000 GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
61500/=
FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
40300/=
4GB FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
45650/=
FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
44500/=
FREE

Intel Dual Core 3.2GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
44500/=
4GB FREE

Intel Dual Core 3.2GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
43500/=
4GB FREE

Intel Core i3 3.06GHZ Processor
Intel H55CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
52500/=
4GB FREE

Intel Core2duo 2.93GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
51700/=
FREE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடையைக் களவாடி விற்றவருக்கு நீதிமன்றத்தால் தண்டமும் சிறையும்

கிளிநொச்சி,மே.1

கிளிநொச்சி கோவிந்தன் கடைச் சந்திப் பகுதியில் இருந்து கால்நடை ஒன்றைக் களவாடி விற்பனை செய்த நபருக்கு ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டப் பணமும் ஆறுமாத காலம் ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியைச் சேர்ந்த ஒருவரின் வளர்ப்புக் கால்நடையினைச் சட்ட விரோதமான முறையில் விற்பனை செய்த ஒருவருக்கும் அதனை வேறு இடத்துக்குக் கொண்டு சென்ற இருவருக்கும் எதிராக கிளிநொச்சி பொலிஸாரால் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பான விசாரணை கடந்த 27 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கினை விசாரித்த மாவட்ட நீதிபதி முதலாவது குற்றவாளிக்கு ஆயிரத்து ஐநூறு ரூபா தண்டப் பணம் விதித்ததுடன் பாதிக்கப்பட்டவருக்கு 5 ஆயிரம் ரூபா வழங்குமாறும் உத்தரவிட்டார். மேலும் குறித்த நபருக்கு ஆறுமாத கால ஒத்தி வைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஏனைய சந்தேகநபர்கள் இருவருக்கும் எதிரான வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (க-6)

# திருடர் தொல்லையால் மக்கள் பீதியில்

முல்லைத்தீவு,மே.1

முல்லைத்தீவு மாவட்டத்தில் திருடர்களின் தொல்லை அதிகரித்துக் காணப்படுவதால் மக்கள் பயத்துடன் இரவைக் கழிக்க வேண்டிய நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் கத்தி, தடிகள் என்பனவற்றுடன் நள்ளிரவு வேளையில் முள்ளியவளை நாவற்காட்டுப் பகுதியிலுள்ள வீடொன்றில் புகுந்த கொள்ளையர்கள் வீட்டிலுள்ளோரைப் பயமுறுத்தி வீட்டிலிருந்த பெண்கள் அணிந்திருந்த நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர். இதனால் மக்கள் மத்தியில் பெரும் பீதி ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இந்த மக்கள் தற்போது திருடர்களின் தொல்லைகளுக்கு ஆளாகி வருகின்றனர். எந்த நேரத்தில் எது நேருமோ என்ற அச்ச உணர்வு மக்கள் மத்தியில் வேரூன்றிக் காணப்படுவதாகத் தெரிய வருகின்றது. பொருள்களை மட்டுமல்ல தமது உயிரைக் கூட இழக்க வேண்டிய பீதியான சூழலில் வாழவேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டுள்ளதாக இங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர். (க-500)

# மன்னார் புதுக்குடியிருப்புச் சந்தியில் வான் மோதியதால் இளைஞர் பலி

மன்னார்,மே.1

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள புதுக்குடியிருப்புச் சந்தியில் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் புதுக்குடியிருப்புக் கிராமத்தைச் சேர்ந்த 25 வயதான முகமட் முகைதீன் எனும் இளைஞர் உயிரிழந்துள்ளார்.

மன்னாரில் இருந்து அருட்தந்தை ஒருவரினால் செலுத்திச் செல்லப்பட்ட வான் புதுக்குடியிருப்பு சந்தியில் விதிக்கு அருகாமையில் அமர்ந்திருந்து கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த இளைஞன் மீது மோதியதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உடனடியாக குறித்த இளைஞர் மன்னார் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட போதும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட வாகனத்தை செலுத்தி வந்த அருட்தந்தை வியாழக்கிழமை மன்னார் நீதிமன்ற நீதிவான் திருமதி கே. ஜீவராணி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது குறித்த அருட்தந்தையை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அவர் உத்தரவிட்டார்.

விபத்தில் உயிரிழந்த இளைஞரது ஜனாஸா நல்லடக்கம் கடந்த வியாழக்கிழமை மாலை புதுக்குடியிருப்பு மையவாடியில் இடம் பெற்றுள்ளது. (க-601)

## விருந்தினர் வருகை...



அணிவகுப்பு: கிளிநொச்சி, புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் இல்ல விளையாட்டுப் போட்டியின்போது முதன்மை விருந்தினரான பொறியியலாளர் க.கடம்பசிலன் மற்றும் விருந்தினர்கள் பாடசாலை சமூகத்தால் மைதானத்துக்கு அழைத்து வரப்படுகின்றனர். (410)

# மின்சார விநியோகத்தில் தாமதம்; நம்பிக்கையிழந்த மக்கள்

முல்லைத்தீவு,மே.1

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள உள்ளூர்க் கிராமங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படாமையால் மக்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதிகளுக்கு வருகை தந்த அமைச்சர்கள் உள்ளூர்க் கிராமங்களுக்கு "மின்சாரம் வழங்கப்படுமென வழங்கிய உறுதிமொழியின் பிரகாரம் மக்கள் தமது வீடுகளுக்கான மின்சார இணைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்துவிட்டுக் காத்திருக்கின்றனர். வியாபார நிலையங்களிலும் இவ்வாறே நிலைமையுள்ளது. மின்சார சபையினர் மின்னிணைப்பு வழங்குவதற்கான விண்ணப்பங்களைப் பெற்றபோதும் இது வரை மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுத்ததாகத் தெரியவில்லையெனக் கூறப்படுகின்றது.

மக்கள் மீள்குடியமர்ந்துள்ள நிலையில் அவர்களின் வாழ்வாதாரங்கள் சீர்படுவதற்கான நடவடிக்கைகள் தற்போதுதான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் மக்களின் அத்தியாவசிய தேவையான மின்சாரத்தை வழங்குவதில் அதிகாரிகள் பராமுகமாக இருப்பது மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இங்கு வருகைதரும் அமைச்சர்களின் வாக்குறுதிகள் கூட நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்படுவது அவர்கள் மத்தியில் அவநம்பிக்கையைத் தோற்றுவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-500)

# பூநகரி கோட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

பூநகரிக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்த் தினப் போட்டிகள் பூநகரி ம.வியில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.

மேற்படி போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:

**பிரிவு - 1**

**வாசிப்பு**

ப.சுதர்சினி - பூநகரி ம.வி, உ. நிசாந்தினி - கறுக்காய்த்தீவு ம.வி, கு. இந்துசா - சுண்ணாவில் அ.த.க. பாடசாலை.

**பேச்சு**

மோ. அர்ச்சனா - கறுக்காய்த்தீவு ம.வி, பி.தர்சிகா - கிராஞ்சி அ.த.க.பாடசாலை, த.சுலக்சன் - முழங்காவில் ம.வி.

**இசையும் அசைவும்**

ந.பிரிந்தா - ஜெயபுரம் ம.வி, ந. நர்மதா - வேரவில் இ.ம.வி, வே. அமலவிந்துஜா - இரணைதீவு றோ.க.த.க.

**கதை கூறல்**

பி.யர்சிகா - சுண்ணாவில் அ.த.க.பாடசாலை, த.தனுசன் - செல்லியாதீவு அ.த.க.பாடசாலை, க.கயாளினி - ஞானிமடம் அ.த.க.பாடசாலை.

**பாவோதல்**

ஜெ.கிருஷாந்தினி - ஞானிமடம் அ.த.க, த.சிவநிதர்சன் - செல்லியாதீவு அ.த.க.

**பிரிவு 2 வாசிப்பு**

அ.அனுசியா - நாச்சிக்குடா அ.த.க, உ.சயந்தா - ஞானிமடம் அ.த.க, பி.மயூரி - செல்லியாதீவு அ.த.க.

**பேச்சு**

அ.சாளினி - கிராஞ்சி அ.த.க, இ.வேணுகா - பூநகரி ம.வி, பு. குவேசாந் - முழங்காவில் ம.வி.

**தனி நடனம்**

கி.பதீபா - முழங்காவில் ம.வி, அ.சசிரேகா - கறுக்காய்த்தீவு ம.வி, உ.வினித்தா - பூநகரி ம.வி.

**பாவோதல்**

த.புவிசாளினி - ஞானிமடம் அ.த.க, பௌ.தனுசா - செல்லியாதீவு அ.த.க, செ.விஜிதா - கிராஞ்சி அ.த.க.

**தனி இசை**

ச.சாளினி - ஜெயபுரம் ம.வி.

**பிரிவு - 3 பாவோதல்**

ர.ஜிந்துசா - ஜெயபுரம் ம.வி, த.தனுசியா - செல்லியாதீவு அ.த.க

**தனி இசை**

த.தேனுகா - ஜெயபுரம் ம.வி, ச.துளசிகா - கறுக்காய்த்தீவு ம.வி, மு.மரிய அஜந்தா - இரணைதீவு றோ.க.த.க. பாடசாலை.

**பேச்சு**

ஈ.கீர்த்திகா - பூநகரி ம.வி, சி. பிரிந்தா - முழங்காவில் ம.வி.

**தனிநடனம்**

கா.கௌசல்யா - முழங்காவில் ம.வி, கி.கௌசி - இரணைதீவு றோ.க.த.க.

**பிரிவு - 4**

**பாவோதல்**

வி.சரண்யா - பூநகரி ம.வி.

**பேச்சு**

அ.கார்த்திகா - பூநகரி ம.வி, வி.எழிலினி - கறுக்காய்தீவு ம.வி, அ.கேதீஸ்வரி - முழங்காவில் ம.வி.

**தனி இசை**

ம.சுவரணா - பூநகரி ம.வி, இ.வாசுகி - ஜெயபுரம் ம.வி, தே.தயான்சி - முழங்காவில் ம.வி.

**பிரிவு -5**

**பேச்சு**

வி.சிந்தாதேவி - கறுக்காய்தீவு ம.வி, தெ.தேனுகா - முழங்காவில் ம.வி.

**(குழு) நடனம்**

ஜெயபுரம் ம.வி, இரணைதீவு ம.வி, பூநகரி ம.வி.

**(குழு) இசை**

ஜெயபுரம் ம.வி.

**(குழு) நாட்டார் பாடல்**

முழங்காவில் ம.வி, இரணைதீவு றோ.க.த.க.பாடசாலை.

**(குழு) வினாடி வினா**

வேரவில் இ.ம.வி, பூநகரி ம.வி.

**வில்லுப்பாட்டு**

நல்லூர் ம.வி.

**விவாதம்**

பூநகரி ம.வி, வேரவில் இ.ம.வி.

**சமூக நாடகம்**

செல்லியாதீவு அ.த.க பாடசாலை (க)

# நோயால் ஆடுகள் இறப்பு

பூநகரி,மே.1


கிளிநொச்சி மாவட்டம் பூநகரியின் சில கிராமங்களில் ஆடுகள் ஒருவகை நோயால் பீடிக்கப்பட்டு இறப்பதாகக் கிராமவாசிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

செல்விபுரம், ஆலங்கேணி, நல்லூர், தம்பிராய், செட்டிய குறிச்சி ஆகிய கிராமங்களிலேயே ஆடுகள் இவ்வாறு ஒருவகை நோயால் பீடிக்கப்பட்டு இறப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மீள்குடியமர்ந்த இந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அரச சார்பற்ற நிறுவனங்கள் கால்நடைகளை வழங்கியிருந்தன. இந்த வகையில் ஆடுகளும் வழங்கப்பட்டன. ஆனால் இவை வளர்ந்து பயன்தரும் வேளையில் இவ்வாறு நோயினால் இறப்பது கிராம மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. (க-406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்
31.12.1939

மறைவு
01.04.2011

# அமரர் வல்லி தம்பிராசா

கரவெட்டி, துன்னாலை கிழக்கில், எழுபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து - தன்னையும், தன்குடும்பத்தினரையும் ஊர் போற்றும்படியாக வாழவைத்து, இக்கிராமத்தில் பல வகையான அபிவிருத்திக்கு பல வகையிலும் அரும்பாடுபட்டு முன்னின்று உழைத்த அமரர் அவர்கள், இக்கிராம மக்களால் மிகவும் நன்றியுடன் நினைவு கூரப்படுபவராவார். இப்பகுதி மக்களால் மிகவும் போற்றி வணங்கப்படும் கலிகை கந்தசுவாமி கோயிலுக்கு அமரர் ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை. இக் கோயிலுக்கு வசந்தமண்டபம் ஒன்றினையும் சித்திரத் தேர் ஒன்றினையும் முருகன் வீதி உலா வருவதற்கான (ஊர்தி) சகடை ஒன்றினையும் அமைத்து தொண்டாற்றியவர்.அமரரது ஆத்மா கலிகைக் கந்தப் பெருமான் திருவடி நிழலில் சாந்தியாகும் என்பது இறை நம்பிக்கையாகும்.

இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல்10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்
அமரரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.

பாசத்துடன் நினைவுகூரும்:
குடும்பத்தினர்.

(49/20/23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாற்கடலைக் குடித்த பூனை

இலக்கியக் காட்சி – 83

கம்பராமாயணம் ஓர் ஒப்பற்ற காவியம். தமிழர் தம் பண்பாட்டையும் தமிழ் இலக்கிய மரபின் சிறப்பையும் நன்குணர்ந்த பெரும்புலவரான கம்பர் ஆக்கிய உயரிய நூல் இது. சொல்வளம், பொருள் வளம், உணர்வுச் சீரெழுச்சி ஆகியவற்றின் மேம்பாட்டுக்கெனச் செய்யுள் நயம் விரவக் கம்பராமாயணம் ஆக்கி அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு வேலையைச் செய்யத் தொடங்கு முன்னர் திட்டமிட்டு, ஒழுங்கமைத்து, உரிய பொருத்தமான பொருள் தேர்ந்து தொடங்கும் பணிகள் வெற்றியடைதல் திண்ணம் என்ற நம்பிக்கையுடன் பணி தொடர்வது தமிழர் மரபு.

கம்பரால் இயற்றப்பட்டதாக இன்று எம்முன் பயன்பாட்டில் பார்வையில் உள்ள இராமாயணம் பல காலமாகத் தமிழர் கைகளில் உள்ளது. அதிலுள்ள செய்யுள்கள் யாவும் கம்பர் எழுதியவாறே தொடர்ந்தும் சிதைவுறா நிலையில் பேணப்படுவதாக நம்பப்படுகிறது. அந்த வகையில், அதில் உள்ளவை யாவுமே கம்பரின் இலக்கிய ஆக்கத்திறன் வலிமையை விளக்கி நிற்கின்றன எனலாம்.

இராமாயணத்தின், அதாவது இராமகாதையின் தொடக்கத்தில் கம்பர் அருளிய கடவுள் வணக்கம். இன்று நாம் தொடங்கும் வேலைகளுக்கெல்லாம் அரணாய் அமைந்துலவுகின்ற ஆண்டவனின் பதம் தொழுவதாய் அமைகிறது.

*உலகம் யாவையும் தாம்உள வாக்கலும்*
*நிலை பெறுத்தலும் நீக்கலும், நீங்கலா*
*அலகிலா விளையாட்டுடை யார் அவர்*
*தலைவர் அன்னவர்க் கேசரண் நாங்களே.*

உலகெல்லாவற்றையும் ஆக்குதலும் அவற்றைக் காத்து வளர்த்தலும் கலைத்தலுமாகிய முத் தொழிலையும் செய்கின்றவர் யாரோ? அவரே எம் முதல்வர். அவரே கடவுள். அவரை வணங்குதலும் நாம் தொடங்கும் வேலையின் வெற்றிக்குத்துணை செய்யக் கோருதலும் தமிழர் மரபு. தமிழ் வாழ்நில மனைத்திலும் இறைவழிபாடானது முதன்மை நிலைபெற்றுள்ளது. கம்பரின் இராமாயணத்தின் கடவுள் வணக்கச் செய்யுளாய் இராமகாதையில் அது முதன்மை பெறுகிறது.

கம்பர் ஆக்கி அளித்த இராம காதையை தாமே தனித்துப் பாடவில்லை என்பதை விளக்கத் தமக்கு உதவியோர் பலர் உள்ளனர் என்பதற்கு ஆதாரமாகச் "சரண் நாங்களே" எனப் பன்மை படச்சொல்லி வழி படுவதைக் காண்கின்றோம். அதனைத் தொடர்ந்து எழுதிய அவை அடக்கத்தில் 'நான் ஒரு சிறியேன்' ஒரு பெரிய வேலையைத் தொடங்கியுள்ளேன். அதனை நிறைவு செய்யும் வலிமை எனக்குக் கிடைக்க வேண்டும் என்கிறார்.

*ஓசை பெற்றுயர் பாற்கடல் உற்றொரு*
*பூசை முற்றவும் நக்குபு புக்கென*
*ஆசை பற்றி அறைய லுற்றேன் மற்றிவ்*
*மாசில் கொற்றத்து ராமன் கதையரோ.*

நிறைவான நல்லாட்சி செய்யும் வேந்தனாகிய இராமன் கதையை இந்த உலகுக்கு ஆக்கி அளிக்கும் ஆசை மிகுதியால் அதில் ஈடுபட்டுள்ளேன். அந்தச் செயலானது பேரிரைச்சலோடு கிளம்பும் அலைகளையுடைய பாற் கடலை நக்கிக் குடிக்கப்புகுந்த சிறு பூனைக்கு ஒப்பானது. பூனைக்கு ஒப்பான நானும் என் திறன் நோக்காது பாற்கடலை நக்கிக் குடிக்கப் புகுந்தது போல விரிந்த இராமரின் கதையை முழுவதுமாய் எழுதி முடிக்கப் புகுந்தேன் என்கிறார் கம்பர். ஆசையும் ஆர்வமும் கொண்டமையால் இராமகாதை முழுமை பெறும் என்ற நம்பிக்கையை செய்யுள் விளக்கி நிற்கின்றது.

*"முத்தமிழ்த்துறையில் முறை போகிய*
*உத்த மக்கவிகட் கொன்றுணர்த்துவன்*
*பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும்*
*பத்தர் சொன்னவும் பன்னப் படுபவோ"*

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ் கற்றோர் உத்தமப் புலவர்கள். அவர்களின் முன்னே இராம காதையை எழுதும் பித்தனாய் நான் முன் வந்துள்ளேன். அப்பொழுதும் முறைமுறை கற்றறிந்த பித்தராகிய அறிஞர்களும் பேதையராகிய அறிவு முதிர்ச்சியுறாத வரும் பத்தர் எனப்படும் பக்திமான்களுமாகிய அறிவு முதிர்ந்து அன்பின் வயப்பட்டு நிற்போரும். ஆகிய யாவரும் நான் எழுதப் போகும் எழுதி முடிக்கப்போகும் இராமகாதை பன்னப்படுவ்வோ அக்கதை குறை கண்டு அல்லது விமர்சித்துப் பேசப்படுவதற்குத் தகுதி உடையதோ. தகுதி உடையது அல்ல என்பதே நியாயம் என்கிறார். அத்துடன் சிறிய பூனையாகிய கம்பர் பாற் கடலாகிய இராம காதையைப் படைக்கத் துணிந்தமை, ஆசை மிகுதியினாலெ னினும் அதன் நிறைவுக்கும் சிறப்புக்கும் இறைவனின் துணையும் துணிவும் உதவி நின்றதைக் காணுகின்றோம்.




### தர்மினி பார்த்திபன்

முத்தமிழிலில் துறை போனோரும் அதில் குறை காணாதிருக்க வேண்டும் என்பதும் கம்பரின் எதிர்பார்ப்பாகும். முத்தமிழ் எனும் போது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றையும் குறிப்பிடும் வகையில் அவை யாவையுமே குறைவின்றி விளங்க வேண்டும் என்பதும் அவரின் விருப்பமே. இன்றைய நாள்களிலும் எமது பணிகளுக்கு முதலு தவும் இறைவனை நாம் வழிபடும் வழக்கம் எம்மிடை நிலைத்துள்ளமையே எமது வெற்றி களுக்கெல்லாம் காரணமாய் அமைகின்றது. அத்துடன் விளையும் துணிவும் எமது செயல் களையெல்லாம் வேகப்படுத்தவும் விவேகப்படுத்தவும் உதவுகின்றன எனலாம்.

கடந்த வாரம் வெளியான இலக்கியக்காட்சியில் எழுதியவர் பெயர் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் என்பதற்கு பதிலாகத் தவறுதலாக மட்டுவில் நல்லதம்பி என்று பிரசுரமாகிவிட்டது.

# அயல் வீட்டுக் காணி

சிறுகதை

வானத்தில் கருமுகில்கள் உருண்டு திரண்டுவர மின்னல் கீற்றுக்கள் கண்களைப் பறிக்கும் வண்ணம் கோலம் போட செவிகளைச் செவிடு படச் செய்யும் அளவில் இடியோசை கேட்டது.

"பெரிய மழை வரப் போகுது காயப்போட்ட உடுப்புக்களையும் விறகுகளையும் எடுங்கோ பிள்ளையள்..." என்றது தாயின் குரல்.இரவுப் படுக்கைக்கு ஆயத்தமான பொன்னம்மா வின் மூத்த மகன் சுதர்சன் வழமையாக மழை ஒழுகும் இடங்களின் குறிப்பறிந்து பாத்திரங்களை வீடு முழுவதும் விதைத்து விடுகிறான்.

வானம் பொடிபட்டுத் தலைக்குமேல் விழுந்தது போல் இடியுடன் கூடிய காற்றும் மழையும் 'சோ' வெனக் கொட்டத் தொடங்கியது. "கடவுளே!... இந்த இருட்டுக்கை மழை வந்தா என்ரை குஞ்சுகள் எங்க ஒதுங்கிறது...?" கோபாவேசம் மேலும் பெருக...

"பெரிய வீடு வேணாம் ஒரு சின்ன அறையை யாவது அறுக்கையா கட்டுங்கோ எண்டு அப்பவே படிச்சுப் படிச்சுச் சொன்னன்... கேட்டியளே...? பெரிய எடுப்பு எடுக்கப் போய் 'தொப்' பெண்டு விழுந்து தொப்பி கழண்ட கதையாயப் போச்சுது எல்லாம்... அவளது பேச்சில் ஏளனமும் விரக்தியும் கலந்து தொனித்தது.

"இனி இவளுக்கு நாய்க்கு எலும்பு கிடைச்ச மாதிரித்தான். அலுத்தவாறு... ம்.. போன கதையைப் பேசி இனி என்ன பிரயோசனம். எல்லாம் என்ரை தலைவிதி..." என்றவாறு துரைச்சாமி முன் விறாந்தையின் செத்தையில் சாய்ந்தவாறு செய்வதறியாது அமர்ந்திருந்தான். அவனின் பிள்ளைகள் ஐந்து பேரும் மனைவி பொன்னம்மாவும் மழை ஒழுக்கில்லாத ஒரு சிறிய பகுதிக்குள் பாயை விரித்துக் கூனிக்குறாவிப் படுத்துக் கொண்டனர்.

மழையோ ஓய்ந்த பாடாய் இல்லை. வெள்ளம் போட்டால் வளவு நிறையும். வளவு நிறைந்தால் வீடு ஊறும் என்பதை எல்லோரும் அறிந்திருந்தார்கள். "ம்... இதெல்லாம் கடவுள் எங்களுக்கு தாற தண்டனை"...

இவர்கள் அடுத்த வீட்டுக்காரருக்கு வருடக் கணக்கில் செய்த கொடுமைகளை எண்ணி மனம் நொந்துவிட்டார்கள் போலும்.

ம்...நீண்ட பெருமூச்சுடன் ஓமப்பா...நான் அந்த நேரம் பண்ணின அட்டகாசத்துக்கு ஏற்ற பலனை அனுபவிக்கிறன் போல... குற்றம் செய்த நெஞ்சு குறுகுறுத்தது அவனுக்கு.

மின்னலுடன் கூடிய இடியும் காற்றுடன் கூடிய மழையும் தொடர்ந்து நாடகமாடின. அரிக்கன் லாம்பின் வெளிச்சத்தில் மழை ஒழுக்கின் நீரால் நிறைந்த பாத்திரங்களை இனங்கண்டுகொண்ட சுதர்சன், இடைக்கிடையே படுக்கையை விட்டெழுந்து நீரை ஊற்றிய வண்ணம் இருக்கிறான்.

"இப்ப பெய்த மழையாலை இந்த வளவுக்குள்ள ஊரிப்பட்ட தண்ணி நிக்கப் போகுது...."

"அதைப் பற்றின எண்ணம் உங்களுக்கு அப்ப இருந்திருந்தால் இப்ப இருந்து ஏன் நாங்கள் ஏங்க வேணும். என்ரை சொல்லை எப்ப நீங்கள் கேட்டு நடந்திருக்கிறியள்...?" எடியப்பா...இந்த நாலு பரப்புக் காணியை நிரப்பி மேடாக்க எத்தினை லச்சத்துக்கு மண் பறிக்க வேணுமெண்டு தெரியுமே?...இப்ப நானென்ன ஏலக்கூடியனானே?... வேதனை கலந்ததொனியது.

மழையும் சற்று ஓய்ந்தோய்ந்து பெய்ய...அவர்களின் மனங்களும் ஓய்வுகொள்ள கண்களைத் தூக்கம் தழுவிக் கொள்கிறது.

பொன்னாம்மாவின் கணவன் துரைசாமி பிரபல மீன் வியாபாரி என்பதைப் பார்க்கிலும் அவன் செய்யாத வேலையே இல்லை எனலாம். வியர்வை சிந்தாமல் சிறிய முதலை விட்டு பெரிய முதலைப் பெறும் தொழிலை செய்யும் ஆற்றல் வாய்ந்தவன். வாயால் வெட்டிப் பேசி பிறரை ஏமாற்றி இலாபம் பெறுவதில் மனது குளிர்பவன்.

அவன் பேசும் பொய்யிலே உண்மை இருப்பதாகப் பிறர் உணருவர். இவர்களின் வீட்டின் தென்புறத்தே உள்ள காணியில் இடம்பெயர்ந்து வந்த ஒரு சிறிய குடும்பம் இருந்தது. அதில் மூன்று பெண் பிள்ளைகளும் தாயான அன்னமும் அடங்குவர். யுத்த காலத்தில் தன் மகனை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு பல இடப் பெயர்வுகளைச் சந்தித்து அந்த அனுபவங்களினூடாய் பல மனித விழுமியங்களையும் பட்டறி வாய்ப் பெற்று மகனுடைய அற்ப சொற்ப உதவி யால் வாங்கிய ஆறுபரப்புக் காணியும் அதனுடன் கூடிய வீடும் அவர்களின் இன்றைய சொத்தாக அவர்கள் அதில் குடியிருந்தனர். என்ன ஆக்கினையடாப்பா இது. ஒவ்வொரு நாளும் இந்த நடு வேலையாய் கொட்டுற இலை குழைகள் கொஞ்சமே...? ஒவ்வொரு நாளும் கூட்டி அள்ளும் குப்பை குறையாது.

காலையில் எழுந்து கரையும் காக்கையைப் போலும் கலகங்களை உருவாக்கும் நாரதர் போலும் குத்துக் கதைகளைச் சொல்லாமற் சொல்லிச் சமருக்கு அழைப்பாள் பொன்னம்மா. பணச் செருக்கால் அயலவர்களை மதியாமல் பகைப்பது அவளின் பண் பாகும்.

வீண்கதை எதுக்கப்பா? அவையின்ரை மரத்தால் கொட்டுற இலை, குழை, குப்பைகளை அவையின்ரை வளவுக்கையே கொட்டிவிடு, அவையின்ரை எங்களுக்கு எதுக்கு?... கள்ளு நனையாத துரைச்சாமியின் வாய் காலையில் கூறும் ஏளனத்தொனி இது. இவர்கள் எப்படித் தான் பேசினாலும் நகைத்தாலும் அன்னமும் பிள்ளைகளும் ஏன் என்று கேட்பதே கிடையாது.

"ம்...எல்லாம் கடவுள்கேட்டு விளக்குவார்" இதுவே அவர்களின் தாரக மந்திரம்.

"அம்மா!... மரங்களில் இருந்து இலையள் பழுத்தா கீழே கொட்டத் தானே செய்யும். அதுக்கேன் அந்த அன்ரியை வாய்க்கு வந்த மாதிரித் திட்டுறியள்.

சுதர்சனின் கேள்வியால் பொன்னம்மாள் மேலும் ஆத்திரமடைந்தாள். "டே...! பெரிய ஆக்களின்ரை கதைக்கு நீ என்ன நியாயம் பேசிறாய். போய் அலுவலைப் பாரடா"

### பாவிலுப்பிள்ளை வேதநாயகம்
### தும்பளை தெற்கு

நீதியின் வாயை அடைத்து விட்டேன் என்ற பெருமிதத்தில்... "வந்தார் வரத்தாருக்கெல்லாம் வக்காலத்து வாங்கிறாராம் இவர்" என்றாள் பொன்னம்மா.


அன்னம் குடியிருக்கும் காணிக்குள் இருபதுக்கும் அதிகமான தென்னை மரங்கள் நின்று காய்க்கின்றன. பலா, மா எனப் பயன்தரும் மரங்கள் வேறு. இத்தனை சிறப்பான இந்தக் காணியை வாங்குவதற்கு துரைச்சாமி ஏற்கனவே திட்டமிட்டிருந்தான். தன்னிடம் இருந்த பணத்தை வீட்டின் கட்டமைப்புக்குச் செலவு செய்து அது பற்றாதவிடத்து கடன்படும் நிலைமை வந்த வேளையில் அந்தக் காணியை வாங்க முடியாத நிலை அவனுக்கு ஏற்பட்டது.

வருவாய்கள் நிறைந்த இந்தக் காணியிலிருந்து அவர்களை எப்படியாவது எழுப்பிக் கலைத்து விட்டால் அதனை தாம் அமத்திக் குத்தி வாங்கிவிடலாம் என்பதே துரைச்சாமியின் அவாவாக இருந்தது. அதனால் அவர்களைச் சண்டைக்கு அழைப்பது அவர்களின் தொழிலாக இருந்தது. பூவரச மரத்தைச் சாட்டாக வைத்து தினமும் அவர்களை நச்சரிப்பதில் பொன்னம்மாவுக்கு அலாதி இன்பம்.

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்



பூ மனதைக் கொண்ட
பூவுலகின் தெய்வம்
தாழ்பணிந்து தொழுதாலும்
தடுத்துநிற்கும் உருவம்
ஆழ்மனதில் பாசமொன்றை
'பா' வடிக்கும் கீதம்
ஆருயிராய் அருகிருந்து
எமை அரவணைக்கும் உறவு
எம் வாழ்விருக்கும் காலம் மட்டும்
எம் தாயவளே
என்றும் எம் மனதில் கடவுள்.

பா.பொன்நிலவன்.

# மானுடம் எங்கே செல்கிறது?

*மானுடம் எங்கே செல்லவில்லை?*
*மதிமண்டலமீறாய் சென்றுள்ளது*
*காலனை வெல்ல வழிகிடைக்கும் - என்று*
*காத்திரமாக முயல்கிறது*

*கைக்குளடங்கிடும் கருவிகளால் - நிதம்*
*கண்டறி விந்தைகள் கோடி கண்டு*
*பொற்புறு பூமியை புதுமைகொளச் செய்து*
*போற்றிடு தன்மையைப் பெற்றுள்ளது*

*வித்துவ வானில் சிறகடித்தே - நிதம்*
*விறுகொள் மாட்சி படைக்கிறது*
*இத்தனை செய்தும் பயனென்னடா?*
*இத்தரை மீதிலே அமைதியில்லை*

*விருந்துபடைத்து விருப்புடன் உண்டிட்ட*
*வியன்மிகு வாழ்வது விலகிவிட*
*அடுத்தவர் பாடொன்று மறியாத வாழ்வுகள்*
*அவனியில் இன்றிங்கு அரங்கேற*

*பண்பையிழந்து பணத்தைக் குவிப்பதால்*
*பண்மை இழந்தோம் மானிடரே*
*மரபுகளோடு நெறிமுறை காத்தால்*
*மேன்மையடைவோம் தோழர்களே!*

அ.வாசுதேவா,
சாவகச்சேரி.



# மௌன நயனம்

இப்போது மீட்டும்
ஸ்வரங்கள் மட்டும்
வலிமையாக இருக்குதடி
உன் கண்கள்தான்
கறுப்பு வெள்ளை
கட்டைகளானதோ
தெரியவில்லை- எனக்கோ
காட்சியின் பேதமும்
புரியவில்லை
உன் மௌன நயனத்தின்
அர்த்த பேதங்கள்
எவ்வளவோ முயன்றும்
விளங்கவில்லை - சொல்
நீ ஜீவஸ்வரமா?
நீ:பாயஸ்வரமா?

க.யோகேஸ்வரன்
நெடுந்தீவு-13.

# அன்னையே... காத்திரு!

என்னை
பத்து மாதங்கள் சுமந்து
பாருக்கு அறிமுகம்
செய்த அன்னையே!
நான் துன்பங்களால்
துவண்டபோது
கடவுளிடம்
வரம் கேட்டு - உன்
உடலை வருத்தி
உணவைச் சுருக்கி
விரதமிருந்தவள் - நீயம்மா!
தாயே - என்னை
பிரசவிக்கும்போது
உனக்கிருந்த வலியைவிட
இப்போது
நானிருக்கும் நிலையை - நீ
பார்க்கும் போதெல்லாம்
அதிக வேதனைப்படுவதை
என்னால் புரியமுடிகிறது... அம்மா!
என்ன செய்ய
எங்களைப் படைத்தவன்கூட
கருணைக் கண்ணை
திறக்க மறுக்கிறானே...
அன்னையே!
எங்கள் கவலைகளை - நாங்கள்
பகிர்ந்துகொள்ளும்போது
எமக்கு இடையே
தடையாக இருக்கின்ற
முட்கம்பி வேலிகளும் - தம்
இறுக்கத்தில் தளர்வை
ஏற்படுத்துவதாய் - நான்
உணர்கின்றேன்...
பொறுத்திரம்மா!
காலம் கனிந்துவரும்
அப்போது
எம்மைச் சூழ்ந்துள்ள
சோக இருள் நீங்கும்
முட்கம்பி வேலிகள் விலகும்
வாழ்வின்
நம்பிக்கை ஒளி பிறக்கும்
விரைவில்
விடுதலைக் கனி
வீட்டு வாசல்படி தேடிவரும்
அதுவரை காத்திரம்மா...
காத்திரு!

து.திலக், யாழ்ப்பாணம்.

# போரால் மரணித்த ஆத்மாவின் குரல்...

அம்மா நலமா
அக்காவும் சுகமா?
எங்கள் ஊருக்கு
போயிட்டீங்களா?
வீடு எப்படி இருக்கிறது?

என் அக்காவின்
சீதனத்துக்காய் - நான்
சேர்த்துவைத்த உண்டியலை
முற்றத்து பலாவுக்கு அருகில்
புதைத்து வைத்திருக்கிறேன்

என் பள்ளித்தோழி
'தமிழ்' தந்த
மயில் இறகும்
என் தமிழ் புத்தகத்துக்குள்
இருக்குதம்மா!

அம்மா...
நான் வைத்த
மாங்கன்று
பூத்துக் காய்க்கத்
தொடங்கிவிட்டதா?

என் வினாவலை
முடித்துக்கொள்கின்றேன்
பூம்பாத்தி அருகு
முற்றத்தை
முத்தமிட்டுக்கொள்கின்றேன்.

ஆ.முல்லைதிவ்யன்.



# ஏக்கங்கள்...

எத்தனையோ
ஏக்கங்கள்
இதயமதில்...!
எடுத்துரைக்க
வார்த்தைகள் இல்லை
என் மனதில்...!

மூடிவைத்த புத்தகமாய்
எதுவும் ரசிக்கப்படாமலேயே
சிதைந்துபோகும்
உணர்வலைகள்!

சோகத்தைச் சுமந்து
தூக்கத்தை மறந்து
வெறுமனே மூடிக்கிடக்கும்
அப்பாவி விழிகள்!

காலம் தந்த - எமது
காயங்கள்
கரைந்துபோக
கனிவான ஓர் எதிர்காலம்
எமக்குக் கிடைக்குமா?

சா.சிந்துஜா
கோண்டாவில்.

# அன்புத் தந்தையே...!



அன்பு பாசம் எது?
என எனக்கு...
புரிய வைத்தது
என் தந்தையே!
துன்பம் நேர்ந்தபோதும்
துவண்டுபோகாமல்...
என்னை மீட்பதும்
என் தந்தையே!
கஸ்ரம் என்பது
புரியாதளவுக்கு...
என்னை வளர்த்தெடுத்ததும்
என் தந்தையே!
தனக்குத் துன்பம்
நேர்ந்தாலும்...
மற்றவர் நன்றாய் வாழ வேணும்
என்று நினைக்கும்...
ஒரு ஜீவனும்
என் தந்தையே!
எத்தனை ஜென்மங்கள்
எடுத்தாலும் – என்
தந்தைக்கே மகளாக
பிரசவிக்க நினைக்கிறேன்.

எஸ்.கிருஷா, புலோலி.

# கருவின் விண்ணப்பம்?

என்னைப் பெற்றெடுக்க
எண்ணுகின்ற தாயே!
விநயமான
வேண்டுகோளொன்று
உன் பிரசவத்தை
சிலகாலம் ஒத்திவைக்க
மாட்டாயா?

எங்கு பிறந்தாயென்று
எதிர்காலத்தில் யாரும் கேட்டால்
என்ன பதில் சொல்வது?

அகதிமுகாமில்
பிறந்தேன் என்பதா?
இல்லை
அகதியாயே பிறந்தேன் என்பதா?

குழாய்க் கிணற்றடியில்
குடத்தோடு சேர்த்து
என்னையும் சுமந்தபடி
தண்ணீருக்காய் காத்திருக்க
கருவில் இருக்கும் எனக்கே
கண்ணீர் வருகுதம்மா?

பருப்பையும்
பச்சை றொட்டியையும்
உட்கொண்டு எப்படியம்மா
எனக்கு நீ பாலூட்டுவாய்

உறங்கத் தொட்டிலும்
ஊட்டமுள்ள பால்மாவும்
கேட்கவில்லை நான் – தாயே
[illegible]க்கூட



இடமில்லையே – எமது
தரப்பாள் கூடாரத்தில்...


அம்மா உன் முகம் காண
ஆசையாய்த்தான் இருக்கின்றது
ஆனாலும்
அகதியெனும் நாமத்துடன்
அவதரிக்க விரும்பவில்லை...

ஊர்சென்று சேரும்வரை
உன்வயிற்றில் நானிருப்பேன்'
உன் பிரசவத்தை அதுவரையும்
ஒத்திவையம்மா...!

அன்னராசா பிரதீபன்,
நெடுங்கேணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்கள் தொழிலாளர்களாக ஆக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்



> **சிறுவன் ஒருவன் கல்வியை நிறுத்தி மேசன் தொழில் புரிந்து வருகின்றான். சம்பந்தப்பட்ட சிறுவனை "சிறுவர் பாதுகாப்பு" அமைப்பு அணுகி விசாரித்த போது நான் கல்வியைத் தொடருவதானால் எனது குடும்பத்தை உங்களால் பார்க்க முழயுமா? என்று கேட்கிறான்.**

ஓடி ஓடி உழைக்க வேண்டும், நேர்மையாகவும் உழைக்க வேண்டும். ஆம்! உழைப்பு இன்றேல் ஊண் இல்லை உறக்கமும் இல்லை. ஏன் வையகமே இயங்க மறுத்துவிடும். தேனீ போல நாமும் உழைப்பைப் பொழுதுபோக்காக உழைக்க வேண்டும். தேனீ போல சுறுசுறுப்பாகவும் கடுமையாகவும் உழைக்கின்ற உழைப்பானது நீடித்து நிற்கும். இதன் மூலம் நாம் தேடிக்கொள்ளும் செல்வமானது பரம்பரை பரம்பரையாக எம் இடத்தில் குடிகொண்டுவிடும்.

ஆர்வத்துடனும் மனத்திருப்தியுடனும் உழைக்கும் உழைப்பானது உடலை நலமாகவும் உள்ளத்தைத் தெளிவாகவும் இதயத்தை முழுமையாகவும் கொள்வதோடு ஆழ்ந்த நிம்மதியாக உறக்கத்தைத் தரும். இந்த உழைப்பே தீய பழக்கத்தை முற்றாக அகற்றி எமக்குச் சகிப்புத் தன்மை, பொறுமை, கூட்டுமுயற்சி, விட்டுக்கொடுப்பு என்பவற்றைக் கற்றுத்தரும் அறிவியலின் சிறந்த ஆசனும் ஆகும்.

### உழைப்பு வீண்போகாது

சமூகத்துக்காக உண்மையாக வாழ விரும்புபவன் தன் உழைப்பின் மூலம்தான் சமூகத்தில் உயர்ந்த மனிதனாக வாழமுடியும். இவ்வாறு கடுமையாக மனித சமுதாயத்துக்காகவும் தனது குடும்பத்துக்காகவும் உழைத்துத் தேய்ந்து கரடுமுரடான கரங்களே கொடுத்து வைத்தவை. உண்மையில் மதிப்பு உள்ளது எதையும் பாடுபட்டு உழைத்தே விலை கொடுத்து வாங்க முடியும். உழைப்பில் ஈடுபடும் நேரம் எதுவும் வீணாவதில்லை என்பதே விவேகத்தின் சாரம். மனித இனத்தையே சீரழிக்கும் இம்சைகளுக்கு மிகச் சிறந்த தீர்வு உழைப்பே.

**மே தினத்தில் உறுதி கொள்வோம்**

நேர்மையின்றித் திருட்டு வழியில் எவ்வாறு பணம் சம்பாதிக்க முடியும் என்று ஆராய ஒருவன் முற்படுகின்றானோ அன்றே அவன் வாழ்வில் இருள் சூழ்ந்தவேளை. நாணயமாக உழைத்து வாழ்ந்தவன் எவனும் வாழ்க்கையில் தோற்றதாகச் சான்றுகள் எதுவும் இல்லை. ஆரம்பத்தில் அவன் தோல்வியைத் தழுவுவதைப் போன்றே தோன்றும். ஆனால் இறுதியில் வெற்றி அவனையே சாரும்.

நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் செயலாற்றுகின்றவனுக்கு நிஜமான ஊதியம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஆணாயினும் பெண்ணாயினும் சம உழைப்புக்குச் சம ஊதியம் கிடைக்க வேண்டும்.

### சிறுவர் தொழிலாளர்கள்

18 வயதுக்குட்பட்டவர்களைச் சிறுவர்கள் எனவும் கட்டாயக் கல்வியானது 14 வயது வரை எனவும் உரிமையுள்ளது. இது இவ்வாறு இருக்க எம் வாழ்வில் சந்தோஷம் கிடைக்காதா? என்று ஏங்கித் தவிக்கும் சின்னஞ் சிறுவர்கள் எம் நாட்டில் ஏராளம். சிறுவர்கள் நம் எதிர்காலச் சொத்துக்கள். உண்மையிலேயே சிறுவர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள். உள்நாட்டில் நீண்ட காலமாக இடம்பெற்ற யுத்தத்தாலும் இயற்கை அனர்த்தங்களாலும் யாழ். மாவட்டத்தில் உடல், உளப் பாதிப்பால் சிறுவர்கள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இதை சாதகமான சூழ்நிலையாகப் பயன்படுத்தி சிறுவர்களை வேலைக்கு அமர்த்தியோர் ஏராளம். பெற்றோரை இழந்த சிறுவர்கள் தமது உடன் பிறந்த சகோதரர்களின் ஒளிமயமான வாழ்வுக்காகக் கல்வியை இடைநிறுத்தி தாம் அடிமைத்தனமான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

சிறுவர்கள் ஏன் தொழிலாளர் ஆகின்றனர் என ஆராயப்போனால்

* போர்ச் சூழல்
* குடும்பப் பின்னணி
* வறுமை
* பிரிந்த குடும்பம்
* பெற்றோர் அக்கறையின்மை
* ஆரம்பக் கல்வியை ஒழுங்காகக் கற்காமை
* ஒழுங்கற்ற பாடசாலை வரவு
* ஏற்றத்தாழ்வு

இவ்வாறான காரணங்களால் நமது சிறுவர்கள், தொழிலாளர்கள் ஆகின்றனர். சிலர் கட்டாயத்தின் நிமித்தம் தொழிலாளராக்கப்படுகின்றார்கள். சிறுவர்களைச் சிறுவர் தொழிலாளர்களாக்கி அனைவராலும் ஏமாற்றப்பட்டு வேலை வழங்கப்படுகிறது. "100 ரூபா தாறன் வீட்டிலை வந்து ஒருமரம் தறிச்சுத் தந்துவிட்டுப் போ தம்பி" என்று கேட்பார்கள். அந்தச் சிறுவனும் குடும்பச் சுமையால் ஒருவேளை சாப்பாட்டுக்கு ஒரு மாதிரிச் சமாளிக்கலாம் என்ற ஆதங்கத்துடன் சம்மதிக்கிறான். அவ்வாறு கூட்டிச்செல்லும் சிறுவனை வைத்து நிறைய வேலைகளைக் கொடுப்ப துடன் மரத்தின் உயரத்துக்கு ஏறி குழைவெட்டுதல் போன்ற ஆபத்தான வேலைகளும் வழங்கப்படுகின்றன. சிறுவன் கீழே விழுந்து மரணம் சம்பவிக்கவும் சந்தர்ப்பம் உண்டு. இத்தகைய உயிராபத்தான நிறைய வேலைகளைக் கொடுத்த பின்னும் பணம் கூடக் கொடுக்காமல் ஏமாற்றுகின்ற ஆசாமிகள் உள்ளனர். உதாரணமாகக் கிணற்றில் இறக்குதல், உயரமான இடங்களில் ஏற்றுதல், வெட்டுதல், கொத்துதல் போன்ற வேலைகளை வாங்குவதுடன் அவர்களுக்குச் சில சந்தர்ப்பங்களில் அடிக்கவும் முற்படுகின்றனர். சிறுவன் ஒருவன் கல்வியை நிறுத்தி மேசன் தொழில் புரிந்து வருகின்றான். சம்பந்தப்பட்ட சிறுவனை "சிறுவர் பாதுகாப்பு" அமைப்பு அணுகி விசாரித்த போது நான் கல்வியைத் தொடருவதானால் எனது குடும்பத்தை உங்களால் பார்க்க முடியுமா? என்று கேட்கிறான். இவ்வாறான சிறுவன் கல்வியைத் தொடரவேண்டும். ஆனால் சிறுவனின் குடும்ப வருமானத்தை ஈடுசெய்வதற்கு எத்தகைய வாழ்வாதாரத் திட்டங்களை செயற்படுத்தவேண்டும் என்பது ஒரு நீண்ட காலத்திட்டமாக அமையவேண்டும்.

**அ.அகன், கோப்பாய்**

### சட்டங்களின் பலவீனம்

சிறுவர் உரிமைச் சமவாயச் சட்டங்கள் பிரகடனப் படுத்தப்பட்டு இருப்பினும் அவை நடைமுறையிலுள்ளதா? சிறுவர் உரிமைச்சட்டங்கள் இருப்பினும் சிறுவர்களது நாளாந்த வாழ்க்கை கேள்விக் குறியாகவே உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையால் சிறுவர் உரிமை சாசனத்தில் 18 வயதுக்கு உட்பட்ட அனைவரும் சிறுவர்கள் எனக் குறிப்பிடுவதுடன் உறுப்புரை 28 இல் சிறுவர்களின் கல்வி உரிமையை வலியுறுத்துகின்ற போதும், நம் நாட்டில் 6-14 வயதுக்குட் பட்ட சிறுவர்களுக்குக் கட்டாயக் கல்வி போதிக்கப் பட்டாலும் செயற்பாட்டில் பல்வேறுபட்ட பிரச்சினைகளைச் சிறுவர்கள் எதிர்நோக்குகின்றனர். சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது சிறுவர் உரிமையை மீறல் என்பதையும் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சிறுவர் உரிமை தொடர்பான சட்டத்தில் சிறுவர் உழைப்புப் பற்றிய விடயம் பற்றிக் கூறியதிலிருந்து "பொருளாதார ரீதியான சுரண்டலிலிருந்தும் ஆபத்தான தொழில் புரிதலிலிருந்தும் அரசால் சிறுவர்கள் பாதுகாக்கப்படல் வேண்டும். சிறுவர்களது ஆரோக்கியம் , உடல், உள, மனித விழுமியங்கள் சமூக அபிவிருத்திக்குப் பின்னடைவை ஏற்படுத்தாது அவர்களைப் பாதுகாத்தல் வேண்டும்." எனவே சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல் என்பது அவர்களது உரிமையை மீறும் செயற்பாடாகவே அமைகின்றது. சிறுவர்களை வேலைக்கு அமர்த்த எந்தவொரு ஸ்தாபனத்துக்கோ, நிறுவனத்துக்கோ, அமைப்புகளுக்கோ, தனிநபருக்கோ உரிமையில்லை.

ஜெனிவா நகரில் வெளியிடப்பட்ட அறிக்கையில் உலகம் எங்கும் வாழும் 5 தொடக்கம் 17 வயதுக்கு இடைப்பட்ட 246 மில்லியன் அளவான சிறுவர்கள் சிறுவர் தொழிலாளர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையில் மில்லியன் அளவான சிறுவர்கள் மிகவும் அபாயகரமான தொழிலில் ஈடுபடுத்தப் படுகிறார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. எனவே சிறுவர்களைத் தொழிலில் அமர்த்து வதை முற்றாக நீக்குவோம்.

## உதவட்டும் மேதினம்

உழைக்கும் தொழிலாளி தனது வாழ்வில்
உன்னத நிலையை அடையவில்லை
இழைக்கும் கொடுமைகள் எத்தனை எத்தனை
எல்லாம் அவனின் தலைவிதி தானோ
உழைப்புக் கேற்ற ஊதியம் என்று
உண்மையில் அவனுக்குக்கிடைத் தால்தான்
உழைக்கும் தொழிலாளி வாழ்வு உலகில்
உயர்வு அடையும்; உதவட்டும் மேதினம்

வ.யோகானந்தசிவம்

## தொழிலாளர்களே வாழ்க

உலகம் உயர்ந்திட உழைப்பைத் தந்தவர்
உழைக்கும் நேரம் அதிகமாய் இருந்ததால்
உலகின் பலவாம் நாடுகள் தனிலே
உறுதியாய் எழுந்தனர் எதிர்த்து நின்றனர்!
பலமது கொண்டு அவர்களை அடக்கிட
முனைந்ததால் உதிரமும் சிந்திட வேதனை
பலவும் அடைந்தே எட்டுமணி வேலை
நேர உரிமையை வென்று தந்தனர்

அன்னையக்கு என்றுமெம் சிரமது தாழ்த்தி
அஞ்சலி தனையே செலுத்திடுவோமே
என்றுமிவ் வுலகம் உயந்திட ஏற்ற
உழைப்பது நல்கும் உள்ளங்கள் வளமது
நன்றாய் விளங்கும் நிலையது பெற்றே
நலமது ஓங்கிட வாழ்க என்றே
இன்றைய மே நாள் தனிலே எங்கள்
இதயம் நிறைய வாழ்த்திடுவோமே!


[illegible] மகேந்திரதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருக்கரந்தன்பதி, அருள்மி
# சிவபூத நாதேஸ்வ
# சித்திரைத் தேர் உற்ச

## நீர்வையூர், கோவையூர், உரும்பிராய் கிழக்கு திருக்கரந்தன், பதியுறை அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத சிவபூத நாதேஸ்வர சுவாமி ஆலய வரலாறு



கொத்தம்பை பதியிலுறை சிவபூத நாதேஸ்வரர் ஆலய வரலாறு சிறப்பு மிக்க தொன்றாகும். கொத்தம்பை பதியெனப்படுவது நீர்வளம், நிலவளம் மிக்க நீர்வையூரின் (நீர்வேலி) தென்மேற்குப் பகுதியையும் கோவையூரின் (கோப்பாய்) வடமேற்குப் பகுதியையும், ஊரெழுவின் தென்கிழக்குப் பகுதியான கராந்தனையும், உரும்பிராயின் ஈசானதிக்கின் ஒரு பகுதியையும் உள்ளடக்கிய தெய்வீகப் பிரதேசமாகும்.

ஈழவள நாட்டின் சிகரமாய் விளங்கிய யாழ்ப்பாண அரசின் பெரும்பாலான பகுதிகளை பறங்கியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் என்ற அந்நிய நாட்டவர் கைப்பற்றிக் காலத்துக்குக் காலம் ஆட்சி செய்த காலகட்டம் அது. அந்நியரின் ஆதிக்கத்தால் யாழ்ப்பாணப் பகுதியில் வாழ்ந்த சைவசமயிகள் பட்ட துன்பங்களோ பலப்பல. யாழ்ப்பாணப் பட்டினப் பகுதியில் வாழ்ந்த சைவசமயிகள் சிலர் அந்நியரின் இடையூறுகளிலிருந்து தப்பிக்கும் நோக்கில் வடகிழக்குப் பக்கமாக இடம்பெயர்ந்தனர். அவ்வேளை தமது பகுதியிலிருந்த ஈஸ்வரரின் சிலையொன்றையும் தம்முடன் எடுத்துச் சென்றனர். தாம் எடுத்துச் சென்ற அச்சிலையுடன் திருக்கரந்தன் பகுதியில் தங்கியிருந்த அவர்கள் அச்சிலையை தாம் தொடர்ந்தும் தம்முடன் எடுத்துச் செல்வதில் சிரமத்தை எதிர்நோக்கியதால் அங்கிருந்த வெள்ளை மணற்றிடரில் அச்சிலையை ஆழக் குழிதோண்டி மறைத்து வைத்துவிட்டுத் தம் பயணத்தைத் தொடர்ந்தனர். சுவாமியின் விக்கிரகம் மணலால் மூடப்பட்ட நிலையில் நீண்ட காலம் அவ்விடத்திலேயே கிடந்தது.

சுவாமியின் விக்கிரகம் மறைத்து வைக்கப்பட்ட அம் மணற்றிடர் பகுதியில் வாழ்ந்த மக்கள் விவசாயிகளாக இருந்தனர். தாம் மணலுள் புதையுண்டு கிடப்பதை அப்பகுதி வாழ் மக்களுக்கு தெரியப்படுத்துவான் வேண்டி இரவு வேளைகளில் தான் புதையுண்டு இருக்கும் இடத்திலிருந்து எம் பெருமான் பேரொளியை வீசிக்காட்டுவார். இதனால் முதலில் அச்சமடைந்த அப்பகுதி மக்கள் காலப் போக்கில் தம் அச்சம் நீங்கி தம் இயல்பு வாழ்க்கையை மேற்கொண்டு வந்தனர்.

ஒரு நாள் அப்பகுதி மக்கள் கூடிநின்ற வேளையில் பட்டப்பகலில் வழக்கமான ஒளி வீச ஆரம்பித்தது. சூறாவளிக்காற்று வேகமாக வீசி மணற்றிடரில் குவிந்திருந்த மணலை நாலாபுறமும் அள்ளிவீச ஆரம்பித்தது. மணலினுள் புதையுண்டு கிடந்த ஈஸ்வர விக்கிரகத்தின் தலைப்பாகம் தெரியும் வரை சூறாவளிக்காற்று மணலை வெளியில் வீசியது. அப்போது அதுவரை காலமும் தாம் காணாத பிரகாசமொன்றை அம்மக்கள் கண்டு ஆச்சரியம் அடைந்தனர். ஈஸ்வரரின் சிலையின் சிரசையும் முடியையும் கண்ட மக்கள் கைகுவித்து ஈஸ்வரரைத் தொழுதனர். நல்லதொரு நாளில் திருச்சிலையை மணலுக்குள் இருந்து வெளியேற்றி அதே இடத்தில் வேதாகம விதிப்படி உகந்த இடத்தைத் தெரிவு செய்து ஈஸ்வர சிலையை தேவப் பிரதிஷ்டை செய்தனர். அந்த இடத்தில் சிறிய ஆலயம் அமைத்து எம்பெருமானைப் பூசித்து வந்தனர்.

காலப்போக்கில் அப்பகுதி வாழ் மக்களும், அயலூர்களில் வாழ்ந்து வந்த மக்களும் எம்பெருமானின் திருக்கோவிலை விஸ்தரித்து முறைப்படி பராமரித்து வந்தனர். இன்று அத்தலம் ஸ்தல விசேஷம் பொருந்திய திருத்தலமாக வளர்ச்சியுற்றுத் திகழ்கிறது. திருக்கரந்தன் பதியினில் இன்று மனோன்மணி அம்பிகா சமேதராக எம் பிறப்பறுத்து எம்மை ஆட்கொள்ளவென சிவபூத நாதேஸ்வர சுவாமி எழுந்தருளியிருந்து அருள் பாலித்து வருகின்றார்.

பக்தர்கள் ஒன்று கூடி சிவபூத நாதேஸ்வர சுவாமிக்கு ஆண்டு தோறும் சித்திரைப் பூரணையன்று மகோற்சவங்களை ஆரம்பித்து அடுத்த அமாவசைத் திதிக்கு முதல்நாள் தேர் உற்சவத்தையும், அமாவாசையன்று தீர்த்த உற்சவத்தையும் வெகு சிறப்பாக எடுத்து எம்பெருமானைப் போற்றிப் பணிந்து அவனருள் பெற்று வாழ்வில் சகல வளங்களையும் பெற்று இன்புற்று வாழ்ந்து வருகின்றனர்.

திருக்கரந்தன் பதியுறை மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதநாதேஸ்வர சுவாமியின் அருட் கடாட்சம் சகலருக்கும் கிட்டப் பிரார்த்திப்போம்.

அ



நீர்வே
ஷேத்திர
ருபன் பூ
மணி உட
01.05.2011
ணிக்கின்றார். சிஷ்டி -
புரிகின்றனர். இன்றைய
வரரின் தேர்வடம் பிடித்த
இப்பிறவியில் பிறந்த ப
பெறுவீர்களாக.

தேரேறி வருகின்றான்
நல்அருளை புரிகின்றா
எல்லோர்க்கும் அருள்பு
நிம்மதியை தந்திடுவா
எங்கள் உயிர் ஆனவன்
"லோகசமஸ்த்தா சுகி

சிவபூத நாதே



நீர்வே
வேண்டுவா
அகிலலோ
சிவபூதநா
01.05.2011
வாழ்த்தி வ
இன்று
அசைந்து வரும் காட்சி
பிறவியை அனுபவித்து
ருளைப் பெற்று மண்ணி
கின்றேன்.

**சுபவேனுஜா**
உந்துருளி சீர்திருத்தகம்
மாசுவன் சந்தி, நீர்வேலி.
உரிமையாளர்: S.செல்வம்

**பிரபா**
ரான்ஸ்போட்
நீர்வேலி மேற்கு, கரந்தன்.
உரிமையாளர்: S.பிரபாகரன்

**கண்ணன்**
ரான்ஸ்போட்
நீர்வேலி மேற்கு, கரந்தன்.
உரிமையாளர்:
S.மனோகரன் (கண்ணன்)

**முருகா ரவல்ஸ்**
நீர்வேலி மேற்கு, கரந்தன்.
உரிமையாளர்:
E.முருகானந்தம்

**டிச**
ரான்
உரும்பிராய்
உரி
T.

**குகன்**
சிற்றுண்டி அகம்
கோப்பாய் வீதி, உரும்பிராய்
உரிமையாளர்: S.குகன்

**வின்சன்**
வெல்டிங் வேக்ஸ் சொப்
கரந்தன், நீர்வேலி.
உரிமையாளர்: S.வின்சன்

**அம்பிகை அமுதம்**
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்
உரிமையாளர்: K.நந்தகோபன்

**சதா ஹாட்வெயர்**
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.
உரிமையாளர்: S.கரன்

**டனிஸ்**
உரும்பிராய்
உரிமைய

**பவானி களஞ்சியம்**
ராஜ வீதி, நீர்வேலி.
CIC விவசாய இரசாயனப் பொருள்களின் யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்
TAFE உழவு இயந்திர விநியோகஸ்தர்கள்



யாழ்- கொழும்பு மற்றும் கொழும்பு- யாழ்
உள்ளூர் வான் சேவை
**தனேஸ் ரவல்ஸ்**
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
T.தனேஸ்குமார் 0777161842



**மங்கை ஸ்ரோ**
சகல விதமான மளிகை பொருட்கள் கு
கூரையின் கீழ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# த மனோன்மணி அம்பிகா சமேத
# ர சுவாமி தேவஸ்தானம்
# வ சிறப்புமலர் 01.05.2011



## னைவருக்கும் அருள்கிட்ட ஆசி கூறுகின்றேன்

- கோப்பாய்- கரந்தன்- உரும்பிராய்
ில் அருள் ஆட்சி புரியும் பரப்பிரம்மஸ்
ணங்களுக்கு அதிபதியானவன் மனோன்
றை சிவபூதநாதேஸ்வர பெருமான் இன்று
ஞாயிற்றுக்கிழமை சித்திரத்தேரில் ஆரோக
தி- சம்காரம்- திரோபவம் அனுக்கிரகம்
பான்நாளில் அனைவரும் சிவபூத நாதேஸ்
இழுத்து முற்பிறவியில் செய்த பலனையும்
னையும் பெற்று எல்லா நலன்களையும்

பூதநாதேஸ்வரன்
சிவபூதநாதேஸ்வரன்
வான் சிவபூதநாதேஸ்வரன்
சிவபூதநாதேஸ்வரன்
வபூதநாதேஸ்வரன்
பவந்து''

ம்மஸ்ரீ தாணு வாசுதேவ சிவாச்சாரியார்,
ஆலய பிரதமகுரு,
சபரிமலை குருசுவாமி.

## வரரின் அருள் கிட்டட்டும்

கோப்பாய் கரந்தன் உரும்பிராய் பதியிலே
வேண்டுவன ஈந்து அருளாட்சி புரிந்து வரும்
நாயகனாம் மனோன்மணி அம்பாள் சமேத
வர பெருமானின் சித்திர தேரோட்டம் இன்று
ஞாயிற்றுக்கிழமை இடம்பெறுவதையிட்டு
ங்குகிறேன்.
பெருமான் அழகிய சித்திரத் தேரிலே அசைந்து
கோ அழகு. அடியார்கள் இந்த மானிடப்
வடம் பிடித்து சிவபூதநாதேஸ்வரனின் பேர
ல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழ வாழ்த்து

தேவஸ்தான நித்தியகுரு
ம்மஸ்ரீ வாசு ஜெயவஸ்த்தாங்க குருக்கள்.

## திருப்பாதம் துதிப்போம் வா



நீர்வளமும்
நிலவளமும்
நிறைந்து
தோன்றும்
நிகரில்லாச்
செல்வமிகச்
செழிப்பும்
ஊரெழில்சே
திருக்கரந்த
சோலை ம
உன்னதமா
உமை யம்
யோடெழுந்
பாருவக்கப் பவனிவரும் காட்சி காண
பக்தருள்ளம் துள்ளிமகிழ் கொள்ளும் வெல்
தேரேறி வருகின்ற தத்துவச் சீர்
தெய்வமருட் திருவடியே சரணம் என்போம்
தில்லையிலே திருநடனம் புரியும் மெய்யன்
திசையாளும் உரும்பிராய் வளமாம் மண்ண
நல்லூராம் ஊரெழுநீர் வேலி கோப்பாய்
நலஞ்சேரத் துதிப்போரக்கு ஈயும் ஐயன்
எல்லைகளின் காவலனாய் எல்லோர் நெஞ்
ஏற்றுகின்ற திருமேனி உடையோன் தேரில்
தொல்லையகன் றோடவண்ணத் தோற்றம்
தொழுவோர்தம் மனம்களிக்க வருவான் இ
உள்ளத்தைக் கொள்ளையிடும் கல்வி செல்
உமையருள வீரமொடு ஒளிரும் மேலோன்
வள்ளலவன் சிவபூத நாத ஈசன்
வண்ணப்பொன் வடிவழகன் காட்சி காண
வெள்ளம்போல் கூடிநிற்கும் பக்தர்க் கன்பா
வேண்டுமருள் சுரந்தொன்றி வெல்லத் தேரி
கொள்ளைமிகு எழில்சேரக் கொலுவீற் றெங்
குறைதீரப்பான் திருப்பாதம் துதிப்போம் வா

ஆலய தொண்டர் சபை

## தேரேறி அருள் தாராய்...!



பாரினில் உன் புகழ் பரவிட வேண்டும்
பார்த்ததை நானும் பெருமைப்பட வேண்டும்
நான்கு ஊர் மத்தியில் தேர் ஓடிட வேண்டும் மனோன்மணி அம்பாள் சமேத சிவபூதநாதேஸ்வரர் பவனி வரவேண்டும்.
உன் கடைக்கண் பார்வையால் அடியார்க்கு அருட்கடாட்சம் கிடைத்திட வேண்டும்.
என்றும் அடியவர்கள் கேட்ட வரங்களையெல்லாம் வாரி வாரி வழங்கிக் கொண்டிருக்கும் சிவபூதநாதேஸ்வரரின் அருட்கடாட்சம் உலகின் உள்ள எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும் என சிவபூதநாதேஸ்வரர் பாதம் பணிந்து போற்றித் துதிக்கிறேன்.

நா.கதிரமலைநாதன், தலைவர், ஆலய பரிபாலனசபை

## அருட்கடாட்சம் கிட்டட்டும்

நீர்வையூர், கோவையூர் உரும்பிராய் கிழக்குத் திருக்கரந்தன் பதி மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதநாதேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று 2011.05.01 ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிற பஞ்ச கிருத்தியங்களையும் செய்யும் எம் பெருமானாகிய மனோன்மணி அம்பிகா சமேத சிவபூத நாதேஸ்வரப் பெருமானை, பஞ்சப்புலன்களையுமடக்கி அவனருளாலே அவன் தாள் வணங்கி இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யுமாறு சிவனடியார்களைக் கேட்டு அவர்களுக்கு எனது ஆசியையும் கூறிக் கொள்கின்றேன்.

பல்லவி

கமலபாதம் சரணம்
சிவபூத ஈஸ்வரரே உன் (கமல)

அனுபல்லவி

முடிமிசை நதியோடு மூன்றாம் பிறையணிந்து
திருக்கரந்தன் பதியுறையும் சிவபூத நாத ஈஸ்வரரே உன் (கமல)

சரணம்

வேதாந்தம் சித்தாந்தம் விளங்குமுடிவையறி
நாதாந்தம் தனில்நின்று நாடும் மனசை வைத்துப்
போதாந்தம் தெளிந்திடப் புனிதனாகவே மன்றுள்
தாதாந்தமெனவாடும் தகைமையை நாடியுன் (கமல)

கரந்தன் குமரன்,
சைவசிந்தாந்த வித்தகர், புலவர்.

லினி
போட்
கு, உரும்பிராய்.
யாளர்:
நாதன்

ஜெதுர்ஜி
அரைக்கும் ஆலை
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
உரிமையாளர்:
R.ஜெகதீஸ்வரன்

ராஜ்மோகனா
ரான்ஸ்போர்ட்
அன் ரவல்ஸ்
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
உரிமையாளர்: V.தயாசீலன்

ஸ்ரீ நாகாம்பாள்
ரான்ஸ்போர்ட்
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
உரிமையாளர்: S.நக்கீரன்

தணிகை
ரேடர்ஸ்
கரந்தன் வீதி, நீர்வேலி.

ஹொட்டல்
தி, உரும்பிராய்.
ர்: N.தனுசன்

உதயன் பான்சி
உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

கீர்த்திகா
ரெக்ஸ்ரைல்ஸ்
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.
தொ.பே: 0772288245

ரமினா
ரவல்ஸ் அன்ட் சிவமணி கேபிள்
உரும்பிராய் சந்தி, உரும்பிராய்.
உரிமையாளர்: S.ரவி

மதன் ஸ்ரோர்ஸ்
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
உரிமையாளர்: N.மகிந்தன்

ஸ்
விலையில் ஒரே
க் கொள்ளலாம்.
கரந்தன் வீதி,
நீர்வேலி.
உரிமையாளர்:
S.கோகுலன்.
T.P- 0777550915



தேரேறிவரும் எம்பெருமானே போற்றி! போற்றி!! போற்றி!!!
லம்போதரன் ரான்ஸ்போட் சேவை
★ Ceylon Grain ELE பிறிமா நிறுவனத்தின் யாழ். மாவட்டத்திற்கான கால்நடைத் தீவனத்திற்கான ஏக விநியோகஸ்தர்கள்.
★ யானை மார்க் கூரைத்தகடுகளுக்கான யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்கள்.
★ யாழ்-கொழும்பு, கொழும்பு-யாழ் உள்ளூர் உற்பத்திப் பொருள்களை விரைவாகவும் பாதுகாப்பாகவும் ஏற்றி இறக்கும் சேவை.
தொடர்புகளுக்கு:
பொஸ்வெல் பிளேஸ், கொழும்பு 06.
T.P: 0776036283, 0771630988
G.நிசங்கன்
நீர்வேலி மேற்கு, கரந்தன்.
T.P: 0776341328, 0778010056

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான No.1 புறோயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 80/=) 05.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

| | |
|---|---|
| ★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை | 0778996085 |
| ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு | 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | 0774656377 |
| ★ முகுந்தன், பருத்தித்துறை | 0771392593 |

இறைச்சிக் கோழிகள் திருப்பி கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 25.09.1946 — இறப்பு 01.05.2009

### அமரர் ரூபி வேலாயுதபிள்ளை

(தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை)

எம்மிரு விழிகளிலும் கண்ணீர் ஓயவில்லை
ஈராண்டுகள் பறந்தனவே நொடிப்பொழுதில்
கண்ணின் மணிபோல எம்மைக் காத்த அம்மாவே!
என்றென்றும் நின் நினைவு எம்முடனே!

வேல் வைத்தியசாலை,
நீர்வேலி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நாவலர் வீதியில் சில பகுதிகள் சேதம்

வண்ணை, மே.1

நாவலர் வீதியின் சில பகுதிகள் பாவனைக்கு உதவாத அளவுக்கு மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

குறிப்பாகக் கஸ்தூரியார் வீதிக்கும், காங்கேசன்துறை வீதிக்கும் உட்பட்ட பகுதி பெரும்பாலும் குழிகள் உருவான நிலையில் இருந்து வருகிறது. இதனால் அந்த வீதியில் குழிகளில் விழுந்து எழுந்தே செல்ல நேர்வதாகவும் சில வேளைகளில் குழிகளை விலத்தி வாகனங்களை செலுத்துகையில் எதிரில் வரும் வாகனத்துடன்மோதி விபத்துகளும் ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைச் சம்பந்தப்பட்டவர்கள் சீர்செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளன. (த-160)

## மேதின சுவரொட்டிகள்

இன்று நடைபெறவுள்ள மேதினத்தையொட்டி பல்வேறு அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்கள் குடாநாட்டின் பல இடங்களிலும் சுவரொட்டிகளை ஒட்டியுள்ளதுடன் பதாகைகளையும் தொங்கவிட்டுள்ளன. அத்துடன் அரசியல்வாதிகளின் பெயரிலும் தொழிலாளர்களுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் பதாகைகள் தொங்க விடப்பட்டுள்ளன.(த-38)

## சாய் சங்கீதா



சகலவிதமான இசைக்கருவிகளையும், உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
(யாழ்ப்பாணத்திலும் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்)
U.G. 53, பீப்பிள்ஸ் பார்க், காஸ் வேக்ஸ் வீதி,
கொழும்பு - 11.
Tel : 011 2384222 - 2445102

## சிறுநீரகம் தேவை

எனது மகன் துரைராசா சசீகரன் என்பவருடைய இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்துள்ளமையால் உடனடியாக மாற்றுச் சத்திர சிகிச்சை செய்யவேண்டுமென வைத்தியர்கள் பணித்துள்ளார்கள்.

எனவே கருணையுள்ளம் கொண்ட உதவும் கரங்களிடமிருந்து O - (O negative) குருதி வகையைச் சேர்ந்த சிறுநீரகம் ஒன்றை வழங்கி உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உதவுபவர்களுக்குத் தகுந்த
சன்மானம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0777114862, 0777034269

(3541)(40) து.இராசேஸ்வரி.

## உடன் விற்பனைக்கு

TOSHIBA-181போட்டோக் கொப்பி இயந்திரத்துடன் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0775925096 (21-43)-3613)

## வீடு வாடகைக்கு

யாழ்.புங்கங்குளம் சந்தியிலுள்ள 3 அறை, 2 வரவேற்பறை மற்றும் சமையலறை, குளியலறை கொண்ட வீடு வாடகைக்குண்டு. (நிறுவனங்கள், கம்பனிகள்,மொத்த வியாபார நிலையங்கள்) விரும்பத்தக்கது.
தொடர்பு: 0779937402

## மணமகள் தேவை

*யாழ்.இந்து கௌரவ குடும்ப 33 வயது, பூரம், 8இல் செவ்வாய், உயரம் 5'-10" உள்ள, படித்த மெலிந்த அழகான யாழ்.நகரில் பிரபலதனியார் நிறுவனத்தின் உரிமையாளருக்கு மெலிந்த அழகான படித்த மணமகளைப் பெற்றோர் தேடுகின்றனர்.*

*குறிப்பின் மூலப்பிரதியின் கொப்பியுடன் விண்ணப்பிக்கவும்.*

மே/பா.இல.4138
உதயன், யாழ்ப்பாணம். (ஏ/577940)

## எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி




- சகலவிதமான சளி, இருமலுக்கும் சிறந்த நிவாரணி
- தொடர்ச்சியாகப் பாவித்துவரும்போது ஆஸ்மா நோய்க்கு சிறந்த நிவாரணி
- 100 வீதம் மூலிகை கொண்டது
- ஆயுர்வேத சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது

யாழ்ப்பாணம், வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் உள்ள எல்லா மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எவரெஸ்ட் மருந்தகம்
AY/MF/JA/295, உசன், மிருசுவில். (109685)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி துரைராஜா தேவகி

*(ஓய்வுபெற்ற தொலைக்கல்விப் போதனாசிரியையும்*
*யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயப் பிரதி அதிபரும்)*

**தோற்றம்:**
**27.04.1942**

**மறைவு:**
**30.04.2008**

நீண்டகாலம் நோய் நொடியில்லாமல் வாழ்வாய்
என எண்ணிய எமக்குச் சிலமணி நேரத்தில்
சென்று வருகிறேன் என்றாய் அம்மா தாயே!
பாசத்தால் கட்டுண்ட நாம் கலங்குகின்றோம்
ஆண்டுகள் மூன்றுதான் சென்றாலும் அருகிருக்கிறாய்
தேவா தேவா என பலரும் கூப்பிடுவது கேட்குதம்மா
நீ அணைத்து அணைத்து வளர்த்தாயே அம்மா
எத்தனைபேர் உன்னை மறந்தாலும்
உன் நாமம் உன் பண்பு உன் உபசரணை
அறிவூட்டிய திறமை அரவணைத்து ஆறுதல்
சொல்ல எத்தனை ஆயிரம்பேர் அம்மா
தாங்கள் வாழ்ந்த காலம் எம்மை அடிமைப்
படுத்திய காலம் அம்மா நினைக்கின்றோம்
உன் நாமம் நிலைக்குமம்மா
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்:
*கணவர்.*

புறாடி லேன், அரியாலை
யாழ்ப்பாணம்.

(48,21,26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளர்களும் பொதுமக்களும் வைத்தியசாலை நடைமுறையை இலகுவாக்கல்

யாழ்.போதனா வைத்தியசாலையை நாடும் நோயாளர் பொதுமக்களின் நலன் கருதி அவர்களின் தேவைகளை உரிய முறையிலும் உடனடியாகவும் தாமதமின்றிப் பெற்றுக் கொண்டு எதுவித விரயமுமின்றி வினைத்திறனுடன் செயற்பட்டுச் செல்ல !பின்வரும் பிரிவுகளில் எவ்விதம் செயற்பட வேண்டும் எனும் வழிமுறைகளை வரிப்படுத்துகின்றேன். இந்த வழிகளைப் பின்பற்றிப் பதிவுகளையும் பத்திரங்களையும் மேலும் சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

**பிறப்பு இறப்புப் பதிவுகள்**

ஒரு மனிதனின் பிறப்புக்கும் வாழ்வுக்கும் அவனின் மரணத்துக்கும் இந்தப் பத்திரங்கள் மிக மிக முக்கிய மானவை, இன்றியமையாதவை. அவனின் (வாழ்வுக் கும்) வாழ்க்கைத் தேவைகளுக்கும் மரணத்தின் பின் அவனின் உறவுகளின் வாழ்க்கைத் தேவைகளுக்கும் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மிகவும் அவசியமானவை. இவற்றில் பதியப்படும் பதிவுகளில் ஏதாவதொரு தவறு நிகழும்போது அது அவனின், அவளின் அன்றாட அனைத்துத் தேவைகளிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. அதாவது படிப்பு, பதவி, உதவி, மருத்துவம், குடும்ப விவரம், அரச உதவிகள், ஊக்குவிப்புக்கள் இப்படி இன்னோரன்ன செயற்பாடுகளில் தடங்கல்கள், தாமதங்கள் வீண் விரயங்கள், மீண்டும் மீண்டும் உறுதி செய்து கொள்ளும் சத்தியக் கூற்றுக்கள். இவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான ஆள் தேடல்கள், அலைக்கழிவுகள், இழுபறிகள், வாய்ப்புக்கள், கை நழுவுதல், மனச்சுமைகள் இதனால் உடல், உளப் பாதிப்புக்கள் என்று தொடர் தொந்தரவுக்கே இடம்தேடிக்கொள்ளும். எனவே இவைகளைக் கருத்திற் கொண்டு உண்மைகளைக் கூறி உரிய முறையில் பதிவுகளை மேற்கொள்ளும் போது மேற்கூறிய அனைத்துச் சிக்கல்களிலும் இருந்து விடுபட்டுக் கொள்ளலாம்.

✱பெயர்களைக் கூறிப் பதிவுகளை மேற்கொள்ளும் போது பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ளபடி எழுத்துப் பிழைகள் இன்றிப் பதிந்து கொள்வதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

✱ஆண்டு, மாதம், திகதிகள் சரியான முறையில் வடிவான, முறையான எழுத்துக்களில் எழுதிக் கொள்ள வேண்டும்.

✱புதிய பெயர்களைச் சூட்டும் போது பெயர்கள் உரிய முறையிலும் உச்சரிக்கக்கூடிய வகையிலும் தனித்தனியான எழுத்துகளிலும் மற்றவர்களால் மாற்றி வாசித்துத் தவறாகப் புரிந்து கொள்ள முடியாத வகையிலும் எழுதிக்கொள்ள வேண்டும்.

✱தாய், தந்தை விவரங்களும் இவ் வாறே அவரவர்களின் பிறப்பு அத்தாட் சிப் பத்திரத்தில் உள்ளபடி எழுத்துப் பிழைகள் அற்றதாக எழுதிக் கொள்ள வேண்டும். (திருமண அத்தாட்சிப் பத்திர்த்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்)

✱முகவரியும் முக்கியமானதொன்றாகையால் இதில் பிரிவுகள் உரிய முறையில் பதிந்து கொள்ள வேண்டும். பிரதேச செயலரின் பிரிவு, பதிவு சரியான ஒழுங்கில் இருக்கும் போது பிறப்பு, இறப்புப் பிரதிகள் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படாது.

எனவே இவைகளைக் கருத்திற் கொண்டு உரிய முறையில் பதிவுகளை மேற்கொண்டு பிறப்பு, இறப்பு பத்திரங்களை வழுக்கலற்றதாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**விடுதியில் அனுமதி பெறல்**

நோய் நிமித்தமோ, மகப்பேற்றின் நிமித்தமோ விடுதியில் அனுமதி பெறும் போது வைத்தியர்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கும் பதிவுகளை மேற்கொள்வோரால் கோரப்படும் கேள்விகளுக்கும் உரிய முறையில் மிகவும் சரியான தரவுகளை வழங்கி பதிவுகள் செய்து கொள்ளவேண்டும்.

✱பெயர், வயது, முகவரி முழுவதும் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ளபடியும் அல்லது திருமணப் பதிவு பத்திரத்தில் உள்ளபடியும் பதிந்து கொள்ள வேண்டும். இதை விடுத்து வீட்டுப் பெயர், செல்லப் பெயர், பட்டப் பெயர் எனக் கவலையீனமாகப் பதியும்போது அத்தாட்சிப் பத்திரத்தில் அவைகளே வந்துசேரும். இதனால் பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும்.

✱ஒருவர் முன்பு விடுதியில் அனுமதி பெற்றிருந்தால் அதற்கு வழங்கிய நோய் நிர்ணய அட்டையைத் தன்னுடன் வைத்துக் கொள்ள வேண்டும்.

✱ஒவ்வாமை ஏதாவது இருப்பின் அதை வைத்தியரிடம் சொல்ல மறக்கக் கூடாது.

✱அனுமதிக்கு முன் எடுத்த சிகிச்சைகள் உட்கொண்ட மருந்துகள் பற்றிய விவரங்களையும் வழங்க வேண்டும். மற்றும் வைத்தியசாலையில் போடப்பட்டிருக்கும் வழிகாட்டும் தரவுகளை வாசித்து அறிந்து நேர தாமதத்தையும் விடுதியுடனான சுய பாதுகாப்பையும் மேற்கொள்ளப் புரிந்து நடந்து கொள்ள வேண்டும்.

எனவே மேற்கூறிய (சொன்ன) விடயங்களைக் கருத்திற் கொண்டு உரிய முறையில் தெளிவுபடப் பதிவுகளை மேற்கொண்டு வழிமுறைகளைக் கடைப்பிடித்து ஒழுகும்போது நீங்கள் நன்மை அடைவதோடு சமூகத்துக்கும் உதவ முடியும் என்பதே கண்கூடு. ✱

**ஜெ.ஜெயந்தன்.**
பொதுசன தொடர்பு உத்தியோகத்தர்.
யாழ். போதனா வைத்தியசாலை.

# சொறி, சிரங்கைக் குணப்படுத்த வல்லனவாக வெண்குங்கிலியமும் புங்கும் உள்ளன

**குந்திருக்கம்**

**வேறுபெயர்:** பறங்கிச் சாம்பிராணி, வெண்குங்கிலியம், குமைஞ்சான், நறும்பிசின்
**தாவரவியற் பெயர்:** Boswellia Serrata (பொஸ்வேலியா சேரேற்றா)
**குடும்பம்:** Bursrraceae (பேசரேசியே)
**சிங்களப் பெயர் :** குந்திரிக்கம்
**சமஸ்கிருதப் பெயர்:** ஷாலகி
**ஆங்கிலப் பெயர்:** Indian Olibanum

இது நடுத்தர உயரமுடைய மரம். கூட்டிலைகள். எதிரான இலை ஒழுங்கு, நுனியில் தனிச் சிற்றிலை. இலை விளிம்பில் பற்களுண்டு. மாசி, பங்குனியில் பூக்கும். பூக்கள் ஊதா கலந்த வெண்மை நிறம். நறுமணமுடையவை. மரத்தைக் காயப்படுத்திப் பெறப்படும் மரப்பாலே பறங்கிச் சாம்பிராணி எனப்படுகின்றது.

இதன் மரப்பட்டை, பிசின் (சாம்பிராணி) என்பன மருத்துவத்தில் பயன்படுகின்றன. பட்டையை அவித்து புண்களைக் கழுவி வர மாறும்.

பறங்கிச் சாம்பிராணியைப் பொடி செய்து சிறிது தேங்காய் எண்ணெயில் சேர்த்துக் காய்ச்சி நாள்பட்ட புண்களின் மீது பூசிவர அவை மாறும். படர் தாமரை, சிரங்கு போன்றவற்றிற்கும் இதைப் பூசலாம்.



பறங்கிச்சாம்பிராணி, நல்லெண்ணெய், வெண்மெழுகு ஆகியவற்றைச் சமவளவில் எடுத்து லேசாகச் சூடுகாட்டி களிம்பாக எடுத்து படர்தாமரை கட்டிகள், சிரங்கு, விரணம் என்பவற்றுக்குப் பூசிவர மாறும்.



பறங்கிச் சாம்பிராணியைத் தனித்தாவது கருவேலம் பிசினுடன் கலந்தாவது வாயிலிட்டு மென்று வர வாய்த்துர்நாற்றம் நாச்சுவையின்மை என்பன நீங்கும்.



**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**

**புங்கு**

**வேறுபெயர்:** புங்கமரம்
**தாவரவியற் பெயர்:** Pongamia glabra (பொங்காமியா கிளப்ரா)
**குடும்பம்:** Fabaceae (பேபேசியே)
**சிங்களப் பெயர் :** கரந்த
**சமஸ்கிருதப் பெயர்:** கரன்ஜ
**ஆங்கிலப் பெயர்:** Indian Beach Tree

இது பெரு மர வகுப்புக்குரியது. படர்ந்து சடைத்து வளரும். கூட்டிலைகள் 3-5 சிற்றிலைகள் காணப்படும். முட்டை வடிவானவை.

பங்குனி சித்திரையில் பூக்கும். பூக்கள் சிவப்பு அல்லது ஊதா நிறம். அவரைப் பூ வடிவானவை. இதன் இலைகள் மெதையில் ஐசோசயனைட் போன்ற நச்சுக் காற்றையும் உறிஞ்சக் கூடியவை என்று ஆள்வாளர் கூறுகின்றனர்.

எனவே சுற்றாடலைத் தூய்மையாக்கி மக்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு இந்த மரம் உதவுகிறது. இதன் இலையை அரைத்துப் புழுப் பிடித்த புண்கள் மீது கட்டிவர புழுக்கள் செத்து விழும்.

புங்கம் இலை நரம்பு (ஈர்க்கு), கறிவேப்பிலையைக் கூர், நுணா ஈர்க்கும், உள்ளிப் பூடு என்பவற்றை சமவளவு எடுத்துச் சட்டியிலிட்டுக் கருக வறுத்து கருகியதும் நீர்விட்டுக் குடி நீராக்கி மாந்த நோய்க்குக் கொடுத்து வர மாறும்.

பூக்களை இரவில் நீரில் ஊறவைத்துக் காலையில் அந்த நீரைப் பருகிவர நீர் வேட்கை, தாகம் தணியும். நீரிழிவினால் ஏற்படும் தாகத்துக்கு இது நல்லது.

இதன் விதையிலிருந்து எடுக்கப் படும் எண்ணெய் புங்கெண்ணெய் எனப்படுகிறது.

இதை மூட்டு வாத வலி, தசைப் பிடிப்பு, நாரிப்பிடிப்பு போன்றவற்றுக்குப் பூசிவர வேதனை, பிடிப்பு என்பன குறையும். மேலும் இந்த எண்ணெயைச் சொறி, சிரங்கு, கரப்பன் புண்களுக்கும் பூசலாம்.



(தொடரும்...)

**Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 160

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | 4 | 5 | 6 |
| 7 | | | | 8 | | | |
| | | 9 | 10 | | | 11 | |
| 12 | | | | | 13 | | |
| | | 14 | | 15 | | | 16 |
| 17 | 18 | | | 19 | | | |
| 20 | | | 21 | | | | |
| | | 22 | | - | | 23 | |

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1.தருமநூல்
4.தங்களது
7.சிலம்புக்குள் இருக்கும் சிறு பருக்கைகள்
8.இரக்கம்/கொடை
9.பல்லாயிரம் வருடங்கள் கொண்ட காலம்
11.கச்சு/வார்/கயிறு
12. பயன்படுத்திய/உபயோகித்த
13. கதவின் கொழுக்கி/பூட்டு
14.கணவன்/மனைவி
17.வகுப்பு
19.பின்நில்
20.வசி.
21.கூறு
22.கோபம்/சினம்
23.தங்கம்

### மேலிருந்து கீழ்

1.நெருக்கடியின் போது உதவுபவன். மாய கிருஷ்ணனுக்கு இப்படியும் ஒரு பெயர்.
2.களவு.
3.உடற்போர்.
4.குளிர்மை.
5.விவாக தினம்.
6.தளிர்.
8.தமது.
10.தண்டம்/ ஓர் ஆயுதம்.
13.மருத்துவ உதவியாளர்கள்
15.பதற்றமுறு
16.பாண்டவருள் ஒருவன்.
18.மன்மதன் காதலி.
21.பிரித்தெடு.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 158 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)சபா (3) அதிகாரம். (7)காம்பு. (9)ரிதம் (10)புத்தகம். (14)தகடு. (15) நாடு (16)நாகர் (18)கடிதம். (19) தர. (20)தம் (21)சுப (22)ரம்பம் (24) பூரம் (25) சுபிட்சம்.

### மேலிருந்து கீழ்

(1) சகா (2)பாம்பு. (4)திரிகடுகம். (5)காதம் (6)ரம் (8)புத்தர் (11)தக(12)குடும்பம் (13)அநாதரவு (15)நாதசுரம் (17)கரம் (20)தம்பி (23)பசு(24)பூச.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 158 இற்கான சரியனவிடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு
**ப.மேரி,**
அண்ணா கோப்பி வளவு, பாலி நகர், வவுனிக்குளம்

2 ஆம் பரிசு
**ரா.உஷாந்தினி,**
ஆண்டு -8, ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி, புத்தூர்.

3 ஆம் பரிசு
**ந.ஜெயகணேசன்,**
பண்டித்தாழ்வு, காரைநகர்.

4 ஆம் பரிசு
**ச.ஏகநாதன்,**
மாதகல் வடக்கு, மாதகல்

5 ஆம் பரிசு
**சிவரம்யா சிவநாதன்,**
24/4,1/1 பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை, கொழும்பு-6

### பாராட்டுப் பெறுவோர்

**செல்வி ஞானமூர்த்தி கஜேந்தினி**
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.

**சி.சிந்துஜா,**
184, பிரதான வீதி, நெல்லியடி.

**செ.றொபேட்,**
114 1/1 நியூநாம்குயர், கொழும்பு- 13

### போட்டி விதிகள்

*1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.*

*2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்*

*3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.*

*4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.*

*5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.*

*6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,*

**சொற்சிலம்பம் போட்டி இல. 160**

*நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,*
*இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

*என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 11.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.*

*7. சொற்சிலம்பம் போட்டி இல.159 இல் வெற்றிபெறுவோர்களது விவரம் 15.05.2011 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.*

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# அயல்....

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அன்று துரைச்சாமி தொழில் செய்வதற்கு எங்குமே செல்லவில்லை. மூக்கு முட்டக் குடித்து விட்டு வந்து தகாத வார்த்தைகளால் அவர்களைத் திட்டுவதும் அவர்களின் மனங்களைக் காயப் படுத்துவதும் அவனுக்கு மனநிறைவைக் கொடுப்பதால் தன் பல்லவியை வாசிக்க ஆரம்பித்தான்.

''அடியே! உங்கட வேலியால வாற குப்பைகளைக் கூட்ட இஞ்சை வேலைகாரர் இல்லை. ஒண்டில் இஞ்சால விழுகிற இலைகுழைகளை நீங்கள் கூட்டித் துப்புரவு செய்யுங்கோ இல்லை... உந்தக் காணியின்ரை வேலியை எங்களுக்குத் தாருங்கோ. இல்லை காணியையே எங்களுக்குத் தந்திட்டு நீங்க வெளிக்கிட்டு எங்கையும் போங்கோ''

தன் மனதில் ஒளிந்திருந்த ஆசையை வெறியின் நிமித்தம் வெளியிட்டான். ''உவையிட்ட என்ன கேக்கிறது எங்களுக்குப் பாதுகாப்பு வேணும். மரங்களைத் தறிச்சுப் போட்டு மதிலைக் கட்டி விடுங்கோ'' மனைவி பக்கப் பாட்டுப் பாடினாள்.

வியாபாரம் முடிந்து வேளைக்கு வீடு திரும்பும் துரைச்சாமி தேக அலுப்பைப் போக்க என்று குடித்துவிட்டு வந்து வேலியைச் சாட்டாக்கிக் கொண்டு அன்னம் வீட்டாருடன் வீண்பகை கொள்வதும் கதியால்களை வெட்டுவதும் பூவரச மரங்களைத் தறித்து விற்பதுமான அடாவடிச் செயல்களால் அன்னம் தனது நடுவேலியைத் துரைச்சாமியிடம் கையளித்துவிட்டு அமைதியாக ஒதுங்கிக் கொண்டாள்.

மறுநாளே பூவரச மரங்களெல்லாம் வெட்டப்பட்டதுடன் விற்பனைக்குச் சென்றன. மரங்கள் நின்ற இடத்திலே மதிற்சுவர் கம்பீரமாய் காட்சி அளித்தது.

இப்பொழுதோ துரைச்சாமிக்கு படுபட்சி வியாபாரம் நட்டத்தால் நலிவுற்றது. ஆனால் குடிப்பழக்கமோ அதிகரித்தது. வருமான மின்மையால் வறுமை தலை தூக்கியது.

ஒருநாள் அவன் அதிக மதுபோதையில் மிதமிஞ்சிய வேகத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி விபத்துக்குள்ளாகி தனது வலது காலையும், இடது கையையும் இழந்துவிட்டான். அவன் தேடிய பணமெல்லாம் வைத்தியத்துக்குச் செலவானது. அன்றிலிருந்து அவன் ஊனமானான். முச்சக்கர வண்டியில் ஊர்ந்து திரியலானான்.

இன்று கைவரண்ட நிலையில் ஓலைக்கிடுகுகளால் வேயப்பட்ட ஓட்டை வீட்டின் விறாந்தை மூலைக்குள் சுருண்டு படுத்திருக்கின்றான்.

காலைப் பொழுது புலர்கிறது. சூரியனின் செழும் கதிர்கள் பூமியை முத்தமிடுகின்றன. இரவு பெய்த மழை நீரெல்லாம் பள்ளங்களை நாடி ஓடுகின்றன.

ஆனால்... துரைச்சாமியின் வளவை நிறைத்த வெள்ளமோ தான் வழக்கமாய் போகும் வழியைத் தேடி அங்குமிங்கும் காற்றின் உந்துகையால் அசைகின்றது. துரைச்சாமி கண்களை விழித்துப் பார்க்கிறான்.

ஏக்கமும் அதிர்ச்சியும் அவனை ஆட்கொண்டன. முற்றத்தில் நின்ற மூன்று சில்லுச் சைக்கிள் வண்டியின் அரைவாசிப் பகுதி வெள்ளத்துக்குள் மூழ்கி இருந்தது.

வளவை நிரப்பிய வெள்ளம் காற்றில் அசைந்தாடிப் புதிதாய் அமைத்த மதிற் சுவரில் முட்டி மோதி மீண்டும் தனது இருப்பிடத்தை நாடி வரும் செயலின் மூலம் பிறருக்கு நாம் செய்யும் தீங்கு அவர்களைத் தீண்டாது. மறுபடி நம்மையே வந்து சேரும் என்ற பாடத்தை அந்த நீர் கற்றுக் கொடுப்பதை அவன் உணர்ந்தான்.

அன்னமும் அவளின் மூன்று பிள்ளைகளும் தேநீருடன் காலை உணவையும் எடுத்துக் கொண்டு துரைச்சாமியின் வீடு தேடிச் சென்றனர். அவர்களின் கேற்றைத் திறந்து பார்த்தவுடன் துரைச்சாமியின் வளவுக்குள் முழங்காலளவு வெள்ளம் வழிந்தோட முடியாத நிலையில் நிறைந்திருப்பதைக் கண்டனர்.

அன்னம் ஒருவினாடி ஏதோ சிந்தித்தவளாய் சீலையை அள்ளி இடுப்பினிற் சொருகியவாறு.... ''பிள்ளையள் அவதானமாய் மெல்ல நடந்து வாருங்கோ சேறு வழுக்கி விழுத்திப் போடும்'' என்றபடி நடந்தாள்.

அவளைத் தொடர்ந்து பிள்ளைகள் மூவரும் தண்ணீரில் நடந்த போது கடலலை பெருகி எழும் பேரிரைச்சல் போன்றிருந்தமையால் அதனைக் கேட்ட துரைச்சாமியும் குடும்பத்தாரும் சத்தம் கேட்ட திசையை நோக்கித் திகிலுடன் பார்த்தார்கள்.

''அண்ணை!... ஒருவரின் அவசர தேவையில் அவங்களுக்கு ஏற்ற உதவி செய்யிறதுதான் மனித நேயம். இப்ப நாங்க உங்களுக்குச் செய்யிற இந்தச் சின்ன உதவியை, நீங்க மறுக்காம ஏற்றுக் கொள்ள வேணும். ஆதரவான வார்த்தைகளை உதிர்த்தபடி சுற்றி வரப் பார்த்தாள். அங்கிருந்த சிறிய மேசையில் அனைத்தையும் வைத்து விட்டுப் புறப்படத் தயாரான அன்னம், எதையோ சிந்தித்தவாறு ஒருகணம் துரைச்சாமியைத் திரும்பிப் பார்த்தபடி ''அண்ணை...! சொல்லுறனெண்டு கோவிக்காதேங்கோ இப்ப கட்டின உந்த மதில்ல இரண்டு ஓட்டை வைச்சீங்கள் எண்டா, இந்த வெள்ளமெல்லாம் என்ரை காணிக்கால பாஞ்சு வெள்ள வாய்க்காலுக்குப் போய்ச் சேருமல்லே.

சற்றும் எதிர்பாராத வார்த்தைகளால் பதில் சொல்ல முடியாமல் துரைச்சாமி தவித்தான். இதைக் கேட்ட பொன்னம்மா...

''எடி பிள்ளை...! இவ்வளவு வெள்ளமும் உங்கட காணிக்கால பாயிறதெண்டு சொன்னா உன்ரை மண் சுவரைக் கரைச்சு வீடு பாறிப் போயிடுமல்லே''

அவளின் உதடுகள் துடித்தன. கண்களில் நீர்த் திவலைகள் பனித்தன.

இதனைக் கேட்ட அன்னம் பொன்னாம்மாவின் கரங்களை இறுகப் பற்றியவாறு...

''அக்கா....! இவ்வளவு காலமும் இந்த வெள்ளம் எங்கடை வளவுக்கால தானே பாஞ்சு போனது. ஒரு கதைக்குச் சொல்லுறன் அப்பிடித்தான் அந்தச் சுவர் விழுந்தாலும் நீங்களும் அண்ணையும் இருக்கிறியள் தானே'' என்றவாறு அன்னம் பிள்ளைகளுடன் அந்த இடத்தை விட்டு நகர்ந்தாள்.

''தீமையைச் செய்த எங்களுக்கு நன்மையைச் செய்து எங்களை இவை காப்பாற்றுவினம் எண்டு, நான் கனவிலையும் நினைக்கயில்லை'' துரைச்சாமியின் வாய் நடுங்கிவாறு கூறியது. ''இவ்வளவு நல்ல மனிசரோடை நாங்கள் அவங்கட காணியை அபகரிக்க எவ்வளவு சண்டையளைப் பிடிச்சு அவங்கட மனங்களை நோகடிச்சுப் போட்டமப்பா...'' என்றவாறு சீலையை இழுத்து இடுப்பில் சொருகிய படி...

''எட சுதர்சன் தலைக்கொரு சொப்பிங் பையைக் கட்டிக் கொண்டு அலவாங்கை எடுத்துக் கொண்டு வா'' என்று கூறியவள் தண்ணீருக்குள் காலை வைத்தாள். அனைத்தையும் நிதானமாய் கவனித்துக் கொண்டிருந்த துரைச்சாமியின் கண்கள் கலங்கின.

நிச்சயமாக இந்தக் கண்ணீர் அவனின் கபட நெஞ்சையும் கழுவி இருக்கும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 17

# தாய்ப்பாலின் மகத்துவம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

**தாய்ப்பால்**

1.இது குழந்தையின் போசாக்கை மேம்படுத்த உருவாக்கப்பட்டுள்ள பால்.

2.மனித உடல் வளர்ச்சிக்கும் மூளை, விருத்திக்கும் அவசியமானது.

3.இதில் புரதத்தின் அளவு குறைவாகவே (15%) காணப்படுவதனால் இலகுவில் சமிபாடடையக் கூடியது.

4.அத்தியாவசியமான அமினோ அமிலங்கள் சகலதும் காணப்படுகிறது.

5.இதில் காணப்படும் புரதம் உடலினால் இலகுவாக உறிஞ்சப்படும்.

5.கொழுப்பின் அளவு சீராக இருப்பதனால் மூளை வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது.

7.நோய் எதிர்ப்பு சக்தி குழந்தைக்குத் தாய்ப்பாலின் மூலம் கிடைக்கின்றது. கிருமித்தொற்று இல்லாதது.

8.மேலதிக செலவு அற்றது.

9.எவ்வேளையிலும் கிடைக்கக்கூடியதாக இருப்பதுடன் ஏற்ற வெப்பநிலையும் காணப்படுகிறது.

10.தாய், சேய் பாசப்பிணைப்பை மேம்படுத்துகிறது.

11.போசாக்கின்மையில் இருந்து மீட்சியளிக்கும்.

12.புற்றுநோய் ஏற்படுவதற்குரிய தாக்கம் குறைவு.

13.குழந்தைப் பருவத்தில் தாய்ப்பால் குடிப்பதால் பிற்காலத்தில் ஏற்படும் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற நோய் நிலைமைகள் ஏற்படாது.

14.தாயின் கர்ப்பை, மற்றும் மார்பகப் புற்றுநோய் அபாயங்களைக் குறைக்கும்.

பிரவசத்தின் பின் பாலூட்டுவதால் கர்ப்பப்பை விரைவாகச் சுருங்கிவிடும்.

இதனால் குருதிப்போக்கு குறைக்கப்படும்.

16.கனிப்பொருள்கள் உரிய அளவில் உண்டு.

17.நீரின் அளவு குழந்தைக்குப் போதுமானது.

18.குறைமாதப் பிரசவக் குழந்தைகளுக்கும் ஏற்ற விதமான உணவாக அமையும்.

19.குழந்தை பிறந்து முதல் சில நாள்களில் சுரக்கும் பாலில் காணப்படும் கொலஸ்ரம் குழந்தைக்கு அத்தியாவசியமானது.

**புட்டிப்பால்**

1.இது பசுக்கன்றின் போசாக்கிற்கு என உருவாக்கப்பட்டுள்ள பால்.

2.கால் நடையின் ஆகாரமாக இருப்பதனால் மிருகத்திற்கு விருத்திக்குத் தேவையான விதமாகவே அமைந்துள்ளது.

3.இதில் புரதம் 35% காணப்படுகின்றது.

4.இதில் காணப்படும் புரதத்தை மனித உடல் ஏற்காததனால் அவற்றை உடலில் இருந்து வெளியேற்ற நடைபெறும் செயற்பாட்டினால் பாதிப்பு உண்டாகும்.

5.இதில் உள்ள புரதம் உறிஞ்சப்படும் வீதம் குறைவு.

6.கொழுப்பின் அளவு கூடுதலாகக் காணப்படுவதனால் பசுவின் விருத்திக்குச் சிறந்தது.

7.எதிர்ப்புச் சக்தித் தன்மை இல்லாதிருப்பதுடன் கிருமித்தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

8.மேலதிக செலவுண்டு.

9. தேவையான வேளையில் தேவையான உஷ்ணத்தை ஏற்படுத்த வேண்டும்.

10.தாய்-சேய் பாசப்பிணைப்பு குறைவடையும்.

11.போசாக்கின்மைக்கு ஆளாக்கும்.

12.நோய் ஏற்பட்டு வைத்தியசாலைக்குச் செல்லும் நிலமை ஏற்படும்.

13.நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் பிற்காலத்தில் ஏற்படச் சந்தர்ப்பம் அதிகம்.

14.இவ்வாறான தன்மைகள் இல்லை.

15.கனிப்பொருள்கள் அதிகம்.

**கோ.நந்தகுமார்,**
விரிவுரையாளர், தாதியர் பயிற்சிக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

16.நீர் சேர்க்கும்அளவைப் பொறுத்துப் பாலின் தரம் அமையும்.

17. குறை மாதத்தில் பிறந்த குழந்தைகளுக்கு ஆபத்தானது.

19.கொலஸ்ரம் காணப்படாது.

மேற்குறிக்கப்பட்ட ஒப்பீட்டில் இருந்து தாய்ப்பாலின் மகத்துவத்தை நன்கு விளங்கிக் கொள்ளலாம்.

எனவே இறைவனின் அரும் பெரும் கொடையான தாய் பாலினை குழந்தைக்கு ஊட்டுவதற்கு தாய்மார் பின்நிற்றல் கூடாது.

(முற்றும்)

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது.மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

# எடை காத்து நலன் பேணுங்கள்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

புரதங்கள் தாவர உணவான பயறு, பருப்பு, சோயா, கடலை போன்ற அவரையின் உணவுகளிலும், தானிய வகைகளிலும் காணப்படுகின்றது, மாமிசங்களில் காணப்படும் கொழுப்பானது நிரம்பிய கொழுப்பு அமிலங்களைக் கொண்டவை. இவை குருதியில் கொலஸ்ரோல் அளவை அதிகரிக்கச் செய்பவை.

எனவே இதய நோய் உள்ளவர்கள் மற்றும் எடை குறைக்க விரும்புவோர்கள், குருதியில் கொலஸ்ரோல் உள்ளவர்கள், தங்களின் புரதத் தேவையை தாவர உணவுகளில் இருந்து பெறுவது சிறந்தது.

ஒருவருக்கு பசி எடும்கும்போது வயிறு நிறைய உண்ணக்கூடியவை பயறு, பருப்புவகை, பழவகைகள், தானியவகைகள், காய்கறிவகைகள்.

ஒரளவு உண்ணக் கூடியவை கொழுப்பு நீக்கிய பால், யோக்கற், முட்டை, வெள்ளை மீன் மற்றும் கடலில் கிடைக்கும் நண்டு தவிர்ந்த சிறிய மீன் வகைகள்.

**தவிர்க்க வேண்டியவைகள்**

மிருக இறைச்சி முழுமையான பால் உணவுகள் விதைகளும் மதுபானங்கள் இப்படி பொதுவாக கூறினாலும் ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ற உணவுகளை தாங்களே கண்டு அளவு அறிந்து எடுத்துக் கொள்வது தான் சிறந்தது. ஒருவரின் நிறை பருமனை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது அவர் எடுக்கும் உணவே யாகும்.

ஒவ்வொருவரும் தங்களுடைய நிறை எவ்வளவு இருக்கவேண்டும் என அறிய ஆவலாக இருப்பது இயல்பு. இது அவர்களுடைய உயரத்துக்கு ஏற்ப விஞ்ஞான ரீதியாகக் கணிக்கப்பட்டுள்ளது. இதனை உடற்திணிவு சுட்டெண் என அழைக்கப்படும் (Body Mass Inder) (BMI) நிறையின் கீழ் உயரத்தின்வர்க்கம் (BMI) உடற்திணிவு சுட்டெண் $\frac{\text{எடை (Kg)}}{\text{உயரம்2 (மீற்றர்)2}}$ இதன் அலகு $Kg/m^2$, எமது நாட்டில்,

**ஆண்களுக்கு**

சாதாரணமாக 20-25 $Kg/m^2$ BMI - 20இற்கு குறைவாயின் மெலிந்தவர்கள் எனவும், 25இற்கு மேல் ஆயின் நிறை கூடியவர்கள் எனவும் 30இற்கு மேல் ஆயின் அதீத பருமன் உடையவர்கள், எனவும்.

**ச.சுதாகரன்,** தாதிய உத்தியோகத்தர்
யாழ்.போதனா வைத்தியசாலை

**பெண்களுக்கு**

18க்கு குறைவாயின் மெலிந்தவர்கள் என்வும் 18-23க்கு இடையில் இருப்பின் சாதாரண மாணவர்கள் எனவும் பெண்களுக்கு 23க்கு மேல் இருப்பின் நிறை கூடியவர்கள் எனவும் 30க்கு மேல் இருப்பின் அதீத பருமன் உடையவர்கள் எனவும் கருதப்படும் எனவே உணவே மருந்து மருந்தே உணவு.

(முற்றும்)

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர்

எல்லா மதங்களும் மனிதனை உடல் ரீதியாகவும் ஆன்மீக ரீதியாகவும் சுகமும் பலமும் பொருந்தியவனாக ஒரு முழு மனிதனாக வாழ்வதற்கான பாதையைக் காட்டி நிற்கின்றன.

உலக சுகாதார ஸ்தாபனம் மனிதனின் சுகம் என்றால் என்ன? ஆரோக்கியம் என்றால் என்ன? என்று வரைவிலக்கணப்படுத்தும் பொழுது ''அது நோயற்ற நிலை மாத்திரமல்ல அதனுடன் உள சமூக ஆன்மிக நன்னிலையும் சேர்ந்திருக்கும் பொழுதே அது உண்மையான ஆரோக்கியம்'' எனத் திட்டவட்டமாக வரையறுத்திருக்கிறது.

இந்த உண்மையான நிலையை உலக சுகாதார ஸ்தாபனம் வரையறுத்துச் சொல்வதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மதங்கள் இதனை வலியுறுத்தி இருக்கின்றன. மனிதனை மனிதனாக வாழ்வதற்கு வழிகாட்டியிருக்கின்றன.

மதத்திற்கும் மருத்துவத்திற்கும் அடிப்படைத் தத்துவங்கள் ஒன்றாகவே இருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

அன்பு, பரிவு ஒருவனுக்கு உண்மையான சுகத்தையும் நலத்தையும் கொடுப்பது என்ற அடிப்படையிலேயே மதமும் மருத்துவமும் ஒன்றுபடுகிறது.

இறைவன் அன்பு மயமானவன் என்று சொல்லுங்கள். மருத்துவம் ஒருவனுக்கு இந்தப் பிறப்பிலே அன்பும், ஆதரவும், சுகமும், நலமும் கொடுப்பதைப்பற்றிச் சிந்திக்கிறது. செயலுருவம் கொடுக்கிறது.

ஆனால் மதங்கள் இம்மையிலும் மறுமையிலும் அவனதும் அவனது ஆன்மாவினதும் நலன்பற்றி தெளிவாகச் சொல்லி வழிகாட்டி நிற்கின்றது.

மதங்கள் எப்பொழுது தோற்றம் பெற்றன? மருத்துவ முறைகள் எப்பொழுது தோற்றம் பெற்றன? என்ற கேள்விகள் ஆராட்சிக்குரிய விடயங்களாக இருந்துகொண்டிருக்கின்றன.

இவற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது பலபல சுவாரசியமான விடயங்கள் வெளிச்சத்திற்கு வருகின்றன. மதங்கள் மனிதனை மருத்துவ ரீதியில் எவ்வாறு வழிநடத்திச் சென்றன. வழிநடத்திக் கொண்டிருக்கின்றன என்பதை ஆராயும்பொழுது பல அற்புதமான தத்துவங்கள் அடிப்படை எமக்குப் புரியத் தொடங்கும்.

எல்லா மதங்களுமே மனிதனுக்கு ஆரோக்கியமான பாதையையே காட்டி நிற்கின்றன.

**சி.சிவன்சுதன்,**
வைத்திய நிபுணர்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

மதக்கோட்பாடுகள் விஞ்ஞான ரீதியிலே அணுகப்படும்பொழுது அதன் உண்மையான தத்துவங்கள் கடைப்பிடிக்கப்படும்பொழுது ஒரு சமூகத்தின் சுகாதார நிலை மேம்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசித்தல் (8)

# ஒரு கண்ணோட்டம்

கற்றல் என்பது ஒரு நாளில் முடியும் காரியம் அல்ல. அது தொடர் செயல் நிலை கொண்டது. எமது கற்றல் செயற்பாட்டில் கற்க வேண்டியவை எதையும் தவறவிடவில்லை என்பதை உறுதி செய்வதோடு அதில் ஏதாவது தவறவிட்டிருப்பின் அதனைத் தேடிக் கற்றுக் கொள்வதே மீளநோக்கல் ஆகும்.

இந்த மீளநோக்கலானது: படித்து முடிந்தவுடன் மீட்டல் மீட்டலாக, பரீட்சைக்கு முந்திய, கடைசி மீளநோக்கலுமாக இரண்டு அல்லது மூன்று தடவை நாம் கற்ற பாடங்களை மீட்டல் செய்வதையே குறிக்கிறது. அவ்வாறு மீட்டல் செய்வதன் மூலம் மாணவர்களிடையேயான துரிதமான வாசிப்புப் பழக்கமும் அதிகரிக்கும்.

### இலகு வாசிப்புக்கான துரித வழிகள்

வாசிப்புத் தொடர்பான குறிக்கோள் இருத்தல் வேண்டும். நாளொன்றில் குறிப்பிட்ட நேரம் (அதை வாசகரே தீர்மானிக்க வேண்டும்) கட்டாய வாசிப்புக்கென ஒதுக்கிக் கொள்ளல். அது 30 நிமிடமாக அல்லது 45 நிமிடமாக எவ்வாறுமிருக்கலாம். அந்தநேரத்தைக் கட்டாயமாக வாசிப்புக்காகப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

ஒரு நூலைப் படித்து முடிப்பதற்கு ஒரு கிழமை அல்லது ஒரு மாதமெடுக்கலாம். ஆனால் அந்தக்குறிப்பிட்ட நேரத்தில் வாசிப்பதை மாற்றக் கூடாது.

கஷ்டமாகவிருக்கும் பகுதியை ஆறுதலாகவும் இரண்டு மூன்று தடவைகளும் வாசிக்க வேண்டும்.

வாசிக்கும் விடயத்திலுள்ள பொது நோக்கை அறிந்து வாசிப்பினைத் தொடரவும்.

**மாணவரிடையே வாசிப்புப் பழக்கம் மேம்பட வேண்டும்**

எப்பொழுதும் உங்களுடன் ஒரு நூல் அருகில் இருத்தல் வேண்டும். பிரயாணத்தின்போது அல்லது காத்திருக்கும் போது அது பயன்படும். வாசிப்புப் பழக்கமும் தோன்றிவிடும்.

அடிக்கடி நூல் நிலையங்களுக்கோ அல்லது புத்தக சாலைகளுக்கோ சென்று நூல்களை எடுத்துக் கண்ணோட்டமிடுங்கள். பக்கங்களைப் புரட்டிப் பாருங்கள். நாளடைவில் வாசிப்பில் ஆர்வம் தோன்றும்.

ஒரு நூலை வாசித்து முடிந்ததும் உங்களை நீங்களே பாராட்டுங்கள். உங்களுக்கு நீங்களே வெகுமதியளியுங்கள். நூல் வாசித்து முடிந்ததும் ஒரு ஒழுங்கில் அட்டையொன்றில் புள்ளியிட்டு உங்கள் பார்வையில் அடிக்கடி தென்படக் கூடியவிடத்தில் காட்சிப்படுத்திக் கொள்ளுங்கள்.

அது உங்கள் வாசிப்புக்குக் கிடைத்த வெகுமதியாகி உங்கள் வாசிப்புப் பழக்கத்தை உற்சாகப்படுத்தும்.

வாசிக்க ஆரம்பித்துவிட்டால் அங்குள்ள நல்ல விடயங்களை எழுதிக் கொள்ளுங்கள். அவற்றைப் பெற்றோர், சகோதரர், நண்பர்கள் ஆகியோரிடம் காண்பியுங்கள். அவர்கள் கருத்தைப் பெற முயற்சி செய்யுங்கள். உங்கள் விளக்கத்தையும் கூச்சமின்றி அளியுங்கள்.

வாசிப்பில் பிரதானமாக இரண்டு விடயங்களைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும். 1.சாராம்சத்தை நோக்கல் (Skimming) 2.ஆராய்ந்து வாசித்தல்(Scanning) 3.பொதுநோக்கினை அறிந்து கொள்ளச் சாராம்சத்தை அறிந்து கொள்ளல் போதுமானது.

அது தொடர்பான சிறப்புத் தெளிவினைப் பெற்றுக் கொள்ளக் கவனமாக ஆழ்ந்து வாசித்தல் வேண்டும். சாராம்சத்தை அறிந்து கொள்ள அளவிடல் முறை (Survey) உகந்தது. சிறப்புத் தெளிவு பெற்றுக் கொள்ளச் செயற்றிறன்சார் வாசிப்புப் பொருத்தமானது.

மீட்டல் வாசிப்பினை மேற்கொள்ளுங்கள். வாசிக்கும் போது விளங்கிக் கொண்டவற்றையும் அறிந்து கொண்டவற்றையும் உறுதி செய்து கொள்ள அது உதவும். வாசித்து முடிந்ததும் அவற்றை மீட்டு நினைவுபடுத்திப் பாருங்கள்.

நினைவில் கொண்டவற்றைக் குறிப்பாக எழுதிக் கொள்ளுங்கள். எழுதிய குறிப்பை வாசித்த விடயத்துடன் ஒப்பிட்டுப் பாருங்கள். மட்டுப்பாடுகள் காணப்படின் நிரப்பிக் கொள்ளுங்கள்.

### பரீட்சைகளுக்கு

பரீட்சைகளுக்கு விடையளிக்கும் போது வினாக்களைப் பல தடவை வாசித்து விளங்குங்கள். தெளிவாக விடை தெரிந்த வினாக்களைத் தெரிவு செய்யுங்கள்.

தெரிவு செய்த வினாக்களுக்குரிய இலக்கங்களை விடைத்தாள் ஒன்றில் குறித்து, ஒவ் வொரு வினாவுக்குமுரிய விடைகளின் குறிப்புகளை ஞாபகப்படுத்தி எழுதிக் கொள்ளுங்கள்.

அத்தாளிலும் உங்கள் சுட்டிலக்கத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்க ஒதுக்கக்கூடிய நேரத்தை ஒதுக்கி அதைக் கடைப்பிடித்துக் கொள்ளுங்கள்.

மிகக் கூடுதலான குறிப்புகளைக் கொண்ட வினாக்களிலிருந்து விடையெழுத ஆரம்பியுங்கள். உங்களிடம் நிறைய வாசித்த அறிவு இருப்பதால் அறிவுக் குறுக்கீடுகள் தோன்றக்கூடும்.

ஒரு வினாவுக்கு விடையளிக்கும் போது வேறு வினாவுக்குரிய விடை வந்து குறுக்கிடலாம். அப்போது அவ்வினாவுக்குரிய விடைக் குறிப்புக்களுடன் அதைச் சேர்த்துவிட்டு தொடர்ந்து முதல் எழுதிய வினாவுக்கான விடையை எழுதுங்கள்.

விடைகள் எழுதி முடிந்ததும் விடைத்தாள்களை ஒழுங்கு செய்து எழுதிய விடைகளைத் தவறாது வாசித்துக் கொள்ளுங்கள். அதில் திருப்தி கண்டு கொள்ளுங்கள்.

*(முற்றும்)*



கலாநிதி **தி.கமலநாதன்,**
**முன்னாள் பீடாதிபதி,**
**யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி.**



# கோ

**விமர்சனம்**

சமூகத்துக்கு வேண்டிய அரசியலை விரும்பும் ஒரு நடுநிலைப் பத்திரிகையில் தொழில்புரியும் புகைப்படக் கலைஞனின் வாழ்வுப் போராட்டமும், ஏமாற்றமும், அவனால் சமூகத்தில்- அரசியலில் ஏற்படும் மாற்றமும்தான் 'கோ' படத்தின் கதையாகும்.

இந்தப் படத்தைப் பிரபல ஒளிப்பதிவாளராக இருந்த கே.வி.ஆனந்த் இயக்கியிருக்கிறார். உலகில் பத்திரிகை உலகம் பரபரப்பானது.

பத்திரிகையின் செய்தியாளர்கள் எப்படி செய்தி எடுக்கிறார்கள், பத்திரிகை உலகத்தின் அவசரம், ஆர்வம் வேறு எந்த வேலைக்கும் கிடையாது. நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் செய்திகளாக வெளியே வருகிறவரைக்கும் பத்திரிகை அலுவலகத்தில் நடக்கும் வேலைகள் அசுரத்தனம் கலந்தது. இதுதான் 'கோ' கதையின் பின்னணி.

பிரபல வங்கி ஒன்றில் பெரும் பணத்தைத் துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துத் தப்பும் நக்சலைட் கும்பலைத் துரத்தித் துரத்திப் படம் பிடித்து பொலிஸில் சிக்கவைப்பதன் மூலம் ஒரே நாளில் பிரபலமாகிறார் தின அஞ்சல் பத்திரிகையின் புகைப்படக் கலைஞர் அஸ்வின் என்ற புனை பெயரைக் கொண்ட நடிகர் ஜீவா.

இந்தக் காட்சியில் சுறுசுறுப்பாக ஆரம்பமாகும் அஸ்வினின் துப்பறியும் பத்திரிகையாளர் புத்தி படத்தில் வெளிப்படுத்தி இருக்கிறது.

தேர்தல் நேரத்தில் எதிர்க் கட்சித் தலைவர் கோட்டா சீனிவாஸ்ராவ் தன் பதவி ஆசைக்காக 13 வயதுச் சிறுமியைத் திருமணம் செய்யும் காட்சிகளைப் பதிவுசெய்து பத்திரிகையில் பிரசுரித்துப் பரபரப்புக் கிளப்புவது, 'சி.எம்' பிரகாஷ்ராஜைக் கேள்விகேட்ட நிருபரை செருப்பால் அடிப்பதைப் படம்பிடித்து அதே தேர்தல் நேரத்தில் அவருக்கு ஆப்பு வைப்பது, எதிர்க்கட்சி- ஆளும் கட்சி இந்த இரண்டுமே தேர்தலில் தோற்றுப்போகக் காரணமாக இருந்து படித்த இளைஞர்களால் புதிதாய் பிறந்த 'சிறகு' கட்சி ஜெயிப்பதற்குக் காரணமாவது எனப் படம் முழுக்கப் பத்திரிகைப் புகைப்படக் கலைஞராகப் பட்டையைக் கிளப்பியிருக்கிறார் ஜீவா. அதிலும், ஆரம்பத்தில் வங்கிக் கொள்ளையர்கள் தப்பும் வேளை கமராவும் கையுமாக ஜீவா ஆராயும் காட்சிகள் அடுத்தது என்ன? அடுத்தது என்ன? என எதிர்பார்க்கும் ரசிகர்களின் எதிர்பார்ப்பைத் தொட்டிருக்கிறது.

சமுதாயத்துக்கு நம்பிக்கைத் துரோகம்செய்த நண்பனைத் தீர்த்துக் கட்டிவிட்டு ஜீவா தப்புவதுவரை விறுவிறுப்பாகப் படம் பிடிக்கப்பட்டிருப்பது படத்தின் பெரிய பலன். ஜீவாவுக்கு ஜோடியாகப் புரட்சிப்பெண் பத்திரிகையாளராக வலம் வரும் ரேணுகா நாராயணன் பாத்திரத்தில் வரும் நடிகை கார்த்திகா நடிகை ராதாவின் மகள் ஆவார்.

படத்தின் முன்பாதியில் நல்லவனாகவும், பின்பாதியில் வில்லனாகவும் வரும் அஜ்மல் இன்று அரசியலில் குதிக்கத் துடிக்கும் நடிகர்களையும் அவர்களுக்கு ஓட்டுப் போடாதீர்கள், இவர்களுக்கு ஓட்டுப் போடுங்கள் எனக் கைகாட்டும் சினிமா இயக்குநர்களின் நிஜமுகங்களையும் தோலுரித்துக் காட்டியிருக்கிறது.

ஜீவாவைப்போலவே அஜ்மலும் சிறப்பாக நடித்திருக்கிறார். சமூகத்துக்கும் அரசியலுக்கும் மாற்றத்துக்கும் ஏற்றத்துக்கும் பத்திரிகைகள் மற்றும் பத்திரிகையாளர்களின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை முதன்முதலாக அடிமட்டத் தொண்டர் முதல் அரசியல்வாதிவரை உணர்த்தியிருக்கும் படம்.



இந்தப் படத்தில் இசையமைப்பு ஹரிஸ் யெஜராஜ் செய்திருக்கிறார். ரிச்சர் எம்.நாதன் ஒளிப்பதிவு செய்திருக்கிறார்.

இப்படத்தின் இயக்குநர் கே.வி. ஆனந்த் புகைப்படக் கலைஞராக இருந்ததனால் அதில் தந்த செய்திகள் படமாகியிருப்பது ஒரு பத்திரிகையாளர் கண்டிப்பாகப் பார்க்கவேண்டிய படமாகும்.

*(குமார்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழுக்கு ஆங்கிலம் (12)

தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலக் கருத்துச் சொற்கள் ஆங்கிலம் கற்கும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் தொகுத்து வழங்கப்படுகின்றன.

**'ப' வரிசையில்**
பகிடி: Joke
பன்றி: Pig
பச்சை: Green
பல்லி: Lizard
பந்து: Ball
பஞ்சு: Cotton
பகட்டு: False show
பகல்: Daytime
பகல் கனவு: Day Dream
பகவன்: God
பகிஸ்கரித்தல்: Boycott
பகை: Emmity
பங்களா: Bangalow
பக்தி: Devotion
பங்கு: Share
பசளை: Monure
பசி: Hunger
பசு: Cow
பசை: Paste
பச்சோந்தி: Chameleon
பஞ்சம்: Famine
பஞ்சாங்கம்: Almanac
படகு: Boat
படம்: Picture
படலை: Gate
படி: Study, Step
படிப்பாளி: Learned Person
படு: Lie down
படுக்கை: Bed
படை: Army
படைப்பு: Creation
பட்டடை: Workshop
பட்டணம்: Town
பட்டம்: Kite, Title
பட்டு: Silk
பணம்: Money
பணி: Work
பணிவு: Humbleness
பண்டிகை: Festival
பண்ணை: Farm
பண்பு: Nature
பதவி: Position
பதற்றம்: Anxiety
பதில்: Reply
பதிவுசெய்: Register
பத்திரிகை: Newspaper
பயங்கரம்: Dreadful
பயம்: Fear
பயணம்: Journey
பரிகாசம்: Mockery
பரிசு: Prize
பரீட்சை: Examination
பருவம்: Season
பற்கள்: Teeth
பல்: Tooth
பலவந்தம்: Force
பலகை: Plank
பலசரக்கு: Groceries
பலம்: Strength
பலன்: Result
பழக்கம்: Habit
பழம்: Fruit
பழமொழி: Proverb
பழி: Revenge
பழைமை: Oldness
பறவை: Bird
பதாகை: Banner

**'பா' வரிசையில்**
பாக்கு: Arecanut
பாசம்: Love
பாட்டு: Song
பாடு: Sing
பாதாளம்: Underworld, Pit
பாவம்: Sin
பாம்பு: Snake
பாய்: Mat
பாய்தல்: Jumping
பாரம்: Weight
பாராட்டு: Praise
பார்வை: Look
பாலம்: Bridge
பானை: Pot
பாஷை: Language

**'பி' வரிசையில்**
பிரி: Divide
பிழை: Wrong
பிடி: Catch, Handle
பிழி: Squeeze
பிசின்: Gum
பிள்ளை: Child
பிச்சை: Begging
பிசை: Mix
பிஞ்சு: Tenderfruit
பிடிவாதம்: Stubbornness
பித்தளை: Brass
பிரசுரம்: Publication
பிரஜை: Citizen
பிரதானம்: Important
பிரதமர்: Primeminister
பிரதேசம்: Area
பிரபல: Famous
பிரபு: Nobleman
பிரமிப்பு: Amazement
பிரம்பு: Cane
பிரயத்தனம்: Attempt

(தொடரும்)

தொகுப்பு:ரம்யன்




## விடுகதைகள்

1. கூவி அழைப்பான்; கூடி உண்ணுவான். அவன் யார்?
2. ஆட்டுவித்தால் ஆடாமல் இருக்காது. அது என்ன?
3. அவனுக்கு வீடு, மற்றவர்களுக்கு வலை. அது என்ன?
4. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. என்ன பூ?
5. தலையைச் சீவினால் கறுப்பு நாக்கை நீட்டுவான். அவன் யார்?
6. கண்ணீர்விட்டே கடைசிவரை ஒளி தருவான். அவன் யார்?
7. வாழ்நாள் முழுக்க வாயை மூடாதவன். அவன் யார்?

சி.சிவமதுரன், தரம் - 4பி
யா/புனித ஜோன்.பொஸ்கோ வித்தியாலயம்.

1. காகம், 2.ஊஞ்சல், 3. சிலந்தி, 4. சிரிப்பு, 5. பென்சில், 6. மெழுகுதிரி, 7. தபாற்பெட்டி.

## ஆண்டு நிறைவு விழாக்கள்

★ ஒரு வருடம் - காகித விழா.
★ மூன்று வருடம் - தோள் விழா.
★ நான்கு வருடம் - பூ விழா.
★ ஐந்து வருடம் - மர விழா.
★ ஆறு வருடம் - கற்கண்டு விழா.
★ ஒன்பது வருடம் - மணிக்கலச விழா
★ பத்து வருடம் - தச விழா.
★ பதினைந்து வருடம் - படிக விழா.
★ முப்பது வருடம் - முத்து விழா.
★ நாற்பது வருடம் - மாணிக்க விழா.
★ நூறாவது வருடம் - நூற்றாண்டு விழா.
★ 1000 வருடம் - மிலேனியம் விழா.

ஈ.பிரணவி, தரம்- 7,
யா/உடுவில் மகளிர் கல்லூரி.

## உங்களுக்கும் பரிசில்கள்

### விடை தெரியுமா? 105


1) கைத்தொலைபேசிகள் தயாரிப்பில் முன்னணியில் உள்ள நிறுவனம் எது?
2) உலக மலேரியா தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
3) புட்டபர்த்தியில் பிறந்த சாய்பாபாவின் இயற் பெயர் என்ன?
4) கம்போடியாவின் தலைநகரம் எது?
5) கம்பளி உற்பத்தி முதலில் ஆரம்பிக்கப் பட்ட நாடு எது?

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 07.05.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசுகள் நூல்களாக வழங்கப்படும்.

### விடைகள் 103

1) இந்தியா.
2) ரியாத்.
3) மயோசின்.
4) வசந்தி அரசரட்ணம்.
5) கொமர்ஷல் வங்கி.


**வெற்றி பெற்றவர் விவரம்**
1. யோ.சிவரஜனி, தரம்-8, யா/மட்டுவில் கமலாசனி கனிஷ்ட மகா வித்தியாலயம்.
2. வி.டினேஸ், தரம்-9, யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை.
3.தி.விதுஷிகா, தரம்-5 'பி', யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
4.சூ.பிரியதக்ஷி, தரம்- 7'சி', யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
5.சூ.புவிதா, தரம்- 9'டி', யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.
6.பு.கஜமுகன், தரம்- 10 'பி', புனித பத்திரிசியார் கல்லூரி.



ச.சுதர்ஷினி,
யா/விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.



பா.சாந்தராஜ் - தரம் 8 பி,
யா/விக்ரோறியாக் கல்லூரி,
சுழிபுரம்.



ச.தர்ஷன் - தரம்-5,
அ.மி.த.க பாடசாலை, வல்வெட்டித்துறை.



சி.சிலக்ஷன் - தரம் 7 பி,
யா/புற்றளை மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் கவனத்துக்கு

தென்மராட்சி,மே.1

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்குத் தோற்றி, நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றிய அனைவரும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருகை தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-207)

**சிறுநீரகம் தேவை**

B+,O இரத்தவகையைச் சேர்ந்தவர்களிடம் இருந்து சிறுநீரக நோயாளி ஒருவருக்கு சிறுநீரகம் தேவை. சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 0776184668, 0779557907

**STUDY IN UK, NEW ZEALAND, AUSTRALIA**

**UK June / September Intake**

**Course available at all level (Certificate / Diploma / Degree)**

- Business, IT, Banking & Finance, Hospitality, Management, Travel & Tourism, Engineering, Law, Nursing, Teaching from "A" rated & Highly Trusted Colleges & Universities in UK
- July 2011 இற்கு முன்னால் Enroll ஆகும் மாணவர்கள் Still able to hold part time jobs - **Hurry up for June in Take**

**Student Visitor VISA**

UKBA புதிய விதிமுறையின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட இவ் விசாவினை குறுகிய காலத்தில் 100% உத்தரவாதத்துடன் பெற்றுத்தரப்படும்

- Minimum Qualification G. C. E (O/L)
- No IELTS or any SELT required



**STUDY + WORK + PR**

BIBM ஆனது உங்கள் உயர்கல்விக்கான நிபுணத்துவமிக்க ஆலோசனைகளை வழங்குவதன் மூலம் New Zealand & Australian Work Permit & Migration இற்கான வழிமுறைகளை இலகுவாக்கி துரித கதியில் அடைய வழிவகுக்கின்றது.

- Study 1 - 2 years and get work permit in New Zealand & Australia
- Low Course Fee
- Widely job available destination



- PR ற்கான நிபுணத்துவமிக்க முறையில் பாடநெறி தெரிவு
- We provide specialist advice on selecting the best course in demand to obtain PR.
- Expert advice on Academic & Funding Requirements.

Affordable course fees, minimum deposit required & flexible payment options. Exemptions are offered HND EDEXCEL, ABE, NCC, BCS, ACCA & CIMA qualified & part qualified students.

**BIBM**

BRITISH INSTITUTE OF BUSINESS MANAGEMENT STUDIES (PVT) LTD.
(Member of e2P Allied Group - UK, India, Pakistan)
# 81, 1/1, W.A. Silva Mawatha, Colombo 06. (Opposite to Royal Hospital)
Tel. 011 2586894 / 011 2586895
E-mail : info@bibm.lk

Hotline : 077 1553323

www.bibm.edu.lk

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே.01

யாழ்.கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாசி அம்பாள் ஆலயத்தின் முப்பதாவது ஆண்டுப் பெருந்திருவிழா எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் நடைபெறும். எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூச் சப்பறமும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வேட்டைத் திருவிழாவும், சப்பறத் திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ற-313)

***

தெல்லிப்பழை கொல்லங்கலட்டி கேணிக்கரை ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் பெருந்திருவிழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும். இந்த திருவிழாக்களில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உற்சவ மூர்த்தி மகா அபிஷேகமும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சப்பறத் திருவிழாவும் அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ற-313)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில By.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) ,K.K.S வீதி, யாழ்ப்பாணம், பிளாக் வீதி, சங்கானை. தொடர்பு: 077-6751649

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம், கௌரவ றோமன் கத்தோலிக்கம் 33வயது அரச வைத்தியசாலையில் பணிபுரியும் டாக்டருக்கும் 31 வயது அரசசார்பற்ற (வெளிநாடு) நிறுவனத்தில் உயர் பதவி வகிப்பவருக்கும் உத்தியோகம் பார்க்கும் மணமகள் தேவை. டாக்டருக்கும் டாக்டர் விரும்பத்தக்கது.

விளம்பர இலக்கம் - 4139.
மே/பா- உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**Personal Class**

தரம் 6 - A/L வரையான மாணவர்களுக்கு English Personal class, Paper Class, Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து குழுவாகவும் தனியாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு:- சங்கிலியன் வீதி, நல்லூர். 0778403730

**பெயின்டிங் வேலை**

இந்தியா மற்றும் வெளிநாடுகளில் வர்ணம் பூசி அனுபவங்களைக் கொண்ட தரமான பெயினட் பாஸ்களை கொண்டு உங்களுக்குத் தேவையான கட்டடங்கள், கோயில்கள் மற்றும் வாகனங்களுக்கு குறித்த காலத்தில் ஒப்பந்த அடிப்படையில் வர்ணப்பூச்சு வேலைகள் செய்து கொடுக்கப்படும். மேலும் சகல விதமான கூலி வேலைகளுக்கும் ஆள்கள் ஏற் பாடு செய்து தரப்படும். தொடர்பு: S.M. தாஸ் 0774688424

**திருமண சேவை**

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மணமகன், மணமகள் தேவையானவர்கள் எங்களிடம் விண்ணப்பிக்கவும்.

தொடர்பு: 0783579334

**கண்ணீர் அஞ்சலி**



எமது ஆலயத்தின் பரிபாலன சபையின் போசகரான பொன்னையா நடராஜா அவர்களின் சகோதரி

**அமரர் திருமதி மகேஸ்வரி நடராஜா (கிளி)**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ சிவபூதவராயரைப் பிரார்த்திக்கின்றோம்.

**பரிபாலனசபையினர்,**
**ஸ்ரீ சிவபூதவராய சுவாமி தேவஸ்தானம்.**
கோண்டாவில் வடக்கு. (41)(3682)

**STUDY IN UK, CANADA, USA CYPRUS, POLAND & SINGAPORE**

UK → தவணைக்கட்டண அடிப்படையில் பணம் செலுத்தலாம் மற்றும் IELTS இருந்தாலும் இல்லாவிட்டாலும் கல்வியை தொடரலாம்.
USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே.
CANADA → IELTS, Sponsor, வயதெல்லை ஆகியன இல்லாமல் 2வது வருடத்திலிருந்து PR கிடைக்கும்.
POLAND → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.
SINGAPORE → பதிவுக்கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும். கல்லூரி அனுமதி உத்தரவாதம்.
CYPRUS → கட்டணம் விசா கிடைத்ததும் பெறப்படும்.

100% Legal & Genuine process

**Next Intake: May.'11**



For further Info: E-mail: read.int@gmail.com
அல்சரா - 0778339943, பஸ்னா - 0778 438403

**READ International**

No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

## United Nations Development Programme

UN DP

UNDP is the UN's global development network, advocating for change and connecting countries to knowledge, experience and resources to help people build a better life. We are on the ground in 166 countries, working with them on their own solutions to global and national development challenges. As they develop local capacity, they draw on the people of UNDP and our wide range of partners.

UNDP's programme portfolio in Sri Lanka includes the UNDP Support to Mine Action Project. The Project supports the Government to coordinate and manage Mine/ unexploded ordnance clearance in the North and East of Sri Lanka. The Regional Mine Action Offices (RMAO) in Vavuniya & Jaffna are looking for experienced and energetic candidates to fill the following vacancies.

### VACANCIES

**Position : DRIVER (2)**
**Duty Station : MANNAR(1) AND JAFFNA (1) OR MULTIPLE DUTY STATIONS**

**Duties and responsibilities**

- Operate vehicles including 4WDs and drive UNDP personnel for official purposes
- Deliver and collect mail, documents and other items.
- Assume responsibility for the day-to-day maintenance of the assigned vehicle; check oil, water, battery, brakes, tires, etc.; perform minor repairs; arrange for other repairs and ensure that the vehicle is kept clean.
- Ensure availability of all the required documents/supplies including vehicle insurance, first aid kit, necessary spare parts, etc., in the assigned vehicle.
- Ensure that the steps required by UNDP rules and regulations are taken in case of involvement in an accident
- Act as interpreter as and when required.
- Operate and maintain communication equipment fitted in the vehicles.
- Maintain logbook of vehicle movements, mileage, fuel consumption; oil changes, etc
- Perform any other duties as required

**The successful candidate should possess the following qualifications:**

**Education**
- Minimum of General Certificate of Education (GCE) Ordinary Level (O/L)
- Hold a valid Sri Lankan driving license - category A(motor coach).
- Good knowledge of Sri Lankan geography.
- Sound knowledge of Sri Lankan road rules and regulations and chauffeur courtesies.
- Familiarity with HF and VHF radio operations is highly desirable.

**Experience**
- Minimum 5 years work experience as a professional driver with a safe driving record.
- Minimum 1 years experience as a driver with the United Nations is desirable

**Language Requirements:**
- A working knowledge of English, in addition Sinhala and/or Tamil.

**Position : GIS ASSISTANT (1)**
**Duty Station : JAFFNA OR MULTIPLE DUTY STATIONS**

**Duties and responsibilities**

- Produce maps, charts, presentations and reports as required;
- Provide GIS training and technical assistance to RMAO staff, Mine Action partners and stakeholders as needed;
- Maintain the GIS component of the IMSMA;
- Develop mapping products for the IMSMA;
- Transposing data from the IMSMA in to mapping products;
- Maintain a mine action land release map of the RMAO area of responsibility that is updated on a weekly basis in accordance with progress reports received from clearance agencies;
- Support the development of strategies and mechanisms for geospatial data and information flow to keep critical data current, through liaison with all RMAOs, sub-offices, demining operators and other Mine Action stakeholders;
- Liaise with technical staff of the UN, regional entities, NGOs and governments dealing with spatial data issues;
- Assist in the preparation of reports and briefing notes with a focus on geospatial data coordination applied to information management activities;
- Provide technical support to the demining operators in data coordination, spatial data and information management.

**The successful candidate should possess the following qualifications:**

**Education**
- Recognized Institutional Diploma (2 years) in computer sciences, geography, urban planning, GIS or related discipline; University degree in computer sciences, geography, urban planning, GIS or related discipline is desirable

**Experience**
- Minimum 3 years of strong technical experience in mapping, technical drawings and database development;
- Programming knowledge and experience of database development and management including SQL and MS Access;
- Practical knowledge of standard software packages (MS Excel, Access, Power Point, Auto CAD);
- Strong practical background in GIS and cartography, including use of ArcGIS 9.x, knowledge of Remote Sensing and raster – vector data manipulation;
- A good understanding of the concept and use of Information Management System for Mine Action (IMSMA) will be an asset;
- General knowledge of UN system and humanitarian work will be an asset.


**Language Requirements:**
- Good ability to speak and write in English with fluency in the Sinhala/Tamil language(s).

Applications are to be submitted online. Please visit http://apps.hsenid.lk/Recruitment/Vacancies.aspx Applicants who provide incorrect information will be disqualified. Closing date for applications is on or before 7th May **2011.**

application. Qualified female candidates are encouraged to apply. Only short-listed candidates will be contacted for an interview.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கே.பி
# புதிய அவதார்



**2009** மே 18 இற்குப் பின்னர்- புலிகளின் புதிய தலைவராக தன்னை அறிவித்திருந்த கே.பி என்கிற குமரன் பத்மநாதனை இத்தனை நாளும் பஞ்சணை மெத்தையில் வைத்து, பாலூட்டி, சீராட்டி வருவதன் காரண காரியத்தை ஒருமாதிரி அரசு போட்டுடைத்திருக்கின்றது.

ஐ.நா நிபுணர் குழு அரசுமீது அள்ளி வீசியிருக்கும் குற்றச்சாட்டுக்களையெல்லாம் நிர்மூலமாக்கும் அஸ்திரமாகக் கே.பியை அரசு களமிறக்கப்போவதாக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல செய்தியாளர் மாநாட்டில் பிளந்துகட்டியிருக்கிறார். போர் நடைபெற்ற காலப் பகுதியில் விடுதலைப் புலிகளே மக்களைக் கொன்றார்கள். அரசபடைகள் ஒரு பொதுமகனைக் கூடத் தப்பித்தவறியும் கொல்லவேயில்லை என்று தெருத் தெருவாகச் சென்று, உச்சஸ்தாயியில் அலறுகின்ற கே.பியை இனிமேல் காணும் பாக்கியம் அனைவருக்கும் கிடைக்கலாம்.

கே.பி என்ற மனிதன் ஓர் அதிசாகசக்காரனாகவே ஆரம்பத்தில் தமிழ்மக்களிடையே அடையாளப்படுத்தப்பட்டிருந்தார். புலிகளுக்கான வெளிநாட்டுத் தொடர்புகள், நிதிசேகரிப்பு, ஆயுதக் கொள்வனவு என்பவற்றை உலகநாடுகளின் புலனாய்வு அமைப்புகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு செய்து முடிக்கின்ற அசகாயசூரனாகவே அவர் அறியப்பட்டிருந்தார். எனினும் பிறகு புலிகள் அமைப்பின் விஸ்வரூப வளர்ச்சி, புலம்பெயர் நாடுகளில் அவர்களின் புதிய நிர்வாக இயந்திரச் செயற்பாடுகள் என்பன கே.பியின் பெயரை மறக்கடிக்கச் செய்தன. கே.பியின் வாக்குமூலத்தின் படி புலிகளால் கே.பியின் 'காற்றுக் குறைக்கப்பட்டிருந்தது'. (புலிகள் அமைப்பில் உயர்நிலையில் இருந்த ஒருவரிடம் இருந்து அதிகாரங்கள் அகற்றப்படுவதை 'காற்றுக் குறைத்தல்' என்ற சொற்றொடர் குறிக்கும்)எனினும் போர் மிகத்தீவிரமாக மையங்கொண்டு, வன்னியின் கழுத்தை இறுக்கிக்கொண்டிருந்த நேரத்தில் மீண்டும் கே.பியின் பெயர் அடிபடத்தொடங்கியது.

புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பானவராக கே.பி புலிகளால் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டார். ஆனாலும் நிலைமையில் எந்த முன்னேற்றமும் இல்லை.மாறாக கே.பியால் அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் ஆயுதக்கப்பல்களை இலங்கைக் கடற்படை வெகு எளிதாகக் கண்டறிந்து அழித்தது.

சர்வதேச ரீதியில் தொடர்ச்சியான - ஜனநாயக வழிமுறையிலான- போராட்டங்கள் என்றுமில்லாத வகையில் முன்னெடுக்கப்பட்ட போதும் உரிய வகையில் வெற்றிபெறவில்லை. இந்தப் போராட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டதாக அல்லாமல் புலிக்கொடிகளை ஏந்தியபடி - தடை செய்யப்பட்ட ஓர் அமைப்பு சார்ந்தாக இருப்பதாக - சர்வதேசம் கருதியதே இதற்கு முக்கிய காரணம் எனக் கூறப்படுகின்றது. எனினும் அன்ரன் பாலசிங்கத்தின் மறைவுக்குப் பின்னர் சர்வதேச ரீதியிலான புலிகளின் நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வெற்றிகளை ஈட்டவில்லை என்பதே உண்மையாகும்.

கடைசியாக எல்லாம் முடிந்துபோன பின்னர் - போரின் இறுதிக்கணங்களில்- ''புலிகள் நிபந்தனையற்று தமது ஆயுதங்களை மௌனிக்கச் செய்கின்றனர்'' என்ற அறிவிப்பை கே.பி விடுத்தார். எனினும் தொடர்ந்து வந்த நாள்களில் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார். இலங்கை அரசு அறிவித்த கையோடு அதற்கு மறுத்தான் அடித்து தலைவர் இருக்கிறாரா, இல்லையா என இன்று வரை நீள்கின்ற சர்ச்சைக்கு வழிவகுத்தவரே கே.பிதான்.

'இதுதான் புலிகளின் தலைவருடைய உடல்' என இலங்கையரசு தொலைக் காட்சிகளில் காட்டியபோதும் கூட தன்நிலையில் விடாப்பிடியாக இருந்த கே.பி, பின் திடீரென ஒருநாள் 'பிரபாகரன் இறந்தது உண்மைதான்! இனிமேல் இயக்கத்தின் புதிய தலைவர் நான்தான்' என்ற அதிரடி அறிவிப்பை இணையங்களினூடாகப் பரவவிட்டார்.

''தலைவர் நலமாக - பாதுகாப்பாக - இருக்கிறார். சற்று முன்னர்தான் அவருடன் உரையாடினேன்'' என்று சொல்லிக் கொண்டிருந்த கே.பியின் இந்த திடீர் பல்டி பெரும் குழப்பத்தை தமிழ்மக்களிடம் உண்டு பண்ணியது. புலம்பெயர் நாடுகளில் இருந்த மக்களும், புலிகளின் உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் தலைவர் இருக்கிறார் என்ற கட்சியாகவும், இறந்துவிட்டார் என்ற இன்னொரு குழுவாகவும் இரு கூறுகளாகப் பிரியும் நிலை கே.பியின் இந்த அறிவிப்பாலேயே எழுந்தது.

அதன் பின்னர் இணையங்களில் அறிக்கைகள் வாயிலாக மக்களுக்குத் தன் நிலையை விளக்கிவந்த கே.பி எவருமே எதிர்பாராத வகையில் இலங்கைப் புல



னாய்வுத்துறை அதிகாரிகளால் மலேசியாவில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டார். இந்தக் கைது நடவடிக்கை கூட தமிழ்மக்களிடையே பல சந்தேகங்களைத் தோற்றுவித்தது. அதுநாள்வரை தன்னுடைய புகைப்படங்களைக் கூட வெளியிடாது -முகம் மறைத்தபடி - வாழ்ந்த, உலகம் சுற்றும் வாலிபனாக எல்லா இடங்களிலும் காற்றுப்போல புகுந்து விளையாடி, புலிகளுக்குத் தேவையான ஆயுதங்களை அனுப்பி வைத்துக் கொண்டிருந்த போது, இன்ரபோல் பொலிஸாராலேயே கைது செய்யப்பட முடியாத கே.பியை இலங்கையின் புலனாய்வுத்துறை வெளிநாடு சென்று கைது செய்துவந்தமை பலரது' புருவங்களையும் நெளியச் செய்தது.

அதுவும் யுத்தம் முடிந்த பின்னர், தன்னையே புலிகளின் புதிய தலைவராக கே.பி. பிரகடனம் செய்த பின்னர் , இலங்கைப் புலனாய்வு அதிகாரிகள் 'கோழியைப் பிடிப்பது போல' வெகு சுலபமாகக் கைது செய்யுமளவுக்குத் தன் னுடைய அசைவுகள், தொடர்புகள் என்பவற்றை அவர் பேணிவந்தாரா என்ற வினாவும் எழுந்தது. தொடர்ந்து நிகழ்ந்த சம்பவங்கள் அந்த வினாக் குறியை இன்னும் பெரிதாக்கின. ''எம்முடைய முக்கியமான தளபதிகளை நயவஞ்சகமாகக் கொன்றுவிட்டார்கள்'' என எந்த அரசை கே.பி சாடினாரோ அதே அரசின் மதிப்பார்ந்த விருந்தாளியாக்கப்பட்டார். புலிகளுக்கு சாப்பாடு கொடுத்தவர்கள் கூட சித்திரவதை செய்யப்பட்டு தடுப்பு முகாம்களில் அடைத்துவைக்கப்பட்டிருக்கையில், புலிகளின் புதிய தலைவரான கே.பிக்கு இராஜ உபசாரம் செய்யப்பட்டது. இலங்கை அரசை - குறிப்பாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை - புகழ்ந்து தள்ளும், அதே வேளை - புலிகளையும் குற்றம் சொல்லாத (ஆனால் புலிகளின் வெளிநாட்டுக் கிளைப் பொறுப்பாளர்களே தோல்விக்கு காரணம் என்று கூறுகின்ற) கருத்துக்களை கே.பி முன்வைத்தார்.

அவரது புகழ்மாலைகளுக்குப் பிரதியுபகாரமாக, 'நேர்டோ' என்னும் தன்னார்வத்தொண்டு நிறுவனம் ஒன்றை அமைத்துச் செயற்பட கே.பிக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கும், வன்னிக்கும் சொல்லாமல் கொள்ளாமல் தன் பரிவாரங்கள் சகிதம் கே.பி வந்து போனார். வடமாகாண சபைத்தேர்தலின் போது அரசு சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக கே.பி நிறுத்தப்படவுள்ளார் என்றும் ஊகங்கள் எழுந்தன. அதன் பிறகும் கே.பியின் அரசவிசுவாசம் தொடந்தது.

புலிகளுக்கு ஆதரவான புலம்பெயர் கட்டமைப்பைத் தகர்ப்பதற்காக தனக்கு ஆதரவான புலம்பெயர் சக்திகளை அரசின் விசுவாசிகளாக்கி, புலம்பெயர் மக்களைக் கூறாக்கும் பணியைத் தன் கையில் எடுத்தார். இப்போது ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை வெளிவந்தவுடன் அதில் அரசின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களைத் தவிடுபொடியாக்குவதற்காக கே.பியை பயன்படுத்தவுள்ளதாக அரசு வெளிப்படையாக அறிவித்துள்ளது.

எனவே எல்லாக் குற்றங்களும் புலிகளால் மட்டுமே புரியப்பட்டதாகக் கே.பி தன் 'பிளேட்டை மாற்றிப்பாடப் போகிறார். அதன் மூலம் மஹிந்த அரசின் கரங்கள் வெண்மையானவை என்று உலகின் காதுகளில் கே.பியால் பூச்சுற்ற முடியும் என அரசு கனவு காண்கிறது.

**ஔண்யன்**

ஆனால் அவரது வார்த்தைகள் எந்தளவு தூரம் எடுபடும் என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். அத்துடன் அரசின் விருந்தாளியாக இருப்பவரின் வாக்குமூலத்தை புலிகளின் ஒப்புதல் வாக்குமூலமாகக் கருதும் அளவுக்கு சர்வதேசமும், ஐ.நா அமைப்பும் முட்டாள்களல்ல.

புலிகள் சார்பாக சர்வதேச விசாரணைக்கு ஒத்துழைப்பதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் ரெஜி அறிவித்துள்ள நிலையில், கே.பியின் வாக்குமூலம் நிச்சயம் அரசின் குரலாகவே ஒலிக்கும் என்பது எல்லோருக்குமே தெரிந்தவிடயம்தான். என்னதான் உரத்துச் சொன்னாலும் கே.பி அரசின் தீர்மானத்தின்படி ஆடுகின்ற பொம்மை என்பது ஏற்கனவே நிரூபணமாகிவிட்ட நிலையில், அவரது சொல் செல்லாக்காசுதான். ஆனாலும் எல்லாம் குடிமுழுகிப் போய்விட்டநிலையில் அரசுக்கு உள்ள ஒரேயொரு பிடிமானம் கே.பி மட்டும்தான். அதன் பின்னர் தன்னுடைய அலுவல் முடிந்த பிறகு கே.பியை தூக்கிவீசுவதும் அரசுக்கு பெரிய விடயமல்ல. ஏனெனில் இலங்கைக்கு எதிரான விவாதத்தை ஐ.நா பாதுகாப்புச் சபையில் விவாதிக்கவிடாது தடுத்த ஐ.நாவுக்கான இலங்கைத் தூதர் டாக்டர் தயான் ஜயதிலகவையே தூக்கியெறிந்த அரசுக்கு கே.பி ஒரு பொருட்டே அல்ல. மக்களின் நல்வாழ்வுக்காக உழைக்கப் போவதாகச் சொன்ன கே.பி விருந்தாளிகளுக்கு விசுவாசமாக வாலையாட்டாது, மக்களுக்காக உண்மைகளை மட்டும் சொன்னாலே போதும் என்பதே அவலப்பட்ட மக்களின் ஏக்கம். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் நிபுணர் குழுவினர் வழங்கிய அறிக்கை

பகுதி - 02

(5)

11. அதன் நடவடிக்கையின் ஆரம்பத்திலிருந்தே செயலாளர் நாயகம் மற்றும் ஐ.நா. வின் சிரேஷ்ட அலுவலர்கள், செயலாளர் நாயகத்துக்கு அறிக்கை விடுத்து இறுதியில் ஆலோசனை வழங்கிய போதிலும், அதன் ஆணையை நிறைவேற்றுவதில் சுயேச்சையாக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் உண்டு எனக் குழுவுக்குத் தெளிவாக விளக்கியுள்ளனர். மேலும், பின்வரும் சந்தர்ப்பங்களில் இலங்கை அரசை விட சுயேச்சையாகக் குழு இருக்கும் என்பதை ஐ.நா. குழுவுக்குத் தெளிவு படுத்தியுள்ளது.

### 2. குழுவின் காலம் சார்ந்த வரையறைப் பொறுப்பு

12. 'யுத்தத்தின் இறுதிக்கட்டங்கள்' தொர்பான கூட்டு அறிக்கையினைச் செயற்படுத்துவதுபற்றி செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதை வரையறை ஆணை தேவைப்படுத்துகிறது. குற்றம் சாட்டப்பட்ட சர்வதேச சட்டப் மீறல்களில் அநேகமானவை நிகழ்ந்த யுத்தத்தின் மிக உக்கிரமான கட்டத்தை உள்ளடக்கிய 2008 செப்ரெம்பர் முதல் 2009 மே வரையிலான காலப்பகுதிக்குக் குழு கவனம் செலுத்தியது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தலைநகரான கிளிநொச்சி மீது அரசு இறுதி இராணுவத் தாக்குதல் மேற்கொண்டதற்கு 2008 செப்ரெம்பர் ஒத்திருக்கிறது. வன்னியில் செயற்படும் சர்வதேச அமைப்புக்களில் தொழில் புரியும் சர்வதேச பணியாள் களின் பாதுகாப்புக்குத் தொடர்ந்தும் உத்தரவாதம் அளிக்க முடியாது என்ற அரசின் அறிவிப்பினைத் தொடர்ந்து சர்வதேச யுத்த அவதானிப்பு முடிவ டைந்ததற்கும் அது ஒத்திருக்கிறது. 2009 மே மாதம் யுத்தத்தின் முடிவையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவத் தோல்வியையும் குறிக்கிறது.

13. சூழ்நிலைத் தொடர்பினை வழங்குவதற்காக, மேலே விவரிக்கப்பட்ட இறுதிக் கட்டங்களுக்கு முந்திய விடயங்கள் பற்றிச் சில சமயங்களில் குழு கலந்துரையாடுகிறது. மேலும், யுத்தத்தின் இறுதிக் கட்டங்கள் மற்றும் மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் அவை சில சந்தர்ப்பங்களில் இன்றுவரை இடம்பெறுவது போன்ற மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டங்களின் மீறல்கள் பற்றியும் குழு அறிந்துள்ளது. ஆயுதம் தாங்கிய மோதலுடன் நெருக்கமற்ற, குறிப்பாக இலங்கையின் ஏனைய பாகங்களில் தற்போது நடைபெறுவதாகக் குற்றம் சாட்டப்பட்ட மீறல்கள் பற்றி குழு கவனம் செலுத்தவில்லை.

(06)

### 3. குற்றம் சாட்டப்பட்ட மீறல்கள் தொடர்பான விடயங்கள்

14. குற்றம் சாட்டப்பட்ட சர்வதேச மற்றும் மனித உரிமைகள் சட்டத்தின் மீறல்கள் தொடர்பாக வரையறை ஆணை உள்ளது. மனிதாபிமானச் சட்டம் தொடர்பில், மோதல்களில் ஈடுபடாதவர்கள் மற்றும் தொடர்ந்தும் ஈடுபடாதவர்கள் அத்துடன் நலன்புரி வழிகள் மற்றும் முறைமைகள் தொடர்பான ஜெனீவா கோட்பாடுகளில் வழங்கப்பட்டுள்ள சரியான வழக்கமான விதிமுறைகள் பற்றி குழு கவனம் செலுத்துகிறது. மனித உரிமைகள் சட்டத்தைப் பொறுத்தவரை, இலங்கை ஒப்புதல் அளித்துள்ள சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தங்கள் மீது கவனம் செலுத்தி அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் அத்துடன் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் ஆகியவைபற்றி குழு கவனம்செலுத்துகிறது. இந்த நடவடிக்கையின்போது, பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது ஆயுதம் தாங்கிய மோதல் ஏற்படுத்தும் தாக்கம் தொடர்பான ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்கள் பரஸ்பரம் ஒன்றை ஒன்று உறுதிப்படுத்துவதை குழு நினைவூட்டுகிறதோடு, நிலையான சமாதானம் மற்றும் மீளிணக்கப்பாடு ஆகியவை மீது அவற்றின் விளைவான தாக்கத்தையும் இனங்காண்கிறது. இலங்கையின் உள்நாட்டுச் சட்டங்கள், சர்வதேச மனிதாபிமான மற்றும் மனித உரிமைகள் சட்டம் அத்துடன் பொறுப்புக் கூறல் பற்றிய ஏனைய சட்டங்கள் உள்ளடங்குகிறது என்ற அளவில், இலங்கையின் சட்டம் மற்றும் சரியான நிறுவனங்களும் ஆராயப்படுகின்றன. இறுதியாக, யுத்தத்தின் முக்கிய பாத்திரங்களான அரசு மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியவற்றின் மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுக்களைக் குழு ஆராய்கிறது.

(07)

### (இ) செயற்றிட்டம்

15. ஆய்வுரிமை வரம்பின்படி, குழு அதற்கே உரித்தான முறைமைகளை அபிவிருத்தி செய்வதோடு, செயலகமொன்று அதற்கு உதவி வழங்கும், 2010 செப்ரெம்பர் நடுப்பகுதி அளவில் அதன் உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, ஐக்கிய நாடுகள் அமைப்பினுள் தொழில்புரியும் நெறி சார்ந்த தொழில் புரிவோர்களிடையே இருந்து செயலகம் ஒன்று திரட்டப்பட்டது. மேலும், வேறு வகையாக கிடைக்காத ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காகப் புற உசாத்துணையாளர்களின் சேவையை குழு பெற்றுக் கொண்டது. ஐக்கிய நாடுகள் செயலகத்தில் ஏற்கனவே உள்ள பல்வேறு திணைக்களங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட மேற்கோள் குழுவொன்றும் குழுவுக்கு உதவியளித்தது.

16. குழுவின் செயற்திட்டம் இரு கட்டங்களாக நெறிப்படுத்தப்பட்டது. முதற்கட்டத்தில், அதன் ஆய்வுரிமை வரம்பு தொடர்பான நிபுணத்துவம் அல்லது அனுபவம் உள்ள தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து இலங்கையின் ஆயுதம் தாங்கிய மோதல் பற்றிய பல்வேறு தகவல்களைக் குழு சேகரித்தது. இவ்வாறான சில தகவல்கள் எழுத்து வடிவத்தில் - உதா: அரச, ஐ.நா. அல்லது அரசசார்பற்ற அமைப்புக்களின் அறிக்கைகள் - மற்றும் குழுவுக்கு இரகசியமான முறையில் வழங்கப்பட்ட தகவல்கள் மூலமாகக் கிடைத்தன. ஏனைய தகவல் குழுவின் பல கூட்டங்கள் மற்றும் அதன் செயலகத்தின் மூலமும் பெறப்பட்டன. யுத்தத்தின் இறுதிக் கட்டங்களின்போது நடந்தேறிய நிகழ்வுகளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஐ.நா. மற்றும் சர்வதேச அமைப்புக்களின் அலுவலர்கள் அத்துடன் அரசாங்கங்களின் பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோருடன் குழு சந்திப்புக்களை நடத்தியது. அதன் நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்தின் போது, குழு இந்த அறிக்கையின் நகலைத் தயாரித்தது. பிரசுரிப்பதற்கு ஏதுவான வகையில் இந்த அறிக்கை வரையப்பட்டது.

17. பரவலாகப் பொதுமக்களிடம் தொடர்பு கொள்வது தொடர்பில், அக்கறை கொண்ட அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள் எழுத்து மூலமாக முறையீடுகளைச் சமர்ப்பிக்குமாறு பொதுவானதொரு அழைப்பு விடுக்கப்பட்டது. 2010 ஒக் ரோபர் 21 ஆம் திகதி, குழுவின் பணியாள் தொகுதித் தலைவர், அறிவித்தலின் பிரதியொன்றை இணைத்து அது ஐ.நா. இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்று அறிவித்து இந்தத் தீர்மானம் பற்றி இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதிக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆங்கில அறிவித்தல் 2010 ஒக்ரோபர் 27 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டதோடு, சிங்கள மற்றும் தமிழ் மொழிகளிலான அறிவித்தல்கள் பின்னர் பிரசுரிக்கப்பட்டன. கருத்துக்களைச் சமர்ப்பிப்பதற்கு ஆரம்பத்தில் கடைசித் திகதியாகக் குறிப்பிடப்பட்ட 2010 டிசெம்பர் 15 ஆம் திகதி பின்னர் 2010 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. 2010 டிசெம்பர் 31 ஆம் திகதி இருந்தவாறாக, 2,300க்கும் மேற்பட்டவர்களிடம் இருந்து 4,000இற்கும் அதிகமான முறையீடுகள் குழுவுக்குக் கிடைக்கப்பெற்றன

(8)

18. குறிப்பிட்டதொரு வகைகளிலான மீறல்கள் அல்லது இறுதிக்கட்டங்களின் போதான குறிப்பிட்டதொரு காலப்பகுதிகள் தொடர்பானதாக மற்றும் மனித உரிமைகள் அல்லது மனிதாபிமான சட்டத்தின் குறித்துரைக்கப்பட்ட மீறல்கள் தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறையீடுகளில் கணிசமானவை இருந்தன. ஆவணப்படுத்தப்பட்ட தகவல், நிகழ்வுகளின் பட்டியல்கள் அல்லது பாதிக்கப்பட்டோர், நிழற்படங்கள் மற்றும் வீடியோப்படங்கள் ஆகியவற்றை உள்ளடக்கின. பாரபட்சமற்றவையாக பகுப்பாய்வு ரீதியிலான மட்டுப்படுத்தப்பட்ட சில முறையீடுகள் பொதுவான தகவல்கள், போக்குகள் அல்லது நிலைமை பற்றிய குறிப்பின் அம்சங்களின் பகுப்பாய்வினை வழங்கின. பொதுவான தகவல்கள் ஊடக அறிக்கைகள், இணையத் தொடர்புகள் பொதுவாகக் கிடைக்கக் கூடிய மூலங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் மற்றும் வரலாற்று ரீதியிலான விளக்கங்கள் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட முறையீடுகளில் அடங்கின. இறுதியாக, உண்மையினை அடிப்படையாக அல்லது பகுப்பாய்வினைக் கொண்டிராத நடவடிக்கை எடுக்குமாறும் குறிப்பான பரிந்துரைகளைச் செய்யுமாறும் குழுவினை வேண்டிக் கொண்டவை பெறப்பட்ட கணிசமான முறையீடுகளில் அடங்கின.

19. முறையீடுகளை ஒவ்வொன்றாக குழுவினால் சரி பிழை பார்க்க முடியவில்லை என்பதால் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய தன்மையினை நிறைவு செய்யவும் குழுவின் நியதிக்கேற்ப அவை நேரடி மூலமாகப் பாவிக்கப்படவில்லை (அத்தியாயம் ii A பார்க்கவும்). சில விடயங்களில் முறையீடுகள் தகவலின் ஏனைய மூலங்களை உறுதிப்படுத்துவதற்கு உதவின. யுத்தத்தின் இறுதிக்கட்டடங்கள் தொடர்பாக மாத்திரமன்றி மேலும் விரிவாகக் கடந்த காலம் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசரத் தேவையை குழுவின் காலம் சார்ந்த ஆணைக்கு முன்னதான நிகழ்வுகளை உள்ளிட்டதாகக் கிடைக்கப்பெற்ற கணிசமான முறையீடுகள் வலியுறுத்திக் காட்டுகின்றன.

### (ஈ). இலங்கை அரசுடனான இணைச் செயற்பாடு

20

அதன் ஆரம்பம்தொட்டு, அதன் ஆணையை அமுல் செய்வது பற்றி இலங்கை அரசுடன் கலந்துரையாடிப் பொறுப்புக்கூறும் விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதில் அரசின் நோக்கம் எவ்வாறாக உள்ளது என்பதை அறிவதற்காக் குழு விருப்பம் கொண்டிருந்தது. உண்மையிலேயே, குழு அரசுக்கானதொரு மூலவளமாகச் செயற்படலாம் என்பதாக குழுவுக்கும் அரசாங்கத்துக்கும் செயலாளர் நாயகம் தன் நம்பிக்கையைத் தெரிவித்திருந்தார். குறிப்பாக, உள்நாட்டிலேயே அபிவிருத்தி செய்யப்பட்ட பொறுப்புக் கூறல் பற்றியதொரு பொறித் தொகுதி எனப் பகிரங்கமாக அரசு குறிப்பிட்டுள்ள கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுடன் தொடர்புகளைப் பேணுவது பெறுமதி மிக்கதாகும் என்ற நிலைப்பாட்டின் தொடர்ச்சியுமாகக் குழு பேணி வந்துள்ளது. அதே நேரத்தில், பொறுப்புக் கூறலைப் பொறுத்தவரையில் ஏனைய உள்நாட்டு நிறுவனங்களுக்கும் பெரியதொரு பங்களிப்பு உண்டு என குழு கருதியதோடு, அரசினூடாக அவற்றுடனும் தொடர்புகளைப் பேண குழு முயற்சிகளை மேற்கொண்டது.

(9)

21. இவ்விளக்கம் எடுத்துக்காட்டுவது போன்று, 2010 செப்ரெம்பர் ஆரம்பத்தில் இருந்து குழு அதன் ஆணையை நிறைவு செய்யும் சந்தர்ப்பம் நெருங்கும் வரை, இலங்கை அரசுடன் கலந்துரையாடச் சொல் மூலமும் எழுத்து மூலமும் பல தடவைகள் குழு முயற்சியினை மேற்கொண்டது. குழுவின் நோக்கெல்லை செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்குவதாக உள்ளதாகவும் ஏதும் புலனாய்வினை மேற்கொள்வதில் அது ஈடுபடவில்லை என்பதை உள்ளிட்டவாறு இலங்கை அரசுக்கு குழுவும் ஐ.நா. அலுவலர்களும் பல தடவை தெளிவுபடுத்தியுள்ளனர். குழுவுடன் எதுவிதத் தொடர்பாடலும் இன்றிப் பல மாதங்களுக்குப் பின்னர் இலங்கைக்கு வருமாறு அரசுக் குழுவுக்கு அழைப்பு விடுத்தபோதிலும் அத்தகைய விஜயத்துக்கான ஏற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடாமல் அதன் நிலைப்பாட்டை முழுமையாக மாற்றிக் கொண்டது. குழு, கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுக்கு 'பிரதிநிதித்துவங்களை' மாத்திரம் செய்யலாம் என 2010 டிசெம்பர் மாதம் கடித மூலம் அரசாங்கம் வற்புறுத்திய போதிலும் நாட்டுக்கான விஜயத்தை மேற்கொள்வதற்கான அதன் விருப்பத்தைக் குழு வலியுறுத்தியது. இதனையும் 2011 ஜனவரி ஆரம்பத்தில் வழங்கிய குறிப்பொன்றின் மூலம் அரசு நிராகரித்ததோடு அதன் பின்னர் விஜயம் பற்றி மேற்கொண்டு எதுவித தொடர்பிணையும் பேணவில்லை. மாறாக, கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் ஏனைய உள்நாட்டுப் பொறித்தொகுதிகள் பற்றிய குழுவின் கேள்விகளுக்கு எழுத்து மூலமான பதிலை ஜனவரி இறுதி அளவில் அனுப்பிவைத்ததோடு கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் எந்தவொரு உறுப்பினரையும் உள்ளடக்காத சிறியதொரு தூதுக்குழுவினை நியூயோர்க்குக்கு அது அனுப்பிவைத்தது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலய வீதி புனரமைப்புபணிகள் துரித கதியில்

யாழ்ப்பாணம், மே 1

கோண்டாவில் மேற்கு கந்தர்வளவு ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் ஆலயத்துக்கான சுற்று வீதி செப்பனிடப்பட்டு தார் ஊற்றும் பணிகள் கடந்த 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

சுற்று வீதி செப்பனிடும் பணியும் அதனைத் தொடர்ந்து உள்வீதிக் கூரை திருத்தும் வேலையும் வெளிநாட்டு, உள்நாட்டு அன்பர்களின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் எதிர்வரும் ஆவணி மாதம் நடைபெறவுள்ள ஆலயப் பெருந்திருவிழாவுக்கு முன்னதாக இப்பணிகளைப் பூர்த்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ற)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு இன்று விசேட கருத்தரங்கு

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு உரும்பிராய் கிட்ஸ்பாக் முன்பள்ளி நிலையத்தில் நடைபெறும்.

இதன்போது கற்பித்தலும் ஆன்மிகமும் எனும் தலைப்பில் சொற்பொழிவினை சின்மயா மிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த பிரம்மசாரி ஜாக்கிரத்சைதன்ய நிகழ்த்தவுள்ளார்.

(ற-313)

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### அமரர் கதிரவேலு கோபாலபிள்ளை



கடந்த விகிர்தி வரும் பங்குனி மாதம் 18ஆம் நாள் *(01.04.2011)* வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கதிரவேலு கோபாலபிள்ளை அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று *(01.05.2011)* ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் புற்றளை சித்தி விநாயகர் ஆலய அந்தியேட்டிமடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும், மதியபோசன நிகழ்விலும் தாங்கள் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

மேலும் எமது குடும்பத் தலைவர் நோயினால் துன்பப்பட்ட வேளையிலும் பின்னர் அவரது இறுதிக்கிரியை நிகழ்விலும் பங்குபற்றிப் பல்வேறு வகைகளிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

இந்த அழைப்பை உறவினர், நண்பர்கள் அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

'திகிரி',
புலோலி வட கிழக்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(3692)(38-27-22)

## காணி விற்பனைக்கு

கைத்தடி தென்கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு அருகாமையில் உள்ள சந்தியில் இரு வீதிகளுக்கும் இடையில் 2 நிலப்பரப்பும், 9 குழியும் கொண்ட கிணற்றுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. வர்த்தக, வாணிப தேவைகளுக்கு உகந்தது. தொடர்புகளுக்கு :

0778176384 - 0771739081 - 0779231946

## STUDY ABROAD

Australia / New Zealand / UK
Malaysia / Singapore / Cyprus

Admissions and Scholarships Interviews

For Appoinments : 077 3013060

ICS Integrated Corporate Solutions Pvt Ltd.
107 B -1/1, Galle Road, Colombo-06.
(Opposite to Colombo plaza NOLIMIT.)
www.icslanka.com

## வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கு

ஞான பண்டித வித்தியா சாலைக்கும், ஐயனார் கோவிலுக்கும் இடையில் சிவகுருநாதர் வீதியில், வீடு வாடகைக்கு உண்டு.

0778 333970

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கண்டி வீதியில் Commercial Bank இக்கு முன்பாக பிரத்தியேக ஒழுங்கையில் உள்ள இராசதோப்பு வளவு, 5 பரப்பும் 12.2 குளி நிலப்பரப்புடைய காணி உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0778828781.

## ஆள்கள் தேவை

மட்டக்களப்பு, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நன்கு கம்பியூட்டர் ஹாட்வெயர் (Computer Hardware) அனுபமுள்ள பகுதி நேர வேலைக்கு ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் வரவேற்கத்தக்கது. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

Email: fieldengineer.sl@gmail.com.

T.P.: 0773074918.

c.5780339)

## மூன்றே ஆண்டுகளில் நியூசிலாந்தில்

### கற்கைநெறி+தொழில்வாய்ப்பு +குடியுரிமை (PR)

நியூசிலாந்தில் அங்கீகரிக்கப்பட்ட முதல் தர பிரசித்திப்பெற்ற கல்லூரிகளில்

- PROFESSIONAL COOKERY
- HOTEL MANAGEMENT
- DIPLOMA IN BUSINESS



க.பொ.த சா/த பரீட்சையில் ஆங்கிலத்தில் A,B மற்றும் C தகைமைகள் இருப்பின் IELTS தகைமை தேவையில்லை.

முதலாம் வருடம் கற்கைநெறியுடன் பகுதி நேர வேலைவாய்ப்பை தொடர்ந்து இரண்டாம் வருடம் முழு நேர வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதுடன் மூன்றாம் வருடம் நியூசிலாந்தில் குடியுரிமைக்கான சந்தர்ப்பத்தை NSIA கல்லூரி வழங்குகின்றது.

உங்களுக்கு சிறந்த ஆலோசனைகளை இலவசமாக வழங்குவதற்கு, நாம் இம்மாதம் 7ஆம் திகதி (சனிக்கிழமை) 2011, யாழ்நகருக்கு விஜயம் செய்யவுள்ளோம்.மேலதிக விபரங்களுக்கு 077 3922677

excellence education FOR A SUCCESSFUL FUTURE

மேலதிக விபரங்களுக்கு
SAFEER : 077 3922677
13,1/1,17th Lane ,Colombo-03

## Médecins Sans Frontières (MSF-France) Job Vacancy

MEDECINS SANS FRONTIERES

**Médecins Sans Frontières France (MSF-F) is an international humanitarian non-governmental Organization (NGO) acting in the health sector.**

MSF-France is working in close collaboration with the Ministry of Health, providing medical care and support in Jaffna and Mullaitivu Districts. In response to the need for medical assistance in regions highly affected by the war, MSF-F is currently helping to strengthen secondary health care services in Mullaitivu and Point Pedro Hospitals in the areas of Emergency Unit care, Surgical Care and, Gynecologic and Obstetric care.

**Medicines sans Frontiers (MSF-France) are looking for the following positions to be filled:**

**1. PHARMACY STORE KEEPER- Mullaitivu Office**

MAIN RESPONSIBILITIES

*To provide quality management of pharmacy inventory*
- Ensure proper documentation of pharmacy inventory through strict stock card keeping and routine physical inventory counts, including keeping strict record of expiry & stock ruptures.
- Enter all pharmacy information into Isystock, the software used by MSF to manage pharmacy inventory
- Conduct full pharmacy inventory on a regular basic (every 3 months)
- Manage pharmacy by arranging drugs consistent with MSF procedures, classifications and expiry dates

*To manage pharmacy orders and supply*
- Manage all stock, orders, deliveries and donations of MSF medical items and equipment, respecting MSF policies and procedures at all times.
- Coordinate pharmacy purchase orders with Colombo pharmacy staff
- Coordinate complete reception (packing lists, cold chain requirements, etc.) and delivery of pharmacy purchases

*Tracking Consumption in the Hospital Units*
- Weekly collection of consumption data from each Hospital Unit in which MSF is active
- Create monthly report with consumption data by unit and submit to CMB Pharmacy team

MAIN QUALIFICATIONS

*Required:*
- Storekeeping experience, ideally in a pharmacy or medical supplies environment
- Medical profile preferred (nurse/pharmacist assistant, etc.)
- Fluency in English and Tamil (spoken, read and written)
- Extensive computer experience and ability to learn new software programs and work independently
- Flexibility, willingness to learn, and work within a team
- Respect of MSF organization and principles

*Highly desirable*
- Previous experience as a pharmacy storekeeper
- Knowledge of pharmacy and medical supplies
- Previous experience with MSF or with an international NGO

**Interested person shall send the application with updated CV, motivation letter, qualifications and references to:
MSF-France Administrator, 2nd Milepost, Mannar Road, Nelukkulam, Vavuniya, Or e-mail CV to: msff-mullaitivu-admin@paris.msf.org
before May 9th, 2011.**

**2. Driver-Part time - Point Pedro, Jaffna Office**

OVERALL RESPONSIBILITIES

**Responsible for the good condition, cleanliness and maintenance of his vehicle in order to drive safely. Responsible for the security of passengers and transported items and equipments in his vehicle.**

MAIN QUALIFICATIONS

*Required:*
- Valid Sri Lankan Driving License
- Good communication skills (clear communication, Spoken English) and speaking Sinhala and Tamil are preferable
- Fully understands vehicle maintenance and operations.
- Should have a letter good conduct
- Flexible, polite and diplomatic
- Previous working experience with MSF or with an International NGO, a plus
- Respect of MSF organization and principles

**Interested person shall send the application with updated CV, motivation letter, qualifications and references to:**

**MSF-France Administrator,** Msf France, Othiyady, Puloly, Point Pedro, Jaffna or **E-mail:** msff-point-pedro@paris.msf.org before May 9th, 2011

**Only candidates selected for interviews will be contacted**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரியண்டல் அக்கூரியம் (மல்ரி பாம் சென்ரர்)

வளர்ப்பு கலர் மீன் வகைகள், நவீன வகையான மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், வளர்ப்புக் குருவிகள், நாய்க்குட்டி இனங்கள், செல்லப் பிராணிகள், பூக்கன்றுகள், பூஞ்சாடிகள் என்பன நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

**தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்**
**61, இராமநாதன் வீதி,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.**
(3702)(41) **0217912997, 0754985400**

## VACANCY NOTICE

apply now

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
SECOND FLOOR NO.15, SIRAMPIYADI LANE, (OFF STANLEY ROAD) JAFFNA.

**பதவி வெற்றிடம் – அலுவலக உதவியாளர்**

**தகைமைகள்**

G.C.E(O/L) கணிதம், ஆங்கிலம் விசேட சித்தியுடன்,
G.C.E (A/L) மூன்று பாடங்களும் சித்தி
கணினி சம்பந்தமான போதிய அறிவும், அனுபவமும்

**தகுயை உடையவர்கள்**

**காலம்: 02-05-2011 நேரம்: 10.00 am - 01.00 pm**

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்

மேலதிக தொடர்புகளுக்கு:

BCHS
**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotle மேல் Tel: 021 222 4550

## மூன்றாமாண்டு நினைவஞ்சலி

| மண்ணுலகு | | விண்ணுலகு |
|---|---|---|
| 11 | | 04 |
| * | | * |
| 11 | | 05 |
| * | | * |
| 1926 | | 2008 |



**அமரர் கந்தையா செல்லையா**

திதி: சித்திரை அபரபட்ஷ சதுர்த்தசி (01.05.2011 ஞாயிறு)
முன்னின்றுழைத்த முன்னேற்றம் தந்த
எங்கள் ஐயா
மூன்று ஆண்டுகளென்ன முன்னூறாண்டுகளானாலும்
உம் நினைவுடனேயே நாம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சித்தம்பாதி,
கரணவாய்.

உம் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்
குடும்பத்தினர்.

(40-24-22)(இ/578117)

## விற்பனைக்கு

NATIONAL Brand இரண்டாம் தரப் பாவனைக்குரிய குளிர்சாதனப் பெட்டி உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0771093300**

## காணி விற்பனைக்கு

தொண்டைமானாறு சந்தியடியில் (பழைய, பருத்தித்துறைக்குப் போகும் பஸ் தரிப்பிடத்திற்கு முன்பாக) 6 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. அதிக விலை கூறுவோருக்கு முன்னுரிமை. தொ. பேசி :

**0112 58 10 47**

தொடர்பு கொள்ளும் நேரம் (8.30 am க்கு முன்னும், 11.30 am க்குப் பின்னும்)

## காணி விற்பனைக்கு

கிளிநொச்சி 155 ஆம் கட்டை A9 வீதி அருகில் கடைகள் கட்டுவதற்கு ஏற்ற கிணற்றுடன் கூடிய ¼ ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:0776538854**
**0750407379**

## JAFFNA LAND

① யாழ்ப்பாணம் Chapel வீதி 2nd குறுக்குத்தெரு மூலையில் 2 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்குண்டு.

② யாழ்ப்பாணம் பலாலி றோட் (Farm School அருகாமையில்) 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

③ சாவகச்சேரி, பெருங்குளம் சந்தியிலிருந்து சங்கந்தானை செல்லும் வீதியில் மட்டுவில் சங்கந்தானை) 6 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்குண்டு.

④ யாழ்ப்பாணம் அளவெட்டி 7 1/2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு '

**தொடர்பு: 0773506416.**

## வீடு வாடகைக்குண்டு

தட்டாதெரு சந்திக்கு அருகில், அரசடி வீதியில் 7 அறைகள் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (களஞ்சியமாகவும் பயன்படுத்தலாம்)

**தொடர்பு:021-2226653**

## நிறுவனங்களை பதிவுசெய்தல்

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை அரசு உத்தரவாதப் படுத்திய கௌரவத்தையும், நம்பிக்கையையும் உங்கள் வியாபார நிறுவனங்களுக்கும்பெற்றுக்கொள்ள. இலகுவாகப் பதிவு செய்ய.

**தொடர்புகளுக்கு: 0729994777**

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

நிறைகூடிய புறொயிலர், கல்பேட்ஸ் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் மலிவான விலையில் எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.

## வீடு விற்பனைக்கு

1½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு, 4 அறைகள், ஹோல், அட்டாச் பாத்றூம், கிச்சின், கிணறு, சுற்றிவர மதில் என சகல வசதிகளும் உள்ள வீடு விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்புகொள்ளவும்.
ஞாயிறு, திங்கள், புதன் காலை 9 மணி தொடக்கம் ந.ப 12 மணிவரையும்
மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரையும்

மு.விமலநாதன் 5/3 கருவப்புலம் லேன், கோணாவளை, திருநெல்வேலி.
குறிப்பு: யாழ் பல்கலைக்கழக சுற்றாடலில் ஆடியபாதம் வீதியில்.



## THE PRINCESS OF WALES NURSING HOME

**132, Kachcheri Nallur Road, Jaffna.**
T.P: 0214922589 Fax:0212226180

- ★ பொது சத்திர சிகிச்சை
- ★ இருதய நோய் சிகிச்சை
- ★ மகப்பேற்று சிகிச்சை
- ★ நீரிழிவு சிகிச்சை
- ★ குழந்தைகள் சிகிச்சை
- ★ பொது சிகிச்சை
- ★ காது, மூக்கு, தொண்டை சிகிச்சை

* மேற்குறிப்பிடப்பட்ட சிகிச்சைகள் யாவும் யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களினால் வழங்கப்படுகின்றன என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.
* அடிப்படை தாதியர் பயிற்சி நெறியின் 2 ஆம் பிரிவு ஜூன் முதலாம் திகதி ஆரம்பமாகின்றது. உங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.
* சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ்கள் தகுதிவாய்ந்த வைத்தியர்களால் வழங்கப்படுகின்றன.

**தேவை**

1) Medical Officer(காலை, மாலை வேளைகளில் கடமையாற்றுவதற்கு)
2) இரவுநேரக் காவலாளி உடன்தேவை. (C/578130)

## VISA - வீசா

**Consultancy Service**

***UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND,SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY,DENMARK,***

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC**, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
03.08.1931

இறப்பு
26.04.2006

**நாகலிங்கம் பரம்சோதி**

(உப்புக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)
திதி-துவாதசி

ஒருவழி பாதையென உங்களின் உறவுதான்
ஓங்கியே கை தந்து பாசத்தை ஊட்டியதே
பெருமனங் கொண்டுமே எம்மில் இருப்பதை
பாங்குடனே உணர்வதனால் உங்களின் பசிதனை
விருப்புடன் நாமறிந்து உணவுதந்து நாமுண்கிறோம்!
வருடங்கள் பலவானாலும் மாறாதே நினைவுகளும்
கருத்துடன் நாம் வாழ செய்த பல கருமங்கள்
காலமெலாம் குறைவின்றி மேல்நிலையில் வைக்கிறதே.

பறிஜின் டிசைன் குறூப்,
100, அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு, யாழ்ப்பாணம்.

பேரப்பிள்ளைகள்:
தர்மதா [illegible]
மிதுன் பரிசித், மேருஜன் பரதன்,
மனைவி, மகன், மருமகள்

## Jayam Electronics Repairing Center

LCD T.V கள், T.V.கள் DVD Player Amplifier Hi-fiset, Washing Machine, car set மற்றும் சகலவிதமான இலத்திரனியல் பொருள்கள் நவீன தொழில்நுட்ப முறைகளுக்கேற்ப மிகச் சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும்.
இலத்திரனியல் பொருள்கள் பாவனை தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படும்.





**Jayam Electronics**
**339, K.K.S. Road, Jaffna.**
(மனோகராச் சந்திக்கு அருகில்) 0726807608

(சி/572185)(28-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு மே தினப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளர் தினமான மே தினம் இம்முறை முழுமுழுக்க அரசியல் மேடையாக மாறக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தாயகத்துக்காக ஒருதுளி வியர்வை சிந்துங்கள். மனித கேடயங்களாக நாட்டை பாதுகாத்திடுங்கள் என்ற தொனிப் பொருளில் தலைநகர் கொழும்பில் நான்கு முனைகளில் இருந்தும் பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

ஐ.நா. அறிக்கைக்கு ஒட்டுமொத்த கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில் இந்தப் பேரணிகளைத் தொடர்ந்து நகரசபை மைதானத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று அமைச்சர் டயஸ் அழகப் பெரும தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பேரணி ஹம்பல பார்க்கில் இருந்து ஆரம்பமாகும். சுதந்திரக்கட்சியுடன் ஈ.பி.டி.பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் ஆதரவாளர்கள் பங்கேற்பர்.

ராஜகிரிய என்.எம்.பெரேரா சிலையடியில் இருந்து ஜனநாயக இடதுசாரி முன்னணியின் பேரணியும் -

நாரஹேன்பிட்டி வொஷிங்டன் வீடமைப்புத் திட்டத்தில் இருந்து மக்கள் ஐக்கிய முன்னணியின் பேரணியும் -

மாளிகாவத்தை வெள்ளை பார்க்கில் இருந்து தேசிய விடுதலை முன்னணியின் பேரணியும் - ஆரம்பமாக விருக்கின்றன.

இந்தப் பேரணிகளில் அரசுக்கு எதிராக ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையைக் கண்டிக்கும் கோஷங்கள் எழுப்பப்படுவதுடன் சுலோக அட்டைகள், பதாகைகள் எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

அதேவேளை-பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி பண்டாரவளையிலும், ஜே.வி.பி. தெஹிவளை டி.எஸ்.ஜயசிங்க பார்க்கிலும் மே தினக் கூட்டங்களை நடத்த விருக்கின்றன.

தொழிலாளர் உரிமைகள் மற்றும் வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவற்றை வலியுறுத்தி இந்தக் கூட்டங்கள் இடம் பெறும். இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மேதினப் பேரணியும் கூட்டமும் காலை 9.30 மணிக்கு ஹற்றனில் நடைபெறும்.

26 தொழிற்சங்கங்களின் கூட்டுமுன்னணி கோட்டையில் இருந்து பேரணி நடத்தவிருக்கிறது. ஹைப்பார்க் சந்தியில் கூட்டம் இடம்பெறும். (ஒ-ஐ)

## ஈ.பி.டி.பியின் ஏற்பாட்டில் யாழ். தமிழரும் கொழும்பு மே தினப் பேரணி, கூட்டத்துக்கு!



யாழ்ப்பாணம், மே 1

கொழும்பில் இன்று நடைபெறும் ஆளும் கட்சியின் மே தினப்பேரணி, ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத் தமிழர்களும் 'படையெடுத்து'ச் செல்கின்றனர்.

ஈ.பி.டி.பியினரின் ஏற்பாட்டிலேயே இவர்கள் பஸ்கள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டனர். அவர்கள் நேற்று ஈ.பி.டி.பி. யாழ். அலுவலகத்துக்கு முன்னால் கூடி நிற்பதை படத்திலும் காணலாம்.

குடாநாட்டின் பல்வேறு கிராமப் பகுதிகளிலும் ஈ.பி.டி.பியினர் நேரடியாகச் சென்று வாக்குறுதிகளை அளித்தும் ஒலிபெருக்கி மூலம் 'சலுகை' அறிவிப்பை விடுத்தும் அவர்களை கவர்ந்து செல்கின்றனர் என்று கிராம வாசிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கிடைத்த வேலை பறிபோய் விடும், பதவி உயர்வு கிடைக்கும், பதவி நிரந்தரமாகும் என்ற ஆசை வார்த்தைகளை நம்பி கொழும்பு செல்லும் அவர்கள், அங்கு ஐ.நா. நிபுணர் குழுவுக்கு எதிராக கோஷம் எழுப்பவும் தயாராகவே இருக் கிறார்கள் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்களை 'உங்களுக்கு நிரந்தர நியமனம் வேண்டுமானால் வரவேண்டும்' என்று கூறியே மேற்படி ஊழியர்கள் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். யாழ். வைத்திய சாலையில் இருந்து நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் மேற்படி ஊழியர்கள் பஸ்ஸில் ஏற்றப்பட்டனர். இதனால் வைத்தியசாலையின் முக்கிய பணிகள் முடங்கியுள்ளன என்றும் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் அதிருப்தி தெரிவித்தன.

## மரண அறிவித்தல்கள்

### இராசேந்திரம் செல்லம்மா



பூநகரி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் அல்லாரை வடக்கு, மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் செல்லம்மா நேற்று (30.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - காமாட்சி தம்பதியரின் மருமகளும் இராசேந்திரத்தின் (பிரபல வர்த்தகர்) பாசமிகு மனைவியும் சிவயோகம், பாலசுப்பிரமணியம், இந்திராணி, பரமேஸ்வரி, இராசலிங்கம், நாகேஸ்வரி, துரைராஜா ஆகியோரின் பாசமிகு உடன்பிறப்பும் வினோதினி, விஜிதரன், பிருந்தா (யாழ்.பல்கலைக்கழகம்), பிரதீபன் (வியாபாரம்), தர்சிகன் (சாவகச்சேரி இ.க.), குலறாஜ் (மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயும் பாலதீபனின் அன்பு மாமியும் அன்பரசனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் மு.ப. 10 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பிரிந்தா ஸ்ரோர்ஸ்,*
*அல்லாரை.*

*தகவல்:*
சு.இராசேந்திரம்

### குருநாதர் விஜயரத்தினம்



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் 741 B, யோகபுரம் மத்தி, மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட எமது பாடசாலையின் மு/கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலை ஆசிரியர் வி.தயாபரனின் தந்தை குருநாதர் விஜயரத்தினம் நேற்று (30.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பாலியாறு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*741 B, யோகபுரம் மத்தி,*
*மல்லாவி.*
*ஆசிரியர் நலன்புரி கழகம்,*
மு/கோட்டை கட்டியகுளம் அ.த.க.பாடசாலை.

### சின்னத்தம்பி நடராஜா
(இளைப்பாறிய பொறியியலாளர்)



கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சொந்த இடமாகவும் தற்போது 86/2, சேர் பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராஜா நேற்று (30.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*86/2, சேர் பொன். இராமநாதன் வீதி,*
*திருநெல்வேலி*
*021 222 0559*

*தகவல்:*
சி.பிரபாகரன்,
*(மருமகன், சுதர்சன் பான்ஸி,*
*பரமேஸ்வராச் சந்தி)*

## ஐ.நா. அறிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் நல்லிணக்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுக்களை அரசு நடத்திவருகிறது. அந்தப் பேச்சில் தடைகள் ஏற்படமாட்டா.

ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கையால் இந்தப் பேச்சில் தடை ஏதும் ஏற்படாது. கூட்டமைப்புடன் தொடர்ந்து பேச்சு நடத்தி நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே அரசின் நோக்கம்.

ஐ.நா. அறிக்கையைக் கூட்டமைப்பு ஆதரித்தமைக்காக அதனுடனான பேச்சை அரசு நிறுத்தப்போவதில்லை. இறுதித்தீர்வு எட்டும் வரை பேச்சு தொடரும் - என்றார் வாசுதேவ. (ஒ-ஐ)

## இலங்கை அரசுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தண்டிக்கப்பட வேண்டும் என்று கட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று கோரி சகல பிரதான நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-ஐ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையாளுவர் என்று நம்புகிறோம்.

இந்த விவகாரத்தில் தலையிட்டு சர்வதேச சமூகம் குழப்பம் விளைவிக்கக் கூடாது. இது குறித்து சீனா ஏற்கனவே ஓர் அறிக்கையில் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக சிறிலங்கா ஒரு விசாரணை அமைப்பை உருவாகியுள்ளது. அனைத்துலக சமூகமும் அதற்கு ஆதரவு வழங்க முடியும் என்று சீனா நம்புகிறது.

சிறிலங்காவின் உள்நாட்டு நிலைமைகளின் உறுதித் தன்மையைப் பேணும் விவகாரங்களுக்கும் அபிவிருத்திக்கும் அனைத்துலக சமூகம் ஆதரவு வழங்கும் என்றும் சீனா நம்புகிறது.

இதை அவர்கள் செய்யத் தவறினால் அது இந்த விவகா ரத்தில் [illegible] உருவாக்கும் என்றார் லீ.

(ஒ-ஐ)

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் இராசம்மா

காரைநகர், பயிரிக்கூடலைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் இராசம்மா நேற்று (30.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் காரைநகர், சாம்பலோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
*பயிரிக்கூடல், காரைநகர்.*
**குடும்பத்தினர்.**

### சின்னையா சின்னம்மா



மட்டுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சின்னம்மா நேற்று (30.04.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் கிழக்கு,*
*சாவகச்சேரி.*
*தொ.பே.: 0774080725*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

STUDY & WORK IN UK CANADA AND INDIA

Intake Get Register Now Collecting the Application until June 30th 2011.
Start the academic on September.

இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை.
Administration & Documentation என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கு விசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா?
உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும் (Free Financial Sponsor for UK Visa)
இதுவரை உத்தரவாதப்படுத்திய விசாக்கள் 40 இற்கு மேல் கிடைத்துள்ளன.
சகல தொடர்புகளுக்கும் 0729994777

LONDON CITY COLLEGE
No.01, DEANSTION HOUSE, DEANSTON PLACE, COLOMBO-03

## மரண அறிவித்தல்

### திருமதி கனகமணி இராசரத்தினம்
*(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ திருநெல்வேலி இ.த.க.பாடசாலை)*



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் புளியங்கூடல் மற்றும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வாழ்ந்து வந்தவருமான திருமதி கனகமணி இராசரத்தினம் கடந்த 27.04.2011 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் ராதா, ஜெயா, சுதா, இராஜக்குமாரசுவாமி, செல்வக்குமாரசுவாமி, கீதா, பாலக்குமாரசுவாமி, லதா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகநாதன், செல்வமலர், ஞானச்செல்வம், மஞ்சு, சூரியகாந்தி, கேதீஸ்வர நாதன், ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் டிலோஜன், ராகவன், ஸ்ரீராம், ஸ்ரீகுமரன், நிலாணி, யாமினி, நிதிலா, ஆதித்தன், கீர்த்தனா, ஜனார்த்தனன், அகரன், ஆதித்யா, அர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான திருமதி வாலாம்பிகை கந்தசாமி, இராசையா, அருளானந்தம் மற்றும் திருகோணமலையைச் சேர்ந்த திருமதி அன்னலட்சுமி தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*[illegible] பெரேரா லேன்,*
*வெள்ளவத்தை, கொழும்பு.*

*(3679)*

*தகவல்:*
திருமதி ராதா ஜெகநாதன் ( *ஜெயா*)
*தொ.பே. 0113158164, 0771157660*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# நல்லிணக்க ஆணைக்குழுவை மேலும் 3 மாதங்கள் இயங்கவைக்க நடவடிக்கை

## அறிக்கையை பகிரங்கப்படுத்துவது குறித்து ஜனாதிபதியே முடிவு

கொழும்பு, மே1

நல்லிணக்க ஆணைக்குழுவின் காலத்தை மேலும் மூன்று மாதங்களுக்கு நீடிக்கும்படி அதன் தலைவர் சீ.ஆர்.டிசில்வா அரசிடம் கோரவுள்ளார்.

-இவ்வாறு ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நல்லிணக்க ஆணைக்குழு, ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை புறந்தள்ளப் போவதில்லை.

நாட்டின் முக்கியமான சில பகுதிகளில் கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டு ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள் ளன. ஆனால், நல்லிணக்க ஆணைக்குழு நாட்டில் அனைத்து பாகங்களிலுமுள்ள மக்களிடம் இருந்து சாட்சியங்களைப் பதிவு செய்துள்ளது.

எனினும், ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை நல்லிணக்க ஆணைக்குழு புறந்தள்ளப் போவதில்லை. அந்த அறிக்கையில் உள்ள விடயங்களை நல்லிணக்க ஆணைக்குழுவின் உயர்மட்டக்குழு நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்தது. - என்றார்.

நிபுணர் குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்டது போன்று நல்லிணக்க ஆணைக்குழுவால் தயாரிக்கப்பட்டு வரும் இறுதி அறிக்கையும் பகிரங்கப்படுத்தப்படுமா என்று கேட்டபோது, நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளமைக்கு அமைய, ஆணைக்குழுவால் தற்பொழுது தயாரிக்கப்பட்டு வரும் இறுதி அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்படும். நிபுணர் குழு அறிக்கை போன்று இந்த அறிக்கையைப் பகிரங்கப்படுத்த எமக்கு அதிகாரமில்லை. அது தொடர்பாக ஜனாதிபதியே தீர்மானிப்பார். - என்றார்.(ஒ-சி)

## சிவபூதநாதேஸ்வர ஆலய தேர்த் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், மே1

நீர்வேலி, கரந்தன், உரும்பிராய் கிழக்கு மனோன்மணி அம்பிகா சமேத சிவபூதநாதேஸ்வர ஆலயத்தில் நடைபெற்று வருகின்ற வருடாந்தப் பெருந்திருவிழாவில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவம் நடைபெறவுள்ளது.

காலை 6 மணியளவில் அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகி 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று சிவபூத நாதேஸ்வரப் பெருமான் தேரில் எழுந்தருளி ஆரோகணித்து அடியவர்களுக்கு அருள் பாலிப்பார்.

(ஐ-9)

(இரதோற்சவ சிறப்பிதழ் 16ஆம், 17ஆம் பக்கங்களில்)




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

## மாநகர சபைக் கூட்டத்தில் புலனாய்வுப் பிரிவினர்

யாழ்.மாநகர சபையின் கடந்த மாதாந்தக் கூட்டத்தின்போது சீருடையின்றி புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஆறுபேர் பிரசன்னமாகி இருந்தமை குறித்து எதிர்க்கட்சியினர் ஆட்சேபனை தெரிவித்தனர்.

சபை நடவடிக்கையில் இருந்து வெளிநடப்புச் செய்யப்போவதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக முதல்வர் பாதுகாப்புக்காகவே அவர்கள் அனுமதிக்கப்பட்டனர் என்று கூறியபோதும், எதிர்த்தரப்பு உறுப்பினர்கள் கடும் ஆட்சேபம் தெரிவித்தமையையடுத்து அவர்கள் வெளியேறினர்.

முதல்வரின் பாதுகாப்புக்கென பொலிஸார் இருவர் கடமையில் இருக்கும்போது இது அவசியம்தானா எனக் கேள்வி எழுப்பிய எதிரணியினர், மாநகர சபையில் இப்போதுதான் இப்படியான ஒரு சம்பவம் இடம்பெற்றுள்ளதாகக் கண்டனமும் தெரிவித்தனர். (ஒ-7)

# அனலைதீவில் யுவதியின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்பு

## சந்தேகத்தின் பேரில் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே1

அனலைதீவில் வீடு ஒன்றிலிருந்து இளம் யுவதி ஒருவரின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் அவருடன் நெருங்கிப் பழகிய இளைஞர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனலைதீவு மூன்றாம் வட்டாரத்தைச் சேர்ந்த வேல்முருகையா நிஷாலினி (வயது-24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

சம்பவத்தில் மரணமான யுவதியும் அவரது தாயும் வீட்டிருந்து சற்றுத் தொலைவிலுள்ள கிணற்றில் குளிக்கச் சென்றுள்ளனர்.

குளித்து முடித்துவிட்டு குறித்த யுவதி மட்டும் தனியாக வீடு திரும்பியுள்ளார். சிறிது நேரம் கழித்து வீடு திரும்பிய யுவதியின் தாயார், யுவதி கழுத்தில் சுருக்கிடப்பட்டநிலையில் இருப்பதைக் கண்டுள்ளார்.

இதன் பின்னர் சம்பவம் குறித்து கிராமசேவகருக்கு அறிவிக்கப்பட்டது. கிராமசேவகர் மூலம் ஊர்காவற்றுறை பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவ இடத்துக்கு நேரில் சென்ற ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா விசாரணைகளை மேற்கொண்டதுடன் பிரேத பரிசோதனைக்காகச் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படியும் உத்தரவிட்டார்.

இதேவேளை - இந்த யுவதியின் காதலன் என்று சந்தேகிக்கப்படும் நபர் கடல்மார்க்கமாகத் தப்பிச்செல்ல முற்பட்டபோது, கடற்படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இதனிடையே சம்பவ தினத்துக்கு முதல் நாள் பிரஸ்தாப யுவதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

தன்னை ஒருவருடமாக ஒருவர் காதலித்துவிட்டு (தற்போது கைதுசெய்யப்பட்டிருப்பவர்) ஏமாற்றிவிட்டார் எனவும், அவர் தன்னுடன் பலமுறை உடலுறவுகொண்டார் எனவும் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து நீதிவான் குறித்த யுவதியை 28 ஆம் திகதி சட்ட வைத்திய பரிசோதனைக்கு அனுப்பியிருந்தார். எனினும் சந்தேக நபர், குறித்த யுவதியுடன் உடலுறவு கொண்டமையை நிரூபிக்க முடியவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்தே குறித்த யுவதியின் மரணம் சம்பவித்துள்ளது. இவரது மரணம் தற்கொலையா, கொலையா என்று சந்தேகம் எழுந்துள்ளது.

யுவதியின் பிரேத பரிசோதனை அறிக்கை தொடர்பாக வைத்தியசாலை வட்டாரங்களுடன் தொடர்புகொண்டு கேட்டபோது அது தொடர்பாக எந்த வித தகவல்களும் வெளியிட அந்த வட்டாரங்கள் மறுத்து விட்டன. (ஒ-15)

## வலைபந்தாட்ட இறுதிப்போட்டி

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கிடையேயான 19 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டி நாளை மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியும் மோதவுள்ளன. (ஒ-86)

### கம்பியால் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில்

# காவலூரில் வயோதிப மாது மரணம் மகன் உட்பட இருவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், மே1

ஊர்காவற்றுறை இரண்டாம் வட்டாரத்தில் கம்பியால் கழுத்து நெரிக்கப்பட்ட நிலையில் பாழடைந்த கிணற்றினுள் இருந்து மீட்கப்பட்ட வயோதிப மாதுவின் மரணத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மரணமானவரின் மகனான விஸ்வலிங்கம் சிவராசா (வயது -48) மற்றும் சோமசுந்தரம் வேலாயுதம் (வயது-51) ஆகிய இருவரும் ஊர்காவற்றுறை பொலிஸாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி முதல் வீட்டிலிருந்து காணாமல் போன விஸ்வலிங்கம் இராசம்மா (வயது-85) என்பவரை அவரது உறவினர்கள் தேடிச் சென்றபோது ஊர்காவற்றுறை, காளி கோயிலடியில் பாழடைந்த கிணற்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டார்.

இதையடுத்து இந்த இடத்துக்குச் சென்ற ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்திசாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

தலையில் பலமாகத் தாக்கப்பட்டு இடுப்பிலும் கழுத்திலும் அலுமினியக் கம்பியால் சுற்றப்பட்டு சடலம் கிணற்றில் மிதக்காதவண்ணம் இரண்டு பெரிய கற்களும் கட்டப்பட்டு இவர் கிணற்றில் வீசப்பட்டிருந்தார். இவரது மரணம் கொலையாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போதே மேற்படி சந்தேக நபர்கள் இருவர் சிக்கினர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றொரு சந்தேக நபரை பொலிஸார் தேடிவருகின்றனர். (ஒ-15)

## மினிபஸ் தடம்புரண்டு நால்வர் படுகாயம்

காரைநகரில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் தடம்புரண்டு பொன்னாலைப் பாலத்தினுள் பாய்ந்ததில் பயணம் செய்த நால்வர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் காரைநகரைச் சேர்ந்தவர்களான வை.வித்தியா (வயது-19), இ.செல்வகுமார் (வயது-31), எஸ்.கிருஷா(வயது-17), தொல்புரத்தைச் சேர்ந்த எஸ்.கிருஷ்ணபாலன்(வயது-22) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

சுமார் 40 பயணிகளுடன் 782 இலக்கப் பாதை ஊடாக வந்த இந்த மினிபஸ் திடீரென பொன்னாலைப் பாலத்தினுள் பாய்ந்தது. தெய்வாதீனமாக நால்வரைத் தவிர ஏனையவர்களுக்கு எதுவித காயங்களும் ஏற்படவில்லை.

கடற்படை மற்றும் பொலிஸாரின் உதவியுடன் பாலத்துக்குள் பாய்ந்த பஸ்ஸும் பயணிகளும் மீட்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.(ஒ-9-250)

# மன்னம்பிட்டி ஆற்றில் வான் குடைசாய்ந்து 6 பேர் சாவு; மருதமுனை சோகத்தில்

மருதனைமுனையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற வான் மன்னப்பிட்டி ஆற்றில் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் குடைசாய்ந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

வெளிநாட்டிலிருந்து விடுமுறைக்காக வந்திருந்த மருதமுனையைச் சேர்ந்த உமர்தீன் முகமது ஆசீக் என்ற வைத்தியர் தமது குடும்பத்துடன் கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

வானை ஓட்டிச்சென்ற டாக்டர் உயிர்தப்பினார். அவரது மனைவி, ஐந்து வயது மகன், அவரது மாமி, நண்பர், அவரது மனைவி மற்றும் சிறு குழந்தை ஆகியோர் ஆற்றில் மூழ்கி மரணமானார்கள்.

இவர்களின் ஜனாஸாக்கள் நேற்று மீட்கப்பட்டன.

இந்தத் துன்பகரமான சம்பவத்தை அடுத்து மருதமுனை நகர் நேற்று சோகத்தில் மூழ்கியது. கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு கடைகள் பூட்டி துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

## தெல்லிப்பழைக் கோட்ட தமிழ்த்தினப் போட்டி நாளை

சுன்னாகம், மே1

தெல்லிப்பழை கல்விக் கோட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன.

நாளை நண்பகல் 12 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் எழுத்தாக்கப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் மொழித்திறன் போட்டிகளும், மறுநாள் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடன ஆற்றுகைப் போட்டிகளும் நடைபெற உள்ளன.

7ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இசைத் துறைப் போட்டிகள் நடைபெற உள்ளன. (த-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயன்மிக்க விடயங்களை மக்களுக்கு உணர்த்தும் மருத்துவ மாணவர்களின் விழிப்புணர்வுக் கண்காட்சி




ஊடக அனுசரணை உதயன்

(தொகுப்பு: கர்ணன், திவ்வியகுமார், ஹரிஸ்)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் கடந்த இரு தினங்களாக நடைபெற்றுவரும் மருத்துவ விழிப்புணர்வுக் கண்காட்சியை வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த பெரும் திரளான மாணவர்கள் மற்றும் பொது மக்கள் கலந்துகொண்டு பார்வையிட்டார்கள்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட 31ஆவது அணி மாணவர்களின் ஏற்பாட்டில் உதயன் நாளிதழின் ஊடக அனுசரணையுடன் நடைபெற்றுவரும் இக் கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் வெள்ளி காலை 9 மணிக்கு நடைபெற்றபோது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அத்தியட்சகர் கே.நந்தகுமார் நாடாவை வெட்டிக் கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

இந்தக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இடம்பெறும்.

கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற கண்காட்சியை வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த முதன்மைப் பாடசாலைகள் உள்ளிட்ட பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், ஆண்கள், பெண்கள் உள்ளிட்ட பெருந்திரளானோர் பார்வை யிட்டு சுக வாழ்வுக்கான போதிய தகவல்களைப் பெற்றுக் கொண்டனர்.

இந்தக் கண்காட்சியில் நீரிழிவு, மாரடைப்பு, மார்பு முடக்குவலி, உயர்குருதி அமுக்கம், கண்பார்வை தொடர்பான பிரச்சினைகள், புற்றுநோய், ஆஸ்துமா, வீதி விபத்துக்கள் முதலுதவி ஆகிய அம்சங்கள் தொடர்பான விழிப்புணர்வுக் கண்காட்சியும் விளக்கமும் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

மருத்துவபீட 31ஆவது அணி மாணவர்களின் வழிநடத்தலில் வடமாரட்சிப் பாடசாலைகளைச் சேர்ந்த ஜி.சீ.ஈ.உயர்தர வகுப்புகளில் உயிரியல் பிரிவில் கற்கும் மாணவர்கள் இந்தக் கண்காட்சியில் மிக இலகுவாக விளக்கமளித்து வருகின்றனர். இவ்விளக்கங்கள் பாடசாலை மாணவர்களையும் பொது மக்களையும் எளிதில் கவருவதாக அமைந்துள்ளது. கண்காட்சியில் நீரிழிவு, குருதி அமுக்கம் ஆகிய நோய்களுக்கும் ஏனைய நோய்களுக்கும் இலவச மருத்துவ ஆலோசனைகள், இலவச கண்பரிசோதனை, கண்ணாடி வழங்கல் ஆஸ்துமா பரிசோதனை, இலவச உறிஞ்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

"வருமுன் காப்போம் நோயற்ற சமூகத் தைக் கட்டியெழுப்புவோம்' என்ற மகுட வாசகத் தைக் கொண்டதாக இந்தக் கண் காட்சி அமைந்துள்ளது.

இறுதி நாளான இன்று பெரும் எண்ணிக்கையானவர்கள் திரள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தமிழ் இன அடையாளத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரினவாதக் கொள்கைகளுடன் இலங்கையில் இனரீதியாகவே தொழிலாள வர்க்கம் பிளவுபடுத்தப்பட்டு, தமிழ் மக்களும் உழைக்கும் வர்க்கமும் ஒடுக்கு முறைக்கு அரசியலமைப்பு மூலமாகவே ஆளாக்கப்பட்டு, தமிழ் இன அடையாளத்தையே இழந்து நிற்கும் நிலை மட்டுமல்ல, அரசியல் அடிப்படை உரிமைகளை இழந்து, மனித உரிமைகளை இழந்து, வாழும் உரிமை கூட இல்லாத, அந்த உரிமைகளுக்குப் போராடுவதற்கே உரிமையற்ற அடக்கு முறைக்கும் இன ஒடுக்கு முறைக்கும் உள்ளான ஒரு நிலையே தமிழ்த் தேசிய மக்களுக்கு இன்று இலங்கையில் ஏற்பட்டுவிட்டது.

மனித குலத்தின் மனித உரிமை, வாழும் உரிமை, அடிப்படை அரசியல் உரிமை, ஐ.நா. மன்றத்தின் அடிப்படை சாசனமாக இருக்கும் போது அந்த உரிமைகளை நிலை நாட்டுவதற்கு இலங்கையில் நாம் போராட வேண்டியுள்ளோம்.

இன அடையாளத்தையே நிலை நாட்டப் போராட வேண்டிய நிலையில் தொழிலாளர், விவசாயிகள் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும் போராடவேண்டிய கடப்பாடுடைய தமிழ் மக்களும் எழுச்சி பெற்றே ஆகவேண்டும். உழைப்பே இல்லாத அகதி வாழ்க்கையில் வீழ்ந்து கிடக்கும் பல லட்சக்கணக்கான மக்களும் எழுந்து வாழ்வுரிமைக்காகவே போராட வேண்டியுள்ளனர். இன்றைய 'மே' நாளில் ஒட்டு மொத்தமாக தொழிலாளர், விவசாயிகள் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகளையும் அதற்கும் மேலாக மனித உரிமை வாழ்வுரிமைக்காகவும் தமிழ் இன அடையாளத்தையும் பாதுகாக்கவும் நாம் ஒன்றுதிரண்டு உழைக்க வேண்டுமென அழைப்பு விடுவிக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## ஐ.நா. பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது முன்னெடுத்து வருகின்றது. அதே சமயத்தில் நிபுணர் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் இலங்கைக்கு நெருக்கடிகளைக் கொடுக்க அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகள் முயற்சித்து வருகின்றன.

எதிர்வரும் 3ஆம் திகதி இலங்கை வரவுள்ள, தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ரொபேர்ட் ஓ பிளேக் அறிக்கை தொடர்பில் அமெரிக்காவின் எதிர்ப்பார்ப்பு என்ன என்பதை இலங்கைத் தலைவர்களுக்கு விளக்க உள்ளார்.

அறிக்கை வெளியாவதற்கு முன்னரே பிளேக்கின் பயணம் திட்டமிடப்பட்டு விட்டது என்றாலும், இலங்கை அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளுடனான சந்திப்பின் போது நிச்சயம் அவர் அறிக்கை விடயத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்வார் என்று நியூயோர்க்கில் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்கு முன்னோடியாக, கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதர் பற்றீசியா புட்டினன், கடந்த வியாழக்கிழமை கொழும்பிலுள்ள ஏனைய நாடுகளின் இராஜதந்திரிகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

இந்தியா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம், நெதர்லாந்து, பிரான்ஸ், கனடா, ஆஸ்திரேலியா, ஜப்பான், நோர்வே, தென்னாபிரிக்கா, தென்கொரியா, சுவிற்சர்லாந்து, இத்தாலி ஆகிய நாடுகளின் முக்கிய இராஜதந்திரிகள் இந்த இரகசிய சந்திப்பில் கலந்து கொண்டுள்ளனர். கொழும்பிலுள்ள ஐ.நா. அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இலங்கையில் நிலைத்து நிற்கக்கூடிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு நிபுணர் குழுவின் அறிக்கை எந்த வகையில் உதவும் அல்லது உதவ முடியும் என்பது தொடர்பாகவே இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

அதேவேளையில், ஐ.நா. பாதுகாப்புச்சபையில் வீற்றோ அதிகாரத்தைக் கொண்டுள்ள ரஷ்யா மற்றும் சீனா ஆகியன, அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் உள்விவகாரங்களில் ஐ.நா. தலையிடக்கூடாது என்று வலியுறுத்தி உள்ளன.

எனினும், அறிக்கை ஐ.நா. பாதுகாப்புச் சபையிலேயோ மனித உரிமைகள் சபையிலேயோ சமர்ப்பிக்கப்படலாம் என்ற அச்சம் கொழும்பில் அரசியல் தலைமையிடம் நிலவுகிறது. அவ்வாறான ஒரு சூழலில் இலங்கையைப் பாதுகாக்கக் கூடிய ராஜதந்திர நடவடிக்கைகளில் கொழும்பு தீவிரம் காட்டி வருகின்றது. அதற்காகவே அறிக்கை தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை விளக்கி ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளுக்கும் கடிதங்களை அனுப்ப ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார். அந்தக் கடிதத்துடன் இணைப்பு ஆவணம் ஒன்றும் அனுப்பப்படும் என்று அதிகாரிகள் கூறினர். அநேகமாக அது, இறுதிப் போர் தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு தயாரித்த வெள்ளை அறிக்கையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் அடுத்த கட்டமாக பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளுக்கும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேரில் சென்று அரசின் நிலைப்பாட்டை விளக்க உள்ளார். போர் முடிவடைந்துள்ள சூழலில் ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கைகளை எடுப்பது இலங்கையின் எதிர்காலத்துக்கும் இன நல்லிணக்கத்துக்கும் பாதிப்பாக அமையும் என்பதால் உலக நாடுகள் அத்தகைய முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கக் கூடாது என்பதே இலங்கை அரசின் வாதமாக முன்வைக்கப்பட உள்ளது என்று ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்குப் பதில் அதற்கு வெளியே பிரச்சினையைக் கையாளும் சிக்கலைத் தவிர்க்கப் பார்க்கிறது இலங்கை என்று புதுடில்லியைச் சேர்ந்த ராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். (உ-ஐ)

## மேல் நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநகரசபையின் ஏற்பாட்டில் ஐந்து மாடிக் கடைத் தொகுதி அமைப்பது தொடர்பாகவும் மற்றும் சபையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் ஊழல், மோசடி, துஷ்பிரயோகம், முறைகேடுகள் தொடர்பாகவும் பகிரங்கமாக விவாதிக்க யாழ். மாநகர முதல்வருக்கு நாம் பகிரங்க அழைப்பு விடுத்து இருந்தோம்.

அதை முதல்வர் ஏற்று, பொருத்தமான தளத்தை அமைத்து விவாதிக்கத் தயார் என்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார். இந் நிலையில் வர்த்தகக் கட்டடத் தொகுதி அமைப்பதைத் தடுக்க எமது கட்சி யாழ். மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளது.

குறித்த வழக்கில் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி மாநகரசபை உறுப்பினர்களும் சாட்சியமளிக்க வேண்டிய நிலை வரலாம் என்ற காரணத்தாலும் வழக்கு முடியும் வரை இது தொடர்பான பல இரகசியங்களை நாம் முன் கூட்டியே வெளியில் விவாதித்து வெளியிடுவது பொருத்தமில்லை எனக் கருதுவதாலும் இது தொடர்பான விவாதங்களைத் தற்காலிகமாக நாம் ஒத்திவைத்துள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம் - என்றுள்ளது. (ஒ-ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

## UK Student Visa
மூலம் செல்பவர்களுக்கான ஆங்கிலப் பரீட்சை (B1)

BATCH MAY 2ND 9.00 A.M

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கில பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British high Commission னால் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது நிறுவனத்தினாலேயே பரீட்சைக்குத் தோற்றவும் முடியும்.

**Settelment Visa Spouse Visa** (கணவன் - மனைவி)

மூலம் UK செல்வதற்கான ஆங்கிலப் பரீட்சை (A1) மிகவும் இலகுவானமுறையில் எமது நிறுவனத்தினால் நடாத்தப்படுகிறது. எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்குத் தோற்றவும் முடியும்.

BATCH MAY 2ND

**Quick Learning Course** திங்கள் - வெள்ளி வரை

## Spoken English With Grammar

புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடனும் நடாத்தப்படுகிறது.

Duration : 1 Month
Rs. 3000.00

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Second Floor, No.15, Sirampiyadi Lane
(Off Stanley Road)
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்) (கொசி Hotel மேலே)
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0714299935

Date: 23 rd May
Morning 9.00 a.m Evening 3.00 p.m

---

## முகவர் தேவை
Elephant House நன் மதிப்புள்ள ஐஸ் கிறீம் நடமாடும் சேவையை நடத்து கின்ற முகவர் ஒருவர் அதனை புதிய முகவர் ஒருவருக்கு விற்பனை செய்ய விரும்புகின்றார்.

இல. 56, மணிக்கூட்டு வீதி, நீராவியடி யாழ்ப்பாணம்.

முகவராக விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்
**0771093300**

---

## BITSMANS
கல்வி நிறுவனம் மானிப்பாய்
O/L DAY CLASS
புத்தம் புதிய
ஆரம்பம் 02.05.2011 திங்கள், 8 A.M

---

## மீனவர்களே! மீனவர்களே! மீனவர்களே!
Sea Bird கடற்புறா

யாழ். மீன் வலை உருவாக்ககம் உங்களுக்கு வேண்டிய மீன் வலைகளை ஜப்பானிய தொழில்நுட்பத்தில், சிறந்த தரத்தில் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகின்றது.
மொத்த வியாபாரிகளுக்கு விசேட விலைக் கழிவு வழங்கப்படும்.

தொடர்பு- பிரதி பொதுமுகாமையாளர்,
யாழ். மீன் வலை உருவாக்ககம்(NEFAD)
647, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
(ஐந்து மாடிக்கு முன்பாக)
தொலைபேசி: 0212224781, 0213211414
Fax- 0212228919

---

## Deutsch, Dutch, French, Italian
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P: 0774842464, 0213216928, 0779927117

---

## ஆர்கி என்ரப்பிறைசஸ்


நம்பமுடியாத விலையில்... குடிசை முதல் தொழிற்சாலை வரையான தேவைகளுக்கு ஏற்ற அளவுகளில் ஜெனறேட்டர்களை ஒருவருட உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

## hp யாழில் ............
Hp Authorized Business Partner

NALIN ல் Laptops சென்ற வாரத்தை விட மேலதிக விலைக்குறைப்புடன் இந்த வாரம்.......
மேலும் பல புதிய வடிவங்களில் Laptops அறிமுகப்படுத்தப்படுகின்றன
முந்துங்கள்

NALIN Information Technologies Pvt Ltd.
**Nalin information Technologies**
இல:-195/2 பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
T.P 021 222 1166, 0777667974

---

## ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய் மானிப்பாய்
யாழ்ப்பாணம்
மாணவச் செல்வங்களே! இறுதிச் சந்தர்ப்பம் உங்களுக்காக்

### O/L DAY CLASS
இறுதிப் பிரிவு ஆரம்பம்- 02.05.2011 [திங்கள்]
கணித ஆசானும் நிர்வாகியும் V.N பத்மநாதன்

---

## YARL BATA வேலை ஆட்கள் தேவை
காலணி வியாபாரத்தில் அனுபவம் உள்ள அனுபவம் அற்ற ஊழியர்கள் தேவை.
நேரில் வரவும்.
**YARL BATA**
இல.11, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

## கட்டடவேலைகள் செய்து கொடுக்கப்படும்
கட்டடங்கள் கட்டுதல், வீடுகட்டுதல், பழைய வீடுகளைத் திருத்துதல், குளியலறைகட்டுதல், சுற்றுமதில் கட்டுதல், மாபிள் பதித்தல், தச்சு வேலைகள், Plumbing, Electrical, Painting, Welding, பூந்தோட்டம் அமைத்தல் அனைத்தும் தரமாகவும் குறைந்த விலையிலும் குறித்த காலத்தில் செய்து கொடுக்கப்படும்.
அழையுங்கள் **0776679564**
AXSHAYACONSTRUCTION, JAFFNA.

---

## SUBRA(14) சித்தங்கேணி / வட்டுக்கோட்டை
யாழ். புகழ் வெற்றித் தேர்வு ஆசிரியர்-
தரம் -04 2012 புலமைப் பரிசில் | சரா .புவனேஸ்வரன்

**வழிகாட்டலில் ஆரம்பமாகிறது**
வாராந்தம்- 06 மணி நேர வகுப்பு, வாராந்தம் 01 பயிற்சிப் பரீட்சை
அனுமதிகள் 01.05.2011 முதல் ஒரு பிரிவில்
50 மாணவர்களுக்கு மட்டும் அனுமதி
இரு நிறுவனங்களிலும் ஆரம்பமாகின்றது. உங்கள் பிள்ளைச் செல்வங்களின் வெற்றிக்கு நாம் என்றும் வழி வகுப்போம். தொடர்புகளுக்கு - 0777157779
O/L DAY CLASS புதிய பிரிவு 02.05.2011 திங்கள் காலை 7 மணிக்கு

---

## சுலபமாக நீங்கள் ரூபா 50,000/- க்கு
மேல் மாத வருமானம் பெற இன்றே முதலீடு செய்யுங்கள்

### ஐஸ் கிறீம் இயந்திரம்



கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா soya / வெனிலா venila / சொக்கலேட் chocolate
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

**WINRICH INTERNATIONAL (PVT) LTD.**
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
Hotlines: 077 391 8870, 077 385 0089

---

## Study In the UNITED KINGDOM
இறுதிச் சந்தர்ப்பம்
**IELTS** தேவையில்லை
G.C.E (O/L) மற்றும் G.C.E (A/L) உடன் கற்கை நெறிகளை தொடலாம்.
**June / July Intakes in Progress**

2011 April 21ல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நடைமுறையின் கீழ்
(1) G.C.E (O/L) அடிப்படை தகுதியுடன் ஆங்கில கற்கை நெறியினை U.K. இல் மேற்கொள்ளலாம் IELTS தேவையில்லை
(2) G.C.E (O/L) / G.C.E (A/L) அடிப்படை தகுதியுடன் Foundation Degree யினை மேற்கொள்ளலாம். இதற்கு City & Guide இன் B1 ஆங்கில அறிவு (மிகவும் இலகுவானது) போதுமானது. IELTS தேவையில்லை.

உங்களுக்கான அனுமதிகள், ஆவணங்களை தயார்ப்படுத்தல் என்பன எங்களால் நேர்த்தியான முறையில் செய்து தரப்படும்.

சகல நாடுகளுக்குமான அனைத்துவித Documentation மற்றும் விசாக்களும் 100% உத்தரவாதத்துடன் அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் பெற்றுத் தரப்படும்.

Jaffna: **BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
Second Floor, No.15, Sirampiyadi Lane (Off Stanley Road)
T.P: 0212224550 (above Cosy Hotel & Near Ariyakulam Junction)

**EXPRESS** (Elsc)
INTERNATIONAL STUDIES & CONSULTANTS
30-1/14, W.A. De Silva Mawatha (Above Hotel Saravana Bavan)
Colombo 6. Tel:2500207 E-mail:elsc_2007@yahoo.com
Robin: 0777 222 422 Selva: 0714 299 935 Web: www.expresslanka.com

---

## e.com
O/L, A/L மாணவர்களுக்கான ICT, GIT புதிய வகுப்புக்கள்
பிரத்தியேகமாக/குழுக்களாக விரும்பிய நேரத்தில் கற்கும் வசதி
Call : 021-7429005, 021-7200902

- Diploma in Microsoft Office 2010
- Diploma in Desk Top Publishing
- Diploma in Computer Networking
- Diploma in Web Designing
- Diploma in Computer Hardware
- Diploma in Video Editing
- Diploma in .Net Programming
- Certificate in Internet & E-Mail



No 95A Temple Road, Nallur, Jaffna. K.K.S Road, Kondavil, Jaffna

---

## சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர் தேவை
தனியார்துறை நிறுவனம் ஒன்றிற்கு துடிப்பும் ஆற்றலுமுடைய சந்தைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் தேவை. பொருத்தமானவர்கள் 07.05.2011 முன் கீழ்க்காணும் முகவரிக்கு தங்கள் சுயவிபரக் கோவையை அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல.4140
மே/பா: உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

## இறைச்சிக் கோழி விற்பனை
CSI
வரணிமிஷன் பாம்
வரணி
மொத்தமாக-280/=
சில்லறை-300/=
தொடர்புகளுக்கு:0779690939
0777715367

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

24 கரட் தங்க நகைகள், ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும்



பிறேம்
நகைமாடம்
No.171, Prem Plaza, Jaffna Road, Manipay.
T.P:0777241485, 0773039572
உரிமையாளர் : இ.பிறேம்குமார்

பிரீத்திகா
கவரிங் அன் அழகு
சாதன நிலையம்
பிறேம் பிளாசா மேல்மாடி,
171, யாழ்.வீதி, மானிப்பாய்.
தொ.பே: 0773039572, 0777241485



Holcim
சங்ஸ்தா சீமெந்து

ஹொல்சிம் சங்ஸ்தா சுபிரி!
கொங்கிறீற்றுக்காகவே விசேடமாக
தயாரிக்கப்பட்ட சீமெந்து

உங்களுக்கும் உறுதி – நாட்டுக்கும் உறுதி

SLS 1253




www.pabcbank.com
(011) 4 667 222



99 % தங்கள் சேமிப்புக் கணக்கின் வட்டி வீதம் எவ்வளவு எனத் தெரியாது...

CHAMPION SAVER

8% சேமிப்புக் கணக்கு

- சேமிப்புகளுக்கு 8% (8.33% வ.தே.வீ) வட்டி
- வட்டியைப் பெற்றுக்கொள்வதுடன் பணத்தேவை ஏற்படும் ஒவ்வொரு தடவையும் சேமிப்பிலிருந்து மீளப்பெறும் வசதி
- Visa குறி உள்ள எந்தவொரு ATM நிலையத்திலும் உங்கள் பணத்தை மீளப்பெறும் வசதி

பான் ஏஷியா வங்கி
உங்கள் சேவைக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவலைப்படுகிறீர்களா?

வயதாகி விட்டதால்
வீரியம் குறைந்து,
விவாக வாழ்க்கையை
இனிதே அனுபவிக்க
முடியாமல்
தவிக்கிறீர்களா?

TRI BULL
TABLETS

MADE IN AUSTRALIA
www.alaris.lk




இன்று முதல் ட்ரைபுல் மாத்திரை
பாவிக்கத் தொடங்குங்கள்.
இன்பகரமான தாம்பத்திய உறவில்
மீண்டும் பிரவேசியுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு 077 3943113

தினமும் இரு மாத்திரைகள் 3-4 வாரங்களுக்கு எடுங்கள்.
ஆண்-பெண் இருபாலாருக்கும் உகந்தது.


**உத்வேகமான தாம்பத்திய உறவுக்கு...**

உங்கள் பாலுறவுப் பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை பெறுவதற்கு திங்கட்கிழமை தோறும் இரவு 9.05 முதல் 9.35 வரை TNL தொலைக்காட்சியிலும் வெள்ளிக்கிழமை தோறும் இரவு 9.15 முதல் 10.00 வரை சிற்றி FM வானொலியிலும் இடம்பெறும் "வளர்ந்தோருக்கு மட்டும்" நிகழ்ச்சியுடன் இணையுங்கள்.

## சீ:பேங் டிரக்டர் சந்தை

இலவச சேவை மற்றும் ஆயுத பொதி

BG
Browns




SIFANG

காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை
**மே மாதம் 2ம் திகதி முதல் 9ம் திகதி வரை**
**கிளிநொச்சி கரடிபோக்கு**
**தேஷான் லங்கா (பிரைவெட்) லிமிடெட்**
Siva - 0777 802112 / Damian - 0773 446673 / Kapilston - 0773 142882



## NNO - இலங்கையில் சரும பராமரிப்பிற்கு முதல்தர மெருகூட்டும் நைற் ஒயில்

நொரிஷிங் நைட் ஒயில் (போஷாக்கான இரவு எண்ணெய்) (NNO) என்பது விசேடமாக தயாரிக்கப்பட்ட சருமத்துக்கு ஈரலிப்பையும், போஷாக்கையும், பொலிவையும் இளமையான தோற்றத்தையும் வழங்கக்கூடிய ஜொஜொபா எண்ணெய் மற்றும் விற்றமின் ஈ அடங்கிய எண்ணெய் ஆகும். இது சருமத்திலுள்ள இயற்கை எண்ணெய்த் தன்மையுடன் சேர்ந்து இளமையான தோற்றத்தை வழங்குவதுடன் 2 – 3 வாரங்களில் கண்களின் கீழ் பகுதியில் ஏற்படும் கரும் புள்ளிகளையும் அகற்றுகிறது.

2-3 வாரங்களுக்குள் நீக்குகின்றது

- உலகெங்கிலும் கோடிக்கணக்கான மக்களின் நம்பிக்கையை பெற்றுள்ளது.
- தினமும் இரவில் முகம், கழுத்து, கைகள் ஆகியவற்றில் பூசவும்.

கண்களுக்கு கீழ்
கருமை படர்வதையும்
சரும வரட்சியையும்
போக்குகிறது.

### NNO வில் உள்ள விசேட அம்சங்கள் என்ன?

- இது ஜொஜொபா எண்ணெய் கொண்டது, இதன் மூலம் சருமத்திலுள்ள இயற்கையான எண்ணெய்த்தன்மையுடன் சேர்ந்து இளமையான தோற்றத்தை வழங்குகிறது.
- சருமத்துக்கு ஈரலிப்பை வழங்கி, சருமத்தை மேலும் வன்மையாக்குகிறது.
- கண்களின் கீழ் பகுதியில் தோன்றும் கரும் புள்ளிகள், கடுமையான கோடுகள் மற்றும் சுருக்கங்களை அகற்றுகிறது.
- இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியது, சுலபமாக பாவிக்கக் கூடியது.
- சுகாதாரமானது, குறிக்கப்பட்ட பாவனை, வசதியான பாவனை முறை.




அனுமதி பத்திரம் வழங்கியவர்
மெகா உயிரியல்விஞ்ஞானம் (அவுஸ்திரேலியா) பிரை லிமிட்டெட்
தொலைபேசி: +94 11 4305366, +94 11 4366576, 077
மின்னஞ்சல்: mega-sl@megawecare.com | www

விலை 570/= ஒரு பெட்டி ஒன்றில் 30 ஆப்ளிகப்புகள் உள்ளன

MEGA We Care
Human Wellness

www.naptbs.com

நாடெங்கிலுமுள்ள சுப்பர் மார்க்கட்களிலும் பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம் | A Baur & Co. Ltd. 1897ஆம் ஆண்டிலிருந்து இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org